# இந்து தருமம்



1966-67

இதழாசிரியர் :

கே. வி. சிவநேசன்

இந்து மாணவர் சங்க வெளியீடு
பல்கலைக்கழகம்
பேராதனை.

11-வது மலர்

தந்தி: 'ஸ்டார்' ச. த. அ. போன்: 277

# றஸ்ஸாக் அன் கோ.

அழகிய பவுண் நகைகள்
தங்கப் பவுண் - வைரங்கள்

## ச. த. அ. றஸ்ஸாக் அன் கோ.

நம்பிக்கையான நகை வியாபாரிகள்
கன்னாதிட்டி, ✱ யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகளைக் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்துதருவோம்.

# உங்கள் டயர்களை

உத்தரவாதத்துடன்
புதுபிப்பதற்குச் சிறந்த
இடம்

# நோர்தேன் இண்டஸ்ரீஸ்

8/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T'Phone: 7158 T'Grams: 'Northind'

உ

# இந்து தருமம்

**1966 – 1967**

UNIVERSITY OF CEYLON

இதழாசிரியர் :

**கே. வி. சிவநேசன்**

★

## 11 - வது மலர்

★

பேராதனைப்
பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க
வெளியீடு

*PLEASE PATRONISE*
*OUR*
*ADVERTISERS*

**எமது விளம்பரதாரர்களை**
**ஆதரியுங்கள்**

*For*

- **CALENDERS**
- **DIARIES**
- **PICTURERS**
- **PLASTIC GOODS**
- **COMMERCIAL, ARTISTIC or Multi-Colour Printing**

*DIAL:* **79141**

**or write to**

**The Meihandan Press Ltd.**

161, SEA STREET,

COLOMBO

Leading Fashionable

&

Guaranteed

Sovereign

Jewellers in

JAFFNA

*VISIT :-*

**NEW JEWEL PALACE**

**68, F, KANNATIDDY,**

**JAFFNA**

T'phone : 7042

தொலைபேசி; 585

**அழகிய**

**பவுண் நகைகளுக்கும்**

**வைரங்களுக்கும்**

புகழ்பெற்ற

ஸ்தாபனம்.

தங்கப்பவுண் நகை மாளிகை

**கே. என். எம்.**

**மீரான் சாஹிப்**

யாழ்ப்பாணம்

★

PHONE: 585

**K. N. M. Meeran Sahib**

SOVEREIGN PALACE

**KANNATHIDDY,**

**JAFFNA**

T'phone: 7049
Telegrams: 'Yarlmetal'

## Yarl Metal Industries

*Manufacturers of:*
Yarl Brand
Aluminium Brass
&
Copper Hollow Ware
Pioneers in
Electro-Deposition
Gold, Silver,
Chromium, Nickel

★

*Factory & Office:*
**250, 252, K. K. S. ROAD,
JAFFNA**

உ

## CHANDRA STORES

DEALERS IN:-
RALEIGH BICYCLE
SEWING MACHINE
ELECTRICAL GOODS
SPARE PARTS Etc.,

★

**67, MADAWALA ROAD,
KATUGASTOTA**

**எல்லாவித பொருட்களும்
குறைந்த விலையில்
கிடைக்குமிடம்**

## சாந்தி ஸ்டோர்ஸ்

78, கொழும்பு ரோட்,
பேராதனை

★

OILMAN GOODS
STATIONERY
SLACKES and SHIRTS
CLASSIC FOOT-WEARS
for LADIES and GENTS

1940 — 1967
27 வருட
இணையற்றசேவை
வட இலங்கையில்
புகழ்பெற்ற
புகைப்பட நிலையம்

## பாரத் ஸ்ருடியோ

எமது ஆதரவாளர்களின்
மகிழ்ச்சியே
எங்கள்
மாண்புமிக்க இலட்சியம்

•

*82/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்*

## BHARAT STUDIO

PHOTOGRAPHERS
**82/1, KASTURIAR ROAD,
JAFFNA**
Dial: 252

Please Patronise

# KANDY TEA STORES

*FOR*

TEXTILES, SHIRTS, SLACKS, SAREES, SUITINGS,
CHILDREN'S READY-MADE GARMENTS,
HIGHGROWN TEA, WRIST WATCHES,
FANCY GOODS, SUNDRIES, ETC.

•

*DEALERS IN:*

**Choicest C. W. E. Textiles for Coupons.**

•

2, 11, YATINUWARA VIDIYA,
**KANDY**

Phone: **7193**

*Space donated by*

# A. K. S.

JEWELLERS

**Jaffna**

*Dial: 519*

**சந்திரா கிரைண்டிங் மில்ஸ்**

அரைப்பாளர், - விற்பனையாளர்.

நவீன
சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட
உயர்ந்த ரக
மிளகாய்த் தூள்,
மசாலைத் தூள் வகைகளும்
சிறந்த கோப்பி, அரிசி,
கடலை, குரக்கன் மா
வகைகளும் சில்லறையாக
வும் மொத்தமாகவும்
இங்கே விற்கப்படும்:

*

**சந்திரா கிரைண்டர்ஸ்**

40, பேராதனை வீதி, கண்டி.

கிளை:

118, நியூ சென்றல் மார்க்கட். கண்டி



நவீன வீட்டுத்-
தளபாடங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

ஸ்ரீ கணேச அச்சகம் அன்-

**பாஷன் பேணிஷிங் பலெஸ்,**

5,7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.






**நீலசோப், பார்சோப்**

பட்டு, பருத்தி, நைலோன்
துணிகளையும்

**பிரகாசமாக சலவை**

செய்கிறது

**மில்க்வைட் சோப் தொழிற்சாலை**

யாழ்ப்பாணம் - தொலைபேசி: 7233



**வீட்டுத்தேவைக்கேற்ற**

- பலசரக்குச் சாமான்கள்
- எண்ணை
- கரி
- புண்ணாக்கு
- சாப்புச் சாமான்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெறவேண்டுமா?
நாடுங்கள் !

**மல்லிகா ஸ்டோர்ஸ்**

59, பிரவுண் றிக் வீதி,
கண்டி

# A.S. Sangarappillai & Bros.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

*162, 164 & 166, Hospital Road,*

JAFFNA

PHONE: **308**

GRAMS: **'SANGABROS'**

*Head Office:*

4 & 6, Adamally Bldgs.
Colombo

Phone: 2221

*Branch:*

GALAHA
DAMBULLA
KANDY
ELUTHUMADUWAL

*Sole Agents:*

ELEPHANT BRAND MINERAL WATERS
THREE STAR PAPPADAM ETC.



*Space donated*

*by*

# Ratha Beedi Industries

**KATUGASTOTA**

*T'grams:* **'RATHA'**

*T'Phone:* **293**

# பீடி புகைக்கும் நண்பர்களே...!

## சபா பீடி ஸ்பெஷல்

# சபாரத்ன பீடி

★ எங்கும் கிடைக்கக் கூடியது

★ எப்பொழுதும் வாங்கக் கூடியது

# சபாரத்ன பீடி

★

உரிமையாளர் :

**K. S. சுப்பிரமணியம் அன் சன்**

சபா பீடி,

ரத்ன பீடி அன் சபாரத்ன பீடி கம்பனி

**கம்பளை.** போன் : 325

*For*

- **CALENDERS**
- **DIARIES**
- **PICTURERS**
- **PLASTIC GOODS**
- **COMMERCIAL, ARTISTIC or Multi-Colour Printing**

*DIAL:* **79141**

**or write to**

## The Meihandan Press Ltd.

161, SEA STREET,

COLOMBO

Leading Fashionable

&

Guaranteed

Sovereign

Jewellers in

JAFFNA

*VISIT :-*

## NEW JEWEL PALACE

**68, F, KANNATIDDY,**

**JAFFNA**

T'phone : 7042

தொலைபேசி; 585

**அழகிய**

**பவுண் நகைகளுக்கும்**

**வைரங்களுக்கும்**

புகழ்பெற்ற

ஸ்தாபனம்.

தங்கப்பவுண் நகை மாளிகை

**கே. என். எம்.**

**மீரான் சாஹிப்**

யாழ்ப்பாணம்

★

PHONE: 585

## K. N. M. Meeran Sahib

SOVEREIGN PALACE

**KANNATHIDDY,**

**JAFFNA**

T'phone: 7049
Telegrams: 'Yarlmetal'

**Yarl Metal Industries**

*Manufacturers of:*

Yarl Brand
Aluminium Brass
&
Copper Hollow Ware
Pioneers in
Electro-Deposition
Gold, Silver,
Chromium, Nickel

★

*Factory & Office:*
250, 252, K. K. S. ROAD,
JAFFNA

---

உ

**CHANDRA STORES**

DEALERS IN:-

RALEIGH BICYCLE
SEWING MACHINE
ELECTRICAL
GOODS
SPARE PARTS Etc.,

★

67, MADAWALA ROAD,
KATUGASTOTA

---

எல்லாவித பொருட்களும்
குறைந்த விலையில்
கிடைக்குமிடம்

**சாந்தி**
**ஸ்டோர்ஸ்**

78, கொழும்பு ரோட்,
பேராதனை

★

OILMAN GOODS
STATIONERY
SLACKES and SHIRTS
CLASSIC FOOT-WEARS
for LADIES and GENTS

---

1940 — 1967
27 வருட
இணையற்றசேவை
வட இலங்கையில்
புகழ்பெற்ற
புகைப்பட நிலையம்

**பாரத் ஸ்ருடியோ**

எமது ஆதரவாளர்களின்
மகிழ்ச்சியே
எங்கள்
மாண்புமிக்க இலட்சியம்

•

*82/1, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்*

**BHARAT STUDIO**

PHOTOGRAPHERS
82/1, KASTURIAR ROAD,
JAFFNA

Dial: 252

Please Patronise

# KANDY TEA STORES

*FOR*

TEXTILES, SHIRTS, SLACKS, SAREES, SUITINGS,
CHILDREN'S READY-MADE GARMENTS,
HIGHGROWN TEA, WRIST WATCHES,
FANCY GOODS, SUNDRIES, ETC.

•

*DEALERS IN:*

**Choicest C. W. E. Textiles for Coupons.**

•

2, 11, YATINUWARA VIDIYA,
**KANDY**

Phone: **7193**

*Space donated*

*by*

# A. K. S.

JEWELLERS

**Jaffna**

*Dial: 519*

**சந்திரா கிரைண்டிங் மில்ஸ்**

அரைப்பாளர், - விற்பனையாளர்.

நவீன
சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட
உயர்ந்த ரக
மிளகாய்த்தூள்,
மசாலைத்தூள் வகைகளும்
சிறந்த கோப்பி, அரிசி,
கடலை, குரக்கன் மா
வகைகளும் சில்லறையாக
வும் மொத்தமாகவும்
இங்கே விற்கப்படும்:

★

**சந்திரா கிரைண்டர்ஸ்**

40, பேராதனை வீதி, கண்டி.

கிளை:
118, நியூ சென்றல் மார்க்கட், கண்டி



நவீன வீட்டுத்-
தளபாடங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

ஸ்ரீ கணேச அச்சகம் அன்ட்

**பாஷன் பேணிஷிங் பலெஸ்,**

5,7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.




**நீலசோப், பார்சோப்**

பட்டு, பருத்தி, நைலோன்
துணிகளையும்
**பிரகாசமாக சலவை**
செய்கிறது

**மில்க்வைட் சோப் தொழிற்சாலை**

யாழ்ப்பாணம் - தொலைபேசி: 7233

**வீட்டுத்தேவைக்கேற்ற**

- பலசரக்குச் சாமான்கள்
- எண்ணெய்
- கரி
- புண்ணாக்கு
- சாப்புச் சாமான்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெறவேண்டுமா?
நாடுங்கள் !

**மல்லிகா ஸ்டோர்ஸ்**

59, பிரவுண்றிக் வீதி,
கண்டி

Sonnenschein

நீடித்து
உழைப்பது



சொனென்ஷீன்

பற்றறி ஒன்றே

ஜெர்மன் தயாரிப்பு

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

# துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.

## The Jaffna Co-operative Stores Ltd.

WE ARE HAPPY TO
ANNOUNCE THAT
WE HAVE BEEN
APPOINTED

★

**Wholesale Dealers**
OF
**C. W. E.**
TEXTILES.

Space

Donated

by

## S. Santhosa Nadar Ltd.

85, Prince Street,

COLOMBO—11.

கமக்காரர் விரும்பி வாங்கும்

தண்ணீர் இறைக்கும் இயந்திரம்

# பெக்சன்

வடபகுதியில் ஏக விநியோகஸ்தர்கள்

## ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்



# Palm Beach

— & —

# Palm Court

*are the most distinguished hotels in the North*

★

## JAFFNA HOTELS Co.,

202, MAIN STREET,

**JAFFNA**

# இந்த மலரில்........


பக்கம்

நமது கருத்து ... ... ... ... ... ... ...

யோகர் சுவாமிகள் காட்டிய அறவழி ... ... ... 1
—சோ. செல்வநாயகம் M. A.

அநுராதபுரத்திலுள்ள சைவக்கோயில்களின் அழிபாடுகள்... 5
—கலாநிதி. கா. இந்திரபாலா

இறைவன் ... ... ... ... ... —'இமையவன்' 8

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு ... ... 9
—பொன். முத்துக்குமாரன் B. O. L.

பிஞ்சும், பழமும் ... ... ... ... —சபா - ஜெயராசா 14

சைவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ... ... ... 15
—செல்வி. இரத்தினேஸ்வரி பாக்கியநாதன் B. A. (Hons)

கந்தனைச் சேர் மனமே ... ... ... ... ... ... 19
—'திமிலைத்துமிலன்'

இராவணன் ... ... ... ... ... ... ... 21
—பண்டிதமணி - சி. கணபதிப்பிள்ளை

உயிர்க்காதலில் ... ... ... ... ... ... 25
— சிதம்பரபத்தினி

பாவை நோன்பு ... ... ... ... ... ... ... 27
—ம. சற்குணம்

இடர்களைந்திட்ட குருவே ... ... ... ... ... 30
—வ. கோவிந்தபிள்ளை

சேரமான் பெருமான் செந்தமிழ் மாலை ... ... ... 31
—கலாநிதி. க. கைலாசபதி

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் ... ... ... 39
—ச. தனஞ்சயராசசிங்கம் B.A.(Hons) C.L.M. Litt.

அப்பர் சுவாமிகள் சமணசைவப் பாலம் ... ... ... 46
—கலாநிதி. ஆ. வேலுப்பிள்ளை

அரனடியாரும் அகப்பொருளும் ... ... ... ... 50
—பொ. பூலோகசிங்கம் B.A.(Hons)D.Phil(Oxon)

சூடிக் கொடுத்தவள் பாடிக் கொடுத்தாள் ... ... 59
— ஆ. சிவநேசச்செல்வன்

திருவாசகம் காட்டும் மணிவாசகர் ... ... ... ... 65
—கார்த்திகேசு சிவத்தம்பி M. A.

ஆலயம் அமைப்போம் வாரீர் ... ... ... ... ... 77
—அ. இராசபூபாலசிங்கம்

இலட்சியப் பாதையிலே ... ... ... ... ... 79
—கு. சண்முகநாதன்

நன்றி ... ... ... ... ... ... ... ... 82

# சங்கக் காப்பாளர்

*போஷகர் ;*

துணைப் பேராசிரியர் த. சிவப்பிரகாசபிள்ளை
B.Sc. (Lond) B.Sc. (Eng. Lond) A.C.G.I, A. M. I. C. E.

*பெருந் தலைவர் :*

பே. கனகசபாபதி M. Sc. (Cey.) M. A. (Cantab)
*(கணிதவியற்றுறைத் தலைவர்)*

*பெரும் பொருளாளர் :*

கோ. சுந்தரமூர்த்தி M. A.

*தலைவர் :*

து. அப்புலிங்கம்

*உப - தலைவர் :*

அ. இராசபூபாலசிங்கம்

*செயலாளர் :*

கு. சண்முகநாதன்

*இளம் பொருளாளர் :*

செல்வி. நா. கணபதிப்பிள்ளை

*ஆசிரியர் :*

கே. வி. சிவநேசன்
செ. சிவஞானசுந்தரம்

*உறுப்பினர்கள் :*

அ. சக்திவேல்
என். நவரத்தினராசா
கே. இரமணானந்தன்
கே. பொன்னையா
என். சிவராசா
பி. அம்பிகாபதி

செல்வி : இ. சௌந்தரேஸ்வரி
,, சி. பாலச்சந்திரேஸ்வரி
,, தி. புனிதவதி
,, ந. லீலாவதி
,, கு. விமலா

# இந்து தருமம்

11-வது மலர்

## நமது கருத்து....

இதுவரை பத்து இந்து தருமங்கள் வெளிவந்துவிட்டன; வெளிவந்தனவற்றுள் பெரும்பாலானவை பல்கலைக் கழகத்தில் இந்து மாணவர்கள் வழிபாடு நடத்துவதற்கு ஓர் ஆலயம் இல்லாத குறையை எடுத்துக்கூறி ஆலயம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்துள்ளன. ஆயினும் சென்ற ஆண்டுவரை ஆலயம் அமைக்கும் விடயத்தில் ஆக்கபூர்வமான செயல்கள் எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் சென்ற ஆண்டு இவ்விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவு கொண்டு இந்து சங்கம் செயற்பட்டது.. அதன் விளைவாக அடர்காடாக இருந்த மலையில் ஆலய ஆரம்ப வேலைகள் தொடங்கின. மாணவர்கள் சிரமதான மூலம் காடழித்து அத்திவாரக்கல்நாட்டு விழாவையும் நடத்தினர். இதற்குத் தேவையான பெருந்தொகைப் பணத்தைப் பல பெரியார்கள் தந்துதவுவதாக வாக்களித்து உதவியும் வருகின்றனர். ஆயினும் இந் நிதி இப்பெருந் தேவையைப் பூர்த்தி செய்யப்போதாததால் சைவப் பெரியார்களும், செல்வந்தர்களும் மனமுவந்து இப் பெருமுயற்சி நிறைவேற உதவி செய்வார்களென எதிர்பார்க்கிறோம்.

மேன்மைகொள் சைவ நீதி உலகமெல்லாம் விளங்க, இட்டகல் ஓங்கி வளர்ந்து வடிவுபெற, செயற்படும் குழு செயலிழக்காது பூரணப் படுத்தும் என எதிர்பார்க்கிறோம்.

''ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்'' என்றுகூறப் பட்டாலும் இன்று ஆலயத்துட் செல்ல அனுமதியற்ற ஒரு

வகுப்பினர் சமூகத்தில் காணப்படுகின்றனர். இறைவன் எல்லோருக்கும் பொதுவானவன். அவனை அன்புடன் வணங்குவதற்கு ஆலயத்துள் செல்வதற்கு இன்ன இன்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்பதில்லை. சிலந்திக்கு வரமளித்த சிவபெருமானும், பண்ணமையப்பாடி வந்த பறைச்சிக்கு பரிசளித்த கண்ணபிரானும் நாம் வணங்கும் தெய்வங்கள். உள்ளத்தில் பக்திகொண்ட அனைவரும் பக்தர்களே.

''ஓடும் உதிரத்தில்—வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் சாதி
தெரிவதுண்டோ''

என்று கூறும் இப்பாடல் எதை வலியுறுத்துகிறது......? சிந்தியுங்கள், சிந்தித்து நம் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துங்கள்.

இந்துக்கலாச்சாரம் இலங்கைப் பல்கலைக் கழகத்திலே ஓர் பாடமாக ஆக்கப்பட வேண்டும் என்று இந்து மாணவர் இதுவரை கொண்டிருந்த ஆவல் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் போன்றோரின் முயற்சியால் நிறைவேறிவிட்டது. அடுத்த ஆண்டு ஆரம்பமாகும் இத் துறையை மாணவர்கள் பயன்படுத்தி சமய உண்மைகளையும், நெறிகளையும் தெளிவாக ஆராய்ந்து மற்றவர்களுக்கும் சமய உண்மைகளை எடுத்து விளக்குவார்களென எதிர்பார்க்கிறோம்.

இவையாவும் நடக்கவேண்டிய நற்கருமங்கள் நடந்தேற இளம் உள்ளங்கள் முயற்சிசெய்யவேண்டும்.

—ஆசிரியர்



# யோகர் சுவாமிகள் காட்டிய அறவழி

சோ. செல்வநாயகம் M. A.

யாழ்ப்பாணத்துக் கொழும்புத்துறைக் கிராமத்தில் துறவுவாழ்க்கை வாழ்ந்து அண்மையில் பூதவுடலை விட்டவர் யோகர் சுவாமிகள். யோகர் சுவாமிகள் பற்றிப் பல கதைகள் உண்டு. அவரது வாழ்க்கையின் முழு வரலாற்றையும் அறிந்தவர் மிகச்சிலராவர். ஆனல் அவரது துறவு வாழ்க்கையை அவதானித்து வந்தோர் பலர் உள்ளனர். பற்றற்ற ஞானியாக வாழ்ந்த யோகர் சுவாமிகளை நாடிய பற்றுமிக்குடையோர் பலர். பயன்கருதிச் சென்ேறர் அன்னரின் ஞான ஒளிச்சுடரினல் விரும்பிய பயனைப் பெற்றுமுள்ளனர். குறிபார்க்கச் சென்றவருமுண்டு. ஆனல் யோகர் சுவாமிகளின் அருட்டிறத்தை உணர்ந்து அவர் காட்டிய அறவழியைப் பின்பற்றி வருபவர் அரிதினும் அரிதாகவே உள்ளனர். தம் உள்ளங்களை அறநெறியிற் 'பக்குவம்' செய்தோரே இத்தகைய உணர்வினை எளிதிற் பெறுவர்.

யோகர் சுவாமிகள் எமது காலத்தில் வாழ்ந்தவர் எனினும் அவரது துறவற நெறியைப் பலர் அறியமாட்டார்; நற்சிந்தனைத் திரட்டிலுள்ள அவரது அரிய பாக்களிலிருந்து செல்லப்பாச் சாமியை அவர் நற்குரவனகக் கொண்டிருந்தார் என்பது தெரிகின்றது. அன்பும் அறனுமியைந்த அவரது உள்ளம் ஏலவே 'பக்குவம்' பெற்றிருந்ததனல் செல்லப்பாச்சாமியின் அருள் நோக்கம் யோகர் சுவாமிகளைத் துறவுநிலை எய்தத்தூண்டியது.

யோகர் சுவாமிகள் பூதவுடலோடு வாழ்ந்தகாலத்தில் பெரும்பகுதியைத் துறவுநிலையிற் கழித்திருக்கின்றர். துறவிகள் என்று கூறிக்கொள்பவர்கள் எல்லோரும் துறவிகள் அல்லர்; காவிதரித்தவர் எல்லோரும் துறவிகளுமல்லர்; உள்ளத்திலே பற்றை எரித்து ஐம்புல நுகர்ச்சியைத் துறந்தோரே உண்மைத் துறவிகள். அத்தகைய துறவுபூண்டொழுகியவர் யோகர் சுவாமிகள். தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறியதற்

கொப்ப மனத்துக்கண் மாசிலனுகி, அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல் நான்கினையும் ஒழித்து அறவாழ்க்கை வாழ்ந்தார். அவரது தூய்மையான உள்ளத்தை உணர்ந்தவர் இதனை அறிவார். அவரது புறநடமாட்டங்கள் எல்லாம் அவரின் திருவிளையாடல்கள்; அவரது புறநடமாட்டங்களை வைத்து அவரை எடைபோடுவோர் தவறுன முடிவுக்கே வர நேரிடும். அவர் சுகத்தை நாடினுர்; சொத்துள்ளவரைச் சார்ந்தார் என்று குறைகூறுவாருமுள்ளனர்; உள்ளத்திற் பற்றற்ற ஒருவருக்குச் சுகம் எது, துன்பம் எது? இரண்டும் ஒன்றேயாம்;

யோகர் சுவாமிகள் கடந்த அரைநூற்ருண்டுக் காலமாக யாழ்ப்பாணத்துச் சைவ அன்பர்களுக்கும் தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் வாழும் தமிழ் அன்பர்களுக்கும் ஓர் ஒளிவிளக்காய் இருந்துவந்தார். மேலைநாட்டிலிருந்து வந்த அன்பர் சிலருக்கும் அவர் உய்யுநெறி காட்டினுர். அவர் காட்டிய நெறிதான் யாது? வள்ளுவனுர் கூறியதற்கிணங்க 'வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியையே' அவர் எமக்குக் காட்டிச் சென்றுள்ளார். தன்னம்பிக்கை, ஒழுக்கம், கடவுள் வழிபாடு, பெரியோரைப் பேணுதல் எனப்பட்ட பல அம்சங்கள் பற்றியும் யோகர் சுவாமிகள் கூறியுள்ளவை எம்மவரை ஈடேற்றுந் தகைமை உடையன.

> 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப்படும்'

என்னும்

வள்ளுவன் கூற்றை அடியொற்றி யோகர் சுவாமிகள் கூறுகின்ருர்;

> 'ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்கமுடையார்
> எல்லாமுடையார்'

என்றும்

'தவத்திலே மேம்பட்டவர்களைக் கூட இந்திரியங்கள் வரம்பு கடந்து இழுத்துச் செல்லுகின்றன. ஆதலால் அவற்றை வெல்வதற்குச் சிவத்தியானஞ் செய்க. அதனுல் மாத்திரந் தான் புலன்களைத் தன்வசப் படுத்தத்தக்கது.'

என்றும்

கூறுகின்ருர்; இதனையே ஒரு செய்யுளிலும் கூறியுள்ளார்;

'ஒழுக்கம் விழும்பந்தரும் தம்பிமாரே
ஓம் என்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
அழுக்காறவா வெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே'

என்றும் அறைகின்றார்.

யோகர் சுவாமிகளின் பழுத்த உள்ளத்தில் இறைவன் குடிகொண்டிருந்தான். இறைவன் திருநாமத்தை அவர் என்றும் வழுத்தியவண்ணமாகவே இருந்தார். ஆண்டவனது அருட்டிறம் பற்றி அவர் கூறுகின்றார்:

'நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே. ஆகையால் நாம் அவருடைய உடைமை; அவருடைய அடிமை.'

'அனைத்துஞ் சிவன்செயல், அவனன்றி அணுவும் அசையாது.'

'தெய்வத்தை நம்பு; முழுமனத்தோடு நம்பு.'

என்று கூறுவதிலிருந்தும் அவரது பிற கூற்றுக்களிலிருந்தும் யோகர் சுவாமிகள் தன்னையே இறைவனுகப் பாவனை செய்துவந்தார் என்பது புலனுகின்றது. அவர் மேலும் ஒரு செய்யுளில்—

'புகல்வதற்கொன்றுமில்லை புண்ணிய பாவமில்லை
இகல்செயும் மனத்தைவென்றே யீசனை வேண்டிநின்றால்
நிகருனக்கியாருமில்லை நீயிதையறிந்து மண்ணில்
இகலுடன் வாழுவாயே இதுதிட மறிகுவாயே.'

என மிகத்திட்பமாக அறிவுறுத்துகின்றார்.

தில்லைப்பதிவாழ் கூத்தன் மணிவாசகனுக்குத் திருப்பெருந்துறையில் திருவருள் நல்கினன். நல்லூர்ப் பதியில் தேரடியில் தேசிகனுய் வீற்றிருந்து யோகர் சுவாமிகளுக்குத் திருவருள் காட்டினர் செல்லப்பாச் சாமிகள். 'தந்தை தாய் மைந்தர் தமர் தாரமென்றடியேன் பந்தத்துட்பட்டுப் பாழாகப் போகாமே சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்தான்' என செல்லப்பாச் சாமிகள் பற்றிப் பல பாடல்களில் உளங் கனிந்திரங்கிக் கூறியுள்ளார் யோகர் சுவாமிகள். இவர் முத்தி

நெறி காட்டிய வித்தகப் பொருளாகச் செல்லப்பாச் சாமியைக் கொண்டார். நல்லூர்ப்பதியில் வீற்றிருக்கும் வேலனே ஞானகுருவாய் நயந்துவந்து 'எட்டுமிரண்டுமறியாதேனுக்கு நல்ல பட்டமளித்தான்' எனவும் கூறுகின்றுர். ஓர் பாடலில்—

'நல்லூர்ப் பதியிலே ஞானநெறிகாட்டச்
செல்லப்பன் என்னும் திருப்பெயரான்—பொல்லாப்பிங்
கொன்றுமே யில்லையென ஓதினன் ஓதயான்
கண்டுமெய்தேறினேன் காண்.

காண்பதெல்லாம் பொய்யென்று காட்டினன் காட்டயான்
வீண்பாவனையெல்லாம் விட்டொழித்தேன்—மாண்புடனே
நீயும் மனத்தில் நினைத்தால் வினையெல்லாம்
மாயும் இதை நீ மதி.'

என்று கூறியுள்ளார்.

சடமாகிய நிலையில் நாம் காண்பதெல்லாம் பொய்யென்பதை யோகர் சுவாமிகள் ஞானகுரவன் மூலம் அறிந்து உணர்ந்து தெளிந்தார். அதே நேரத்தில் வீண்பாவனைகள் செய்வதனையும் விட்டொழித்தார். அவ்வாறே நாமும் சிவன் நாமத்தை உள்ளத்திருத்தி பஞ்சப்புலனைந்தன் நுகர்ச்சியை ஒடுக்கி வாழ்ந்தால் உள்ளொளி பெற்று உய்யமுடியும். இதுவே யோகர் சுவாமிகள் எமக்குக் காட்டிய நெறியாகும்.

> கடவுளை உருவமற்றவன் எனத்தியானிப்பது முற்றிலும் சரியானதே. மற்றக்கொள்கைகளெல்லாம் பொய் என்றுஎண்ணிவிடாதே. அவனை உருவமுடையவன் எனத்தியானிப்பதும் சரியானதே. ஆனல் அவனைக் காணும் வரை உனது பிரத்தியேகமான கொள்கையைக் கைவிடாதே. அப்பால் எல்லாம் தெளிவாகும்.
>
> — விவேகானந்தர்

சங்கக் காப்பாளர்



1966 ★ 1967

முன்வரிசை : கே. வி. சிவநேசன் (ஆசிரியர்), கு. சண்முகநாதன் (செயலாளர்), அ. இராசபூபாலசிங்கம் (துணைத்தலைவர்) எஸ். ஜே. வல்பிட்ட (துணைவேந்தர்), பே. கனகசபாபதி (பெருந் தலைவர்), து. அப்புலிங்கம் (தலைவர்), கோ. சுந்தரமூர்த்தி (பெரும் பொருளாளர்); செல்வி. நாகேஸ்வரி கணபதிப்பிள்ளை (இளம் பொருளாளர்).

பின்வரிசை : உறுப்பினர்கள்; இ. சௌந்தரேஸ்வரி, சி. பாலச்சந்திரேஸ்வரி, அ. சக்திவேல், கே. இரமணனந்தன், பி. அம்பிகாபதி விமலா குணநாயகம், தி. புனிதவதி, ந. லீலாவதி.

# அநுராத புரத்திலுள்ள சைவக் கோயில்களின் அழிபாடுகள்

கலாநிதி கா. இந்திரபாலா

கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கையுடன் சைவ சமயத்தவர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். மஹாவங்ஸ போன்ற வரலாற்றுதார நூல்களில் இங்கு நிலவிய சைவ மதம் பற்றிய குறிப்புகளைவிட கிறிஸ்துவிற்குமுற்பட்ட காலத்துப் பிராமிக் குகைக் கல்வெட்டுக்களில் சைவர்கள் இங்கு வாழ்ந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இலங்கையில் வாழ்ந்த சைவ சமயத்தவர்கள் முற்பட்ட காலத்திலிருந்தே வழிபாட்டுத் தலங்களை அமைத்து வந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. எனினும் மிக முற்பட்ட காலத்தைச் சேர்ந்த சைவக் கட்டிடங்களின் அழிபாடுகள் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை. முற்பட்ட காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்கள் அழியும் பொருட்களாலானவையாகையால் அவற்றின் அழிபாடுகள் தற்காலத்தில் நமக்குக் கிடைக்கவில்லை என்று கூறலாம். மேலும், சரியான முறையில் இலங்கையில் தொல்பொருளாராய்ச்சி இன்னும் நடத்தப்படாத காரணத்தினாலும் நிலையான பொருட்களால் அமைக்கப்பட்ட கோயில்களின் அழிபாடுகள்கூட நமக்குக் கிடைக்கவில்லை எனலாம்.

இலங்கையின் பல பாகங்களில் அநுராதபுரக் காலத்தில் (ஆதி காலம் தொடக்கம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதிவரை) இருந்த சைவக் கோயில்களுள் இரண்டு பிரசித்தி பெற்றவையாக விளங்கின. இவை தென்னிந்தியத் தமிழ்ப் பாடல்களில் குறிப்பிடப் பட்டுள்ள திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமுமாம். இவை பாளி நூல்களாகிய தாது வங்ஸத்திலும் மஹாவங்ஸத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளன என்றுகொள்ள இடமுண்டு. திருகோணமலையில் மஹாஸேன மன்னன் ஆணையின் பேரிலே இடிக்கப்பட்ட தேவாலயம் திருக்கோணேஸ்வரக் கோயிலாக இருக்கலாம். இவ்விரு கோயில்களும் கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல்களில் குறிப்பிடப்பட்டிருந்தும், அவற்றின் அழிபாடுகள் தற்

பொழுது கிடைக்காத முறையில் அவை பிற்பட்ட காலங்களில் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. பழைய கோயில்களைச் சேர்ந்த ஒரு சில தூண்களும் சிற்ப வேலைப்பாடுகளும் விக்கிரகங்களும் மட்டுமே தற்போது கிடைத்துள்ளன.

அனுராதபுரக் காலத்தைச் சேர்ந்த சைவக் கோயில்களின் அழிபாடுகள் நமக்குத் தற்பொழுது கிடைக்கும் இடம் பழைய தலைநகராகிய அநுராதபுரமாகும். இங்கு இருந்த சைவக்கோயில்கள் பற்றிப் பழைய நூல்களில் குறிப்புகள் காணப்படாத காரணத்தினால், இவை பற்றித் தற்காலத்து இலங்கைச் சைவர்கள் பலர் ஏதுவும் அறியாதிருக்கின்றனர்.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அநுராதபுரத்தில் புதைபொருளாராய்ச்சி நடத்திய மேனாட்டு அறிஞர்கள் சிலர், அநுராதபுரத்தின் வடபாகத்தில் சில சைவக்கோயில்களின் அழிபாடுகளை அகழ்ந்து வெளிப்படுத்தினர். இக்கோயில்களுடன் பிராமணர் வசிப்பதற்காகக் கட்டப்பட்ட கட்டிடங்களின் அழிபாடுகளும் காணப்பட்டன. இக்கோயில்களுட் சில சிவன் கோயில்கள்; வேறு சில காளிகோயில்கள்; பல சிவலிங்கக் கற்கள், இவ் வழி பாடுகளிடையே கண்டெடுக்கப்பட்டன. எல்லாக் கோயில்களும் ஒரே அமைப்பினை உடைய சிறு கோயில்கள். இந்த அமைப்பு மிகப் பழைய திராவிடக் கட்டிட முறையைச் சேர்ந்தது. இந்த அமைப்பின் முக்கிய பாகங்களாக அந்தராளம், அர்த்த மண்டபம், கர்ப்பக்கிருகம் ஆகிய மூன்றும் இடம் பெற்றன. இக் கோயில்கள், பிற்பட்ட காலத்துக் கோயில்களைப் போலல்லாது, அடுக்கப்பட்ட அறு கற்களால் கட்டப்பட்டவை. அவற்றின் பாணி அல்லது அமைப்புமுறை சோழர்காலப் பாணிக்கு முற்பட்டது. இவற்றை ஆராய்ந்த கலாநிதி பரணவிதான அவர்கள் இவற்றின் காலம் பிற்பட்ட அநுராதபுரக் காலமெனக் கூறியுள்ளார். இவை கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என்று கூறலாம். இக்காலக் கணிப்பினை உறுதிப் படுத்தும் இரு தமிழ்க்கல்வெட்டுகள் இக் கோயில்களின் அழிபாடுகளிடையே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விரு கல்வெட்டுகளும் இலங்கையில் இது வரை கண்டெடுக்கப்பட்ட மிகப் பழைய தமிழ்க் கல்வெட்டுகளாம். இக் கல்வெட்டுகளின் காலம் சிரிசங்கபோதி என்ற விருதுப்பெயரைக் கொண்ட மன்னனொருவன் காலம் என அவற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. சிரிசங்கபோதி என்ற விருதுப்பெயர் இரண்டாவது அக்கிர போதி மன்னன் காலத்திலிருந்து (கி. பி. 604 — 614)

சிங்கள மன்னர்களால் அபயசலாமேவன் என்ற விருதுப்பெயருடன் மாறி மாறித் தரிக்கப்பட்டன. இவ்வழக்கம் தென்னிந்தியாவில் சோழர் ராஜகேசரி, பரகேசரி ஆகிய விருதுப் பெயர்களையும் பாண்டியர் ஜடாவர்மன், மாறவர்மன் ஆகிய விருதுப் பெயர்களையும் மாறி மாறிப் பயன்படுத்திய வழக்கத்தை ஒத்தது. நமது தமிழ்க் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சிரிசங்கபோதி என்பவன் அநுராதபுரத்தில் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பின் ஆட்சி புரிந்த ஒருவனாவன். இக்கல்வெட்டுகளின் எழுத்து எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அவற்றில் வரும் 'ஈழக்காசு', 'குமாரகணம்' ஆகிய பதங்களும் எட்டாம் நூற்றாண்டுகளுக்குமுன் வழக்கிலில்லாதவை. ஆகவே இக்கல்வெட்டுக்கள் எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச்சேர்ந்தவையாகலாம். அவை, அநுராதபுரத்திலிருந்த சைவக்கோயில் ஒன்றில் ''நிசதி ஒரு திருவமிர்து மொரு நொந்தாவிளக்கும்'' வைப்பதற்காகச்செய்யப்பட்ட ஒழுங்குகளைப் பதிவு செய்வதற்காகப் பொறிக்கப்பட்டவை. இக்குறிப்பிட்ட கோயிலின் நிர்வாகம் தென்னிந்தியக் கோயில்களின் முறையைப் பின்பற்றியே அமைக்கப்பட்டிருந்தது எனத் தோன்றுகிறது. தென்னிந்தியக் கோயில்களின் நிர்வாகம் சம்பந்தமாகக் காணப்படும் நிறுவனமாகிய குமாரகணம் இக்கோயிலின் நிர்வாகத்திலும் இடம்பெற்றிருந்தது. குமாரகணத்தில் அங்கத்துவம் வகித்தவர்களே அநுராதபுரத்துச் செட்டிகளிருவரிடமிருந்து அறுபது ஈழக்காசைப் பெற்று திருவமிர்தும் திருநுந்தாவிளக்கும் கோயிலில் வைப்பதற்கு ஒழுங்கு செய்தவர்கள்.

சோழர் படையெடுப்புகளின் விளைவாக அநுராதபுரம் பாதிக்கப்பட்டு விட இலங்கை இராச்சியத்தின் தலைநகர் என்ற நிலையை இழந்ததும், அங்கிருந்த ஏனைய கட்டிடங்களைப்போலவே சைவக் கோயில்களும் புறக்கணிக்கப்பட்டு அழிந்தன. மீண்டும் அவற்றை திருத்தியமைக்கும் திருப்பணியில் எவரும் ஈடுபடவில்லை யென்றே தோன்றுகின்றது.

காம இன்பத்தில் நமது ஜீவசக்தி அனைத்தையும் வேண்டுமென்றே சிறிது சிறிதாக இழப்பது எவ்வளவு மடத்தனமானது? வஜ்ஜிர சரீரத்தையும் அற்புதமான மூளைசக்தியையும் வளர்த்துக் கொள்ளவே ஈசுவரன் நமக்கு ஜீவசத்தை அளித்திருக்கிறான். அப்படியிருக்கும் ஒன்றை நாம் தேகசம்பந்தமான ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளும் துறையில் வியர்த்தமாக்குவது கடவுளின் ஆக்ஞைக்கு விரோதமாக நடப்பதாகும்.

—மகாத்மா காந்தி

# இறைவன்

- இமையவன் -

வானவெளி மூட்டமினும் கலையவில்லை
வண்ண எழில் பூமலர்கள் வாடவில்லை
தேமதுர நீர் ஓசை குறையவில்லை
தெவிட்டாது இயற்கையினுக் களவே இல்லை.

பூமிதனில் யாம்பிறந்தோம் — பிறப்பெதற்கு?
புசிப்பதற்கும் சுவைப்பதற்கும் புரள்வதற்கும்
பாரின்மிசை வேறுபலன் இல்லையென்று
பகர்கின்ற கூட்டமது ஓர்புறத்தே......

நீரின்மிசை படகுவிட்டோம் நீளநெடு
வானின்மிசை பறக்கவிட்டோம் வானவூர்தி
போனவெலாம்—வருவதெலாம் கண்டுவிட்டோம்
புதிதாகப் பல செய்வோம்—புத்தியென்றால்.

ஆனபல கதையெல்லாம் அளந்துகூறி
அர்த்தமதைக் காண நாம் முயன்றபோதும்
ஏனதுவோ புரியவில்லை எமக்குஇன்னும்
எட்டாத வெளியினுக்கு முடிவும் இல்லை;

முடிவினுக்கும் முடிவுண்டு முழுஉலகும்
முறையுடனே இயங்குதற்கும் மூலம்உண்டு;
படிவமெனக் கண்களால் பார்க்கலாமோ?
பரந்துநின்ற உலகெல்லாம் அவனேயன்றோ?

# "அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு"

பொன். முத்துக்குமாரன் B.O.L.

அன்பு என்பது தொடர்புடையாரைக் குறித்து நிகழும் உள்ள நெகிழ்ச்சி. அது மிருகம், பறவை முதலிய உயிர்களிடத்திற் குறைவாகவும் மக்களிடத்தில் மிகுதியாகவும் காணப்படுவது. விலங்கானது தானீன்ற குட்டி பாலுண்டு வளரும் காலம்வரையும் அதனை அன்போடு பேணுகின்றது. அக்குட்டி வளர்ந்தபின் அதன் தாய் அதனிடத்தில் அன்பு செலுத்துவதில்லை. மனிதனோ அவ்வா றன்றி, தான் ஒருவரை அன்பு செய்யின் அவரது இறப்புவரையும் அதன் பின்னரும் தொடர்ந்து செய்கின்றான். இவ்வாறு மக்கள் தம் வாழ்நாள் முழுவதும் அவர்தம் உள்ளத்தில் அன்பு தொடர்ந்து நிலைத்திருத்தல் இயல்பேயாம். அவ்வியல்புக்குமாறாக ஒருவரது வாழ்வில் அன்பு நிலைத்திருக்கவில்லையாயின் அவரது வாழ்வு மனித வாழ்வன்று, மரவாழ்வே என வள்ளுவர் கூறுகின்றார். மக்கள் தம் மோடு தொடர்புடையவரை அன்பு செய்தல்போல தம் மனத் திற்கும் வாக்கிற்கும் எட்டாத இறைவனையும் அன்பு செய்தல் உண்டு. இறைவனிடத்தில் மக்கள் அன்பு செலுத்தல் அவர்க்குப் பிறப்பிலேயே அமைந்த இயற்கைப்பண்பன்று; முன்னைத்தவத் தாற் பெற்ற அரும்பெரும் பேறேயாகும். மக்களிற் பலர் இறைவ னிடத்தில் தாம் அன்பு கொண்டிருப்பதாகக் கூறுவர். ஆனால் அவர்கள் இறைவனிடமிருந்து யாதாயினும் ஒன்று பெறுதலையே குறியாக உடையர். அதனாலேயே அவர்கள் இறைவனை விரும்பு கின்றனர். அவ்விருப்பத்தையே அன்பென்று அவர்கள் தவறாகக் கருதுவர். உண்மையான அன்புடையார்க்கு ஆறு குணங்கள் உண்டு. சாவிற் சாதல், நோவில் நோதல், பொருள்நலி கொடுத்தல், இன்சொற் கூறல், கூடியிருத்தலை விரும்பல், பிரிவிற்கு வருந்துதல் என்பன அவை. மக்களன்பு உடையாரிடத்தில் இவ்வாறு குணங்களும் குறைவின்றிக் காணப்படும். தெய்வ அன்பு உடையாரிடத்தில் இவற்றுட் பொருந் துவன அமைந்திருக்கும்.

சங்க நூல்களிற் கூறப்படும் தலைவன் தலைவி முதலாயினோர் மக்களன்பிற் றலைசிறந்தவர். பெரிய புராணத்திற் கூறப்படும் நாயன்மார்கள் தெய்வ அன்பு மிக்கவர்கள். அந் நாயன்மார்களுள் கண்ணப்பரிடத்தில் விளங்கிய இறையன்பு ஒப்புயர்வற்றது; பெரியோர் பலராலும் வியந்து போற்றப்பட்டது. இறைவனையே துதித்துப் பதிகங்கள் பாடிய சமயகுரவர்கள் இறைவனை அன்பு செய்த அடியார் சிலரையும் தம் பாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அவர்களுள் கண்ணப்பரது அன்பினை விதந்துபேச ஆசைப்படாதவர் யாரும் இல்லை. அவர்கள் மட்டுமின்றி, வேதாந்த விரிவுரைகள் எழுதிய சங்கராச்சாரியாரும், துறவிற் கொருவராய்த் திகழ்ந்த பட்டினத்தடிகளும் கண்ணப்பரது அன்பின் திறத்தை ஆராமையோடு கூறி ஆசை பெருக்கினர்.

சேக்கிழார் காலத்திற்கு முன் வாழ்ந்த பெரியார்கள் பாடிய பாடல்களில் கண்ணப்பரது அன்புச் செயல்கள் என அவர் தமது வாய் முகந்த நீர் கொண்டு இறைவனை நீராட்டியமையும், எச்சிற் படுத்திய ஊனை நிவேதித்ததும், செருப்பணிந்த காலினால் இறைவனைத் தீண்டியதும், தமது கண்ணை இடந்து அப்பியதுமாகியவையே அறியக் கிடக்கின்றன. இவற்றைக் கொண்டு ஒருவர் அவரது அன்பின் வியத்தகு தன்மையை விளக்கமாக அறிதல் இயலாது. 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாவலர்'ராகிய சேக்கிழார் ஒருவரே கண்ணப்பரது அன்பின் மேன்மையை யாவரும் எளிதில் உணர்ந்து போற்றக் கதை வடிவில் சித்தரித்துக் காட்டியவராவர்.

சேக்கிழார் கூறும் கண்ணப்பர் வரலாற்றில் முதற்கண் வேட்டுவ சேரித்தோற்றமும், கண்ணப்பரது பிறப்பும், அவர் வளர்ந்த சூழலும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றை நாம் படிக்கும் போது வேட்டுவ சேரியினையும் வேட்டுவர் வாழ்க்கையினையும் நேரே காண்பது போன்ற அனுபவத்தைப் பெறுகின்றோம். அது மட்டுமின்றி பின்னே யறியவிருக்கும் கண்ணப்பரது பேரன்பு நிலைக்கு அவர் வாழ்ந்த சூழல் சிறிதும் துணை செய்யாதிருத்தலையும், பிற நாயன்மார்கள் கொண்டிருந்த இறையன்பிற்கு அவர் வாழ்ந்த சூழல் பல வகையில் துணையாயிருந்தமையும் ஒப்பு நோக்கிக் கண்ணப்பரது அன்பினை நினைத்து வியத்தலும் செய்கின்றோம். ஏனைய நாயன்மார்கள் சிவனை வணங்கும் மக்கள் வாழ்ந்த சூழலில் வாழ்ந்தவர்கள். கண்ணப்பரோ சிவனின் திருவுருவத்தையோ சிவனை அன்பு செய்யும் அடியார்களையோ காணாதவர். அத்தகையவர் சற்றும் எதிர்பாராத வகையில் தலையாய பேரன்பர் ஆகின்றார். அன்பில் மூன்று நிலை உண்டு. கேட்டமாத்திரத்லே பரவசப் படுதல் தலையாய அன்பு. கண்ட மாத்திரத்தே பரவசப்படுதல்

இடையாய அன்பு. பயன் பெற்ற மாத்திரத்தே பரவசப் படுதல் கடையாய அன்பு. அச்சமும் அருட்குணமும் அணுவளவும் இல்லாத வேட்டுவருள் ஒருவராய் வாழ்ந்த கண்ணப்பர் சிவன் பெயரைக் கேட்டபோதே பரவசப்படுதலாகிய தலையாய அன்பினை யுடையவராயிருந்தார் என்பது 'கோணமில் குடுமித்தேவர் இருப்பர் கும்பிடலாம்' என்று நாணன் கூற, 'ஆவதென் இதனைக் கண்டிங்களை தொறும் என்மேற்பாரம் போவதொன்றுளதுபோலும் ஆசையும் பொங்கி மேன்மேல் மேவிய நெஞ்சம் வேருேர் விருப்புற விரையாநிற்கும்' எனக் கண்ணப்பர் அப்பொழுது தமக்கு உண்டான அனுபவத்தைக் கூறியதனுல் உறுதிப்படும். மேலும் அவர் காளத்திமலையை நோக்கிச் செல்லும்போது அடையும் அனுபவமும் அவரது அன்பின் மேன்மையைத் தெற்றெனப் புலப்படுத்தும். 'அளவிலா ஆர்வம் பொங்கி மன்பெருங் காதல் கூரவள்ளலார் மலையை நோக்கி என்புநெக்குருகி உள்ளத் தெழுபெரு வேட்கையோடும்' சென்ருர் எனச் சேக்கிழார் அதனைத் தெளிவுறக் காட்டுவர்.

அடுத்து, கண்ணப்பர் சிவலிங்கப் பெருமானை முதன் முதலிற் கண்டதும் அவர் செய்வனவற்றையும் சொல்வனவற்றையும் நோக்கின், முன்னெவரிடத்தும் காணுத வகையில் அமைந்த அவரது அன்பின் வியத்தகு தன்மை புலனுகும். பிற அடியாரெல்லாம் இறைவனைத் தலைவனெனவும் தந்தையெனவும் மதித்து, தம்மினும் உயர்ந்த நிலையில் வைத்து, அன்பு செய்வர். அதனுல் அவரெல்லாம் இறைவன் திருவுருவைக் கண்டதும் கை தலைமேல் வைத்து வணங்கலும், பலகாலும் விழுந்து வணங்கலும், பலகாலும் வலம் வருதலும் செய்து இன்புறுவர். அவர்கள் இறைவன் திருவுருவை அணுகி நிற்கும் நிலை ஒரு மைந்தன் தன் தந்தையை அணுகி நிற்றலையும், ஒரடிமை அல்லது ஒரு பணியாளன் தன் தலைவனை அணுகி நிற்றலையும் ஒத்திருக்கும். ஆயின் கண்ணப்பரோ சிவலிங்கப் பெருமானைத் தம் தலைவனைக் காண்பது போலக்காணவில்லை. தாய் ஒருத்தி நீண்டகாலமாகக்காணுத தன் தனி ஒருமகனைக் காணுவதுபோன்று காண்கின்ருர். அவர் சிவலிங்கப் பெருமானை நேசிப்பது புனிற்ருவானது தன் கன்றினை நேசிப்பது போல்வது. அவர்பின்னே பிரியும் போது 'கன்றகல் புனிற்றுப்போல்வர்' எனச் சேக்கிழார் கூறும் உவமையாலும் இது தெளியப்படும். கண்ணப்பர் சிவலிங்கப் பெருமானைக் கண்டதும், அணுகியதும், அதன் பின் அவர் செய்தனவும் ஒரு தாயானவள் நீண்டகாலமாகக் காணுத தன் தனி ஒரு மகனைக் கண்டதும் அவள் செய்யும் அன்புவகைச் செயல்களை ஒத்துள்ளன. அவர் அப் பெருமானைக் கண்டதும் யாது செய்தார்? 'மோகமாய் ஓடிச்சென்ருர், 'தழுவினுர்,' 'மோந்து நின்ருர்'

'நெடிதுபோதுயிர்த்து நின்றார்' நிறைந்தெழு மயிர்க்கால்தோறும் வடிவெலாம் புளகம் போர்ப்ப, மலர்க்கணீர் அருவிசோர, அடியனேற்கிவர் தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ' என்றார் என சேக்கிழார் அக்காட்சியைத் தமது தெய்வானுபவத்தைக் கொண்டு திறம்படக் காட்டுகின்றார். இச் செயல்கள் பிற அடியார்களது அன்புச் செயல்களில் காணப்படாது கண்ணப்பரிடத்து மட்டும் காணப்படும் ஒப்பற்ற அன்பின் விளைவுகளாகும். அவர் சிவலிங்கப் பெருமானைச் சர்வ வல்லமையுள்ள தலைவனெனவோ கடவுளெனவோ கருதினர் அல்லர்; யாருமற்ற அநாதைச் சிறுமகவாகவே கருதினர்; அதனாலேயே, அரிதிரிகானந்தன்னில் உம்முடன் துணையாயுள்ளார் ஒருவரும் இன்றிக் கெட்டேன்' என்றும், 'இம்மலைத்தனியே நீரிங்கிருப்பதே' எனவும் வருந்துவராயினர்.

அன்புடையார்க்குள்ள ஆறு குணங்களுள் பொருள் கொடுத்தல், இன்சொற் சொல்லல், புணர்வுவத்தல், பிரிவிற் கவறல், நோதல் என்பன கண்ணப்பர் பின்னர்ச் செய்யும் செயல்களில் விளங்கித் தோன்றுகின்றன. அன்புடையவர் தம்மால் அன்பு செய்யப்படுபவருக்கு அவர் விரும்புவனவற்றைக் கொடுத்து மகிழ்விக்கவே துடித்துநிற்பர். அவ்விதத்துடிப்பு கண்ணப்பர் உள்ளத்திலும் எழுகின்றது. ஆனால் அவரோ சிவனை வழிபடும் முறையை முன்பு கண்டாயினும் கேட்டாயினும் அறியாதவர். அத்தகைய அவர் சிவலிங்கப் பெருமானுக்கு விருப்பமானது யாது செய்யலாம் என அறியாது கலங்கி நிற்கையில் அவருடைய தோழனாய் அவருடன் வந்து அங்கு நின்ற நாணன், முன்னொருபோது ஓர் அந்தணன் சிவலிங்க வழிபாடு செய்தமையைத் தான் கண்டான் எனக் கூறியது கண்ணப்பரது ஆர்வப் பயிருக்கு நீர் வார்த்தது போலாயிற்று. அதனால் 'திருக்காளத்தி நாயனுருக்கு இனிய செய்கை' செய்ய எழுகின்றார். இது அன்புடையார்க்குள்ள ஆறு குணங்களுள் பொருள் கொடுத்தல் என்னும் பண்பு கண்ணப்பர்பால் விளங்கியமையை உறுதிப்படுத்துகின்றது.

பின்னர் அவர் அப் பெருமானுக்கு இறைச்சி கொணரச் செல்பவர் பிரியமனமின்றி வருந்துகின்றார். 'இவர்தமைப்பிரிய ஒண்ணாது என் செய்கேன்' என இரங்குகின்றார். 'போதுவர்,' மீண்டு செல்வர்' 'புல்லுவர் மீளப்போவர்' இச் செயல்கள் பிரிவிற் கவறலென்னும் அன்புக்குணம் அவரிடத்து விளங்கியமையைக் காட்டுகின்றன.

அதன்மேல் நிகழும் செய்திகள் கண்ணப்பரது அன்பினில் அமைந்த மற்றொரு தனித்தன்மையைப் புலப்படுத்துகின்றன. தலைவனுடைய பெயரையும் வண்ணத்தையும் ஊரையும் கேட்ட மாத்திரத்தேயே அவனுக்கே பிச்சியான தலைவி ஒருத்தி அதன்

பயனுக அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்து, அகலிடத்தா ராசாரத்தையும் கைவிட்டு, தன்னையும் மறந்து, தலைவன் தாளில் தலைப்பட்டாள்' எனத் திருநாவுக்கரசர் கூறிய தன்மைக்கொப்ப கண்ணப்பரும் சிவலிங்கப் பெருமானைக் கண்டது முதல் தமது உற்ருர் நண்பர் முதலாக எல்லோரையும் மறந்து, தாம் என்ற தன்மையும் முற்றும் அற்றவராய் அன்பே வடிவாய் விளங்கினுர். 'நீட நீ தாழ்த்ததென்னே' எனக் காடன் வினுவ அவ்வினு அவரது செவியிற் செல்லாதிருத்தலும், அவரது அந்நிலையைக் கண்டு 'மயல் மிகமுதிர்ந்தான் என்னே அரும்பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கி வேறுமிழாநின்றுன், பெரும்பசியுடையனேனும் பேச்சிலன், எமக்கும் பேறு தநம் பரிசு உணரான், மற்றைத்தசைபுறத் தெறியா நின்ருன்' என காடனும் நாணனும் கூறுதலும், ஆறுநாளும் துயிலின்றி உணவின்றிச் சோர்வின்றி அவர் சிவனுருக்கினியனவே செய்தலு மாகியவை அவர் அன்பே வடிவாயிருந்தார் என்பதை வலியுறுத்தும்

மேற்கூறிய எல்லாவற்றிலும் மேலாக, பேரன்புடையவரி டத்தே காணப்படுவதாய மற்றொரு பண்பு, தான் என்னும் தன்மை அற்றுப்போதலாகும். கண்ணப்பர் தம்முடம்பு, தம் சுகம் என்னும் எண்ணமற்றதோடன்றி, தாமாம் தன்மையையுமே இழந்தவரானுர். இறைவனுடைய கண்ணுக்கு ஊறுநேர்ந்தமை கண்டதும் தம் கண்ணை இடந்து ஒரு நொடியில் அப்புகின்ருர். அம்பு, வில்லு, ஆடை, அணிபோல அவரது உடம்பும், அவ் வுடம்பிலுள்ள உறுப்புக்களும் அவர்க்கு அந்நியமானவையாயே இருந்தன. அவ்வித அந்நிய பாவனை இருந்தமையாலேயே உறுப் புக்களிற் சிறந்ததாய கண்ணையும் உவகையோடு இடந்தெடுத்த லும், அதனுற் தமக்குக் கண்ணில்லாமையை ஒரு குறையாகக் கருதாமையும் உடையவரானுர்; 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் பொய்யா மொழிக்கு இலக்கியமுமாயினுர்; இங்ஙனமாக கண்ணப்பரை வேட்டுவகுலத்தவர் என்ருே காளைப் பருவத்தினரென்ருே கருதுதலும் மானிடருள் ஒருவரென மதித் தலும் தவறு என்பதை உணர்த்தவும், அவர்தம் செயல்களை வேட்டுவச் செயல்களெனவோ, மானிடச்செயல்களெனவோ, ஆன் மச் செயல்களெனவோ கூறுதலும் தவறு என்பதைத் தெளிவிக்க வுமே இறைவன்:

> 'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும்
> அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவுஎன்றும்
> அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனியவாம் என்றும்
> அவனுடைய நிலை இவ்வாறறி நீ'

என சிவகோசரியார்க்கு அருளிச் செய்வாராயினர்;

# பிஞ்சும், பழமும்...

- சபா. ஜெயராசா -

சின்னக் குழந்தை பிஞ்சுச் சிரிப்பு
சுழலும் 'மாபிள்' சிறிய விழிகள்
கன்னச் சாயல் கசிந்த சிகப்பு
காணும் தெய்வக் காட்சிக் குழந்தை;

பள்ளிப் பருவம் பச்சைக் குறும்பு
துள்ளிப் படிகள் துரத்தும் வேகம்
சொல்லில் துடிப்பு செயலில் தவிப்பு
தெய்வச் சாயல் தளிரும் முகங்கள்;

பல்கலை வாழ்வு படிப்பில் ஆர்வம்
சொல்லில் செயலில் தொடர்ந்த வேகம்
கல்விச் செழிப்பு காதல் நினைப்பு
கலந்த வாழ்வில் கவிந்த சாயல்.

செய்யும் தொழில்கள் சேர்ந்த இன்பம்
கையும் மனமும் கலந்த ஆக்கம்
உய்யும் வேகம் உழைப்பின் வாழ்வு
தெய்வக் கோலம் தொடர்ந்த காட்சி;

வாழ்வில் முதுமை வட்டத் தொடர்ச்சி
ஆழ்வில் வட்டம் அமைத்த சுருக்கம்
நீழ்சொல் லென்னும் நினைப்பு ஓட்டம்
நீங்காக் கனவு நிலைசேர் வாழ்வு;

தெய்வச் சாயல் சேர்ந்த வாழ்வு
தொடர்ந்த இனிமை மனிதப் படிகள்
பொய்மை அல்லப் புனித வாழ்வு
புதிய வேகம் மனதில் வைத்தான்!

# சைவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

செல்வி இரத்தினேஸ்வரி பாக்கியநாதன் B.A.(Hons)

ஆதி அந்தம் இல்லாத சைவ சமயத்திற்குத் தோற்றமும் வளர்ச்சியும் கற்பிப்பது மத உணர்ச்சியைச் சிறிதளவு பாதிக்கத்தான் செய்யும். ஆனல் நம்மிடம் உள்ள இலக்கிய, புராதனச் சான்றுகளைக் கொண்டு ஒரு சிலர் இத்தகைய ஆராய்ச்சியை அறிவுநிலையிலிருந்து செய்கின்றனர். அதனை ஒட்டித்தான் இக்கட்டுரை வரையப்படுகிறது.

— ஆசிரியர்

'சைவம்' என்பது சிவனை வணங்குபவர்களின் சமயத்தைக் குறிக்கிறது. சிவ வணக்கத்தின் தோற்றத்தினை மிகப் பழைய இருக்கு வேதத்திலிருந்து அறியக்கூடியதாகவுளது. 'உருத்திரன்' என்பதும் சிவனைக் குறிக்கிறது. இயற்கையை வழிபட்ட ஆரியர் இயற்கையில் இருபெரும் நிலைகளைக் கண்டனர். ஒன்று ஆக்கநிலை, மற்றையது அழிவு நிலை: உஷை, மித்திரன், சூரியன் என அழைக்கும் பொழுது அவ்வியற்கையின் ஆக்க நிலையையும், அதில் ஓர் அமைதித் தன்மையையும் அவதானிக்கலாம். இவ்வியற்கை சக்திகள் தமக்கு உதவியாக அமைவதை ஆரியர் கண்டனர். ஆகவே இவற்றை 'நன்மை' என்ற பொருள்பட 'சிவன்' 'சம்பு' எனப் பெயரிட்டு அழைத்தனர். அதே சமயம் தமக்கு அழிவை ஏற்படுத்தும் இடி, மின்னல், புயல், முழக்கம் என்னும் இயற்கையின் பயங்கரத் தோற்றத்தினைக்கண்டு 'கோபம்' 'கொடூரம்' என்ற பொருள்பட 'உருத்திரன்' என வழங்கினர். இயற்கையின் இத்தகைய கொடூரத்தினை ஸ்தோத்திரப் பாடல்களினுலும், யாகாதி கிரியைகளினுலும் அமைதிப் படுத்தலாம் என நம்பிக்கை கொண்டனர். ஆரம்பத்தில் இயற்கைத் தோற்றத்தின் இரு நிலைகளே 'உருத்திரன்' 'சிவன்' என்ற கோட்பாட்டிற்கு ஏதுவாயிற்று.

இருக்குவேதத்தில் இவ்வுருத்திரன் உயர்ந்த நிலையில் வைத்து வணங்கப்படுகிறன். அவனைப் பயபக்தியுடன் மக்கள் அணுகினர். அவன் நோய்களைப் போக்கும் வைத்தியன் என்றும், பசுக்களைக் காப்போன் என்றும், மக்களின் இன்னல்களைப் போக்குபவன் என்றும் அவனை விழித்து அநேகம் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

இருக்கு வேதத்தைக் காட்டிலும் உருத்திரனின் குணுதிசையங்கள் மிகத் தெளிவான நிலையில் எஜுர் வேதத்தில்—சதருத்திரீயத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது. அவன் மலைகளில் வசிப்போன் என்ற கருத்தில் 'கிரிஷன்' 'கிரித்ரன்' என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவன் கறுத்தக் கழுத்தினையும், சிவந்த மேனியையும் உடையவன். காடுகள், மலைகளில் அலைந்து திரிபவன்; அவ்வாறு திரியும் சமயங்களில் கள்வர்கள், வழிப்போக்கர்களுக்கெல்லாம் உதவி புரிவோன் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டுள்ளான். 'பசூனும் பதி,' என பசுக்களின் தலைவனுகவும், 'கபர்தின்' என நரைத்த கேசத்தை உடையவனுகவும், 'சிவதனுஷ' அழகிய உடலையுடையவனுகவும், வர்ணிக்கப்பட்டுள்ளான். 'சர்வன்', பவன், சங்கரன் என்ற பெயர்களும் அவனுக்குண்டு. அவன் சுடலை வாசி, பயங்கர உருவினன் என வர்ணிக்கப்பட்டிருப்பதை விட அவனுடைய அமைதியான தோற்றமும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதை சதருத்திரீயத்தின் ஈற்றில் காணலாம். இங்கு உருத்திர கணங்களும் இடம் பெற்றுள்ளனர்.

அதர்வ வேதத்தில் உருத்திரனை இன்னும் உயர்ந்த நிலையில் காணலாம். அவன் நன் மதிப்பை இங்கு பெறுகிறன். அவன் பல பெயர்களால் வழங்கப்படுகிறன். ஒரே தெய்வம் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. ஆகவே இப்பெயர்கள் பல தெய்வங்களைக் குறிக்கின்றனவோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. அதர்வ வேதத்தில் உருத்திரன், நீர், அக்கினி, மரங்கள், செடிகள், மூலிகைகள், பிராணிகள் அனைத்திலும் உள்ளான் என்றும் சந்திரன், நக்ஷத்திரங்கள் இவன் ஆதிக்கத்திற்குள் உள்ளவை என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளன. இங்கு இவன் ஏழு பெயர்களால் வழங்கப்படுகிறன். அவை 'பவன்', சர்வன், பசுபதி, உக்கிரன், உருத்திரன் மகாதேவன், ஈசானன் என்பன.

சம்ஹிதைகளை அடுத்துத் தோன்றிய பிராமணங்களிலும் அவன் பல பெயரால் அழைக்கப்பட்டிருப்பினும் அடிப்படையில் 'உருத்திரன்—சிவன்' என்ற ஒரே தெய்வத்தையே அப்பெயர்கள் குறிக்கின்றன எனப் பிராமணங்கள் தெளிவுபடுத்துகின்றன. சத

பத பிராமணத்திலும், கௌஷிதாகி பிராமணத்திலும் அதர்வ வேதத்தில் கூறப்பட்டுள்ள ஏழு பெயர்களுடன் எட்டாவது பெயராக 'அசனி' என்பதும் இணைக்கப்பட்டுள்ளது. பிராமணங்களில் இவ்வுருத்திரன் அழிவுத் தெய்வமாகவும், பயங்கர உருவினனாகவும், எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகவும் விளங்கிய போதிலும் மக்கள் இவனை அமைதிப் படுத்தின் அமைதியுள்ள நன்மை இயற்றும் தெய்வமாக மாற்றமடைகிறான் என வர்ணிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் படிப்படியாக வளர்ச்சியுற்று வந்த உருத்திரன் - சிவன் சுவேதாஸ்வதார உபநிடதத்தில் அதிக உயர்வை அடைகிறான். உபநிடதங்களில் உயர்ந்த நிலையை வகித்த 'பிரம்மன் ஆத்மன்' போன்ற தத்துவக் கருத்துக்கள் மாறி, சுவேதாஸ்வதார, அதர்வசிரஸ் போன்ற உபநிடதங்களில் 'உருத்திரன் சிவன்' என இடம் பெறுகின்றது. சிவனை உணரின் அனைத்தையும் உணரலாம். அவ்வுணர்வு சொந்த அனுபவ வாயிலாக வருதல் வேண்டும் என்பன போன்ற தத்துவக்கருத்துக்கள் அடங்கியுள்ளன. சுவேதாஸ்வதார உபநிடதம் கூறும் இவ்வுண்மையே பிற்காலத்தில் பக்திநெறி தளைக்க வழிவகுத்தது எனலாம். பகவத் கீதை வாசுதேவன் கிருஷ்ணன்மேல் பக்தி பெருக்கெடுக்கச் செய்தது போல், இவ்வுபநிடதம் 'உருத்திரன் சிவன்' மேல் பக்தி பெருக உதவிற்று. இதேபோல் அதர்வசிரஸ் உபநிடதத்திலும் உருத்திரன் அதி உயர்ந்த நிலையை அடைகிறான்.

இதை அடுத்து மகாபாரதத்திலும், 'உருத்திரன்-சிவன்' முக்கியம் அடைகிறான். இதை மகாபாரதத்தில் வரும் பல கிளைக் கதைகள் விளக்குகின்றன. ஓர் சந்தர்ப்பத்தில் அர்ஜுனன் சிவனைக் குறித்து கடும் தவஞ் செய்து மிக மகிமைவாய்ந்த பாசுபத அஸ்திரத்தைப் பெற்ற வரலாறும், அது போன்ற இன்னோரன்ன கதைகளும் சிவனை அடைக்கலம் புகின் மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட செயல்களையும் சாதிக்கலாம் எனக்குறித்து நிற்கிறது. மகாபாரதத்தில் லிங்க வழிபாடும் இடம் பெறுவதைக் காணலாம். அத்துடன் சிவனின் மனைவியான உமை, பார்வதி, காளி, கராளி, துர்கை என்பன போன்ற பல பெயர்களால் வணங்கப்படுகிறாள். இதுவே பிற்காலத்தில் சைவ மதத்தின் ஒரு கிளையாகி 'சாக்த சமயம்' தோன்ற வழிவகுத்தது எனலாம்.

இவ்விதம் காலத்துக்குக்காலம் வளர்ந்து வந்த 'உருத்திரன் சிவன்' வழிபாட்டில் காலத்திற்கேற்ப பல பிரிவினைகளும் இடம்

பெறலாயிற்று. முதலில் லகுதின் என்பவரால் அமைக்கப்பட்ட தாகக் கருதப்படும் 'பாசுபத சமயம்' உருப்பெறலாயிற்று. இதி லிருந்து இரண்டு வேறுபட்ட பிரிவுகள் தோன்றின. ஒன்று சைவ மதம், என்ற பெயரில் வழங்கலாயிற்று. மற்றையது அதி தீவிர மான, ஒழுகுவதற்கு கடினமான மதமாக உருவாகிற்று. அது முறையே 'காபால' 'காலமுகம்' என அழைக்கப்படலாயிற்று. இவ்விரண்டிற்கும் முரண்பட்டதாகக் கஷ்மீரச் சைவமதம் வளர லாயிற்று.

இவற்றைத் தவிர வீர சைவம் அல்லது லிங்காயத் சைவம் என்ற மதம் தோன்றிற்று. இன்னும் உமை, பார்வதி, பவானி, ருத்திராணி, காத்யாயினி, திரிபுரசுந்தரி எனப்பல பெயர்களால் வழங்கப்பட்ட சிவனின் மனைவிக்கு முக்கியத்துவம் கொடுத்து 'சாக்த மதம்' உருவாகிற்று. இதில் சக்தி வழிபாடு முக்கிய மடைகிறது.

ஏற்கனவே குறிக்கப்பட்ட உருத்திர கணங்களின் தலைவனை முக்கிய தெய்வமாகக் கொண்டு 'காணபத்தியம்' என்ற பிரிவு வளர்ந்து வந்தது. இதில் 'கணபதி' முக்கிய தெய்வமாகக் கரு தப் படுகிறான். அவன் கஷ்டங்களைப் போக்குபவனுதலால் 'விநா யகன்' எனவும் அழைக்கப்படுகிறான்.

இதே கணங்களில் ஒரு கணமாக விளங்கும் 'கார்த்திகே யன் அல்லது கந்தனைத் தெய்வமாகக் கொண்டு 'கௌமாரம்' என்னும் மதம் தளைக்கலாயிற்று. இதில் முருகக் கடவுள் வணங் கப்படுகிறான். அவன் படைத் தலைவன் என்றும், உமை சிவனின் மைந்தன் என்றும் பலவாறு வர்ணிக்கப்படுகிறான்.

இப் பிரிவுகளை விட இருக்கு வேத காலத்திலேயே முக்கிய இடத்தை வகித்த சூரியனை முக்கிய தெய்வமாகக் கொண்டு வணங்கிய மக்கள் 'சௌரர்கள்' என அழைக்கப்பட்டனர். சூரி யனை அவர்கள் கண்கண்ட தெய்வமெனப் போற்றுகிறார்கள். அவனுக்கான பல கோயில்கள் கட்டப்பட்டு அவன் வணங்கப்படு கிறான்.

இப் பிரிவினைகள் அனைத்தும், உருத்திரன், சிவன், என்ற மிகப் பழைய கோட்பாட்டிலிருந்து தோன்றிய வெவ்வேறான சமயப் பிரிவினைகளாகும். இவைகளே சைவ சமயத்தின் தோற்றத்தி லும் வளர்ச்சியிலும் காணப்படும் முக்கிய அமிசங்களாகும். ஆகவே இன்றைய சைவமதம் பல பிரிவினைகளையுடையதாகக் காணப் பட்டபோதிலும் அடிப்படையில் ஒன்றே என்ற ஒருமைக் கொள் கையுடையதாக விளங்குகின்றது.

# கந்தனைச் சேர்மனமே!

- தமிழேந்துமிலன் -

பூத்த மலர்க்கணை கோத்த தனுல்மதன்
போய்ப்பொடியாய் விழுந்தான் — அன்று
கார்த்திகைப் பெண்கள்ம கிழஅ றுமுகன்
கைகளி லேதவழ்ந் தான் — வந்து
சேர்த்துஅ ணைத்தஉ மையவள் கையில்தி
ருமுரு கன்சிரித் தான் — அவள்
பார்த்துஅ ளித்தஅ றிவெனும் வேலன்
பதந் தொழு வாய் மனமே!

கார்த்திகைப் பொய்கைய திலேபி றந்தவன்
கைலையி லேநடந் தான் — வினைக்
கோத்தும லரவன் கூனிக்கு றுகக்கொ
டுஞ்சிறை யிலடைத் தான் — வந்து
ஆர்த்தப ரமனை மாணவ னுக்கிஅ
ரும்பொரு ளுமுரைத் தான் — அந்தக்
கூத்தன்கு மரன்கு ழந்தைமு ருகனைக்
கும்பிடு வாய்மன மே!

மாம்பழம் வாங்கஉ லகைய ளந்தும
னப்பழ மாகிய வன் — கண்டு
தேம்பிய ழுதுதி ருவடி போற்றத்தி
ருப்பழ னியமர்ந் தோன் — விருந்
தோம்பிய கானக்கு றமகள் காதல்உ
ளம்தொடப் பேசியவன் — அந்தத்
தேந்தமி ழாகத்தி கழ்ந்தகு மரனைச்
சிந்தைசெய் வாய்மன மே!

வள்ளியைக் கண்டும ணமயல் கொண்டும
யங்கிக்கி றங்கியவன் — அந்தக்
கள்ளியின் இன்பக்க துப்புச்சி வந்திடக்
கைகளைப் பற்றிய வன் — முத்தின்
வெள்ளெயிற் றுளைவி ழுங்கிக் களித்திட
வேட்டுவ னாகிய வன் — அந்தப்
புள்ளிம யிலேறும் புண்ணியலோலனைப்
போற்றிடு வாய்மன மே!

தேவர்சி றையினை மீட்டவ னுள்ளச்சி
றையினை யும்திறப் பான் — அந்த
மூவர்க்கு மூத்தகு ருமணி யானவன்
மூர்க்கமெ லாம்தவிர்ப் பான் — குறப்
பாவையின் கொங்கைப்ப ணிபடு மார்பன்ப
யனுறு வாழ்வருள் வான் — அந்தக்
காவியங் கண்ணியின் காதல்க திர்காமக்
கந்தனைச் சேர்மன மே!

---

என்னைப் பொறுத்தவரை மது அருந்துவதைவிட விஷத்தைக் குடித்துவிடுவேன். விஷத்தைவிட மது அபாயகரமானது என்று தயங்காமல் கூறுவேன். ஏனெனில் விஷம் மதுவைப்போல் சன்மார்க்கத்தைத் தவறுதல்களிற்கு காரணமாய் இருப்பதில்லை. வெறியினால் நீசத்தனமடைந்து அனேகநாள் கஷ்டப்பட்டுச் சாவதைவிட உடனே செத்துப்போதல் எவ்வளவோ மேலல்லவா.

— **தாமஸ் ஹக்ஸ்லி**

துஞ்சினார் செத்தாரின் வேறல்லார் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர். — **வள்ளுவர்**

# இராவணன்

பண்டிதமணி — சி. கணபதிப்பிள்ளை

ஒரு நாள் ஒருவர் கிளப்பினார்; மற்றொருவர் கிளம்பினார்; கிளப்பினவருக்குப் பெயர் இராவணன்; கிளம்பினவருக்குப் பெயர் வாகீசர்.

இராவணன் தனது ஆகாயரதம் போக்குவரவு செய்தற்குக் கைலாசகிரி தடையாயிருப்பது கண்டு, அதனை உருட்டிப் புரட்டிக் கிளப்பி எறிதற்கு ஒரு தினம் முயற்சி செய்தான்; கிளப்பினான்.

அதேதினத்தில் கைலாசகிரியின் அடியில் ஒரு பக்கத்தே தவஞ்செய்து கொண்டிருந்த வாகீச முனிவருக்கு, கைலாசகிரியின் அடியில் மற்றொரு புறத்தில், பத்து வாய்களிலிருந்து ஒரே ஒரு அழுகுரல், இரங்கத்தக்க வகையில் எழுவது கேட்டது; முனிவரின் உள்ளத்தில் இரக்கங் குடிகொண்டுவிட்டது. கண்மூடி மௌனியாய்ச் சும்மா இருக்க முடியவில்லை. தவம் குலைந்தது; இரக்க மிகுதியாற் குலைந்தது; தவத்தை விட்டுக் கிளம்பினார் வாசீசர்; அழுகுரல் கேட்ட திசையை நோக்கிக் கிளம்பினார்.

கிளம்பினவர் கிளப்புகிறவரைப் போய்ச் சேர்ந்தார்; இராவணன் இருபது விழிகளும் பிதுங்க, பத்து நாக்குகளும் வெளியேதொங்க, கைலாசகிரியின் அடிக்கீழ் நசுங்குண்டு, அலறுவதை அவர் கண்டார். வாகீசருக்குக் கண்கள் கலங்கின; அவருடைய வாயிலும் அழுகை வந்துவிட்டது. பதினொராம் வாயாக அவர் வாயும் அழும்போலிருந்தது. அழுதேவிட்டார். அழுது இரங்கிக்கொண்டே இராவணனுடைய செவித் துவாரங்களை அணுகினார். புத்தி சொன்னார்.

இராவணா, இந்தக் கைலாசகிரியின் அதிபதியான கடவுள், இரக்கமே வடிவமானவர்; தம்மைப் பாடுகிறவர்களுக்கிரங்கிக் கசிபவர்; நீ அவரைப்பாடு; உயிர் பிழைப்பாய் என்று புத்திமதி சொன்னார்; இராவணன் கைலாசபதியைப் பாடினான்.

'இராவணன்' 'நான்முகன் மைந்தன் மகன்-மைந்தன்' 'அத்தன் வேதம் ஆயிரம் வல்லோன்' என்கின்றார் கம்பர். நான்

முகன் பிரமா, அவருடைய மகன் புலஸ்தியர், புலஸ்தியருடைய மகன் விச்சிரவசு, அவருடைய புதல்வன் இராவணன்; இராவணன் தந்தை வழியில் உத்தமப் பிராமணன். தாய் இராக்கத கணத்தவள், மகாசிவபூசாதுரந்தரை; இராக்கத கணம், தேவ கணம் முதலிய பதினெண் கணங்களுள் ஒன்று; மனித கணத்திற் குறைந்ததன்று. இராவணன் தாய் பெயர் கைகசி. அவள் நாள் தோறும் ஆயிரம் சிவலிங்கங்களைப் பூசிப்பவள்;

இத்துணைச் சிறந்த கைகசியின் வயிற்றில் பிரமாவின் பேரனுன விச்சிரவசுவுக்குப் பிறந்தவன் இராவணன்; ஆயிரம் வேதம் வல்லவன்; கைலாசபதியை நினைந்து சாமவேத கீதம் பாடினன். சாமவேதம் ஆயிரம் சாகை கொண்டது; அதுபற்றியே கம்பர் இராவணனை ஆயிரம் வேதம் வல்லோன் என்ருர்; இராவணன் சாமவேதம் பாடினன். கைலாசகிரி உருகிற்று; அங்கேயுள்ள ஆலமரம் முதலிய விருட்சங்கள் கசிந்து கண்ணீர் மல்கின; கைலாசபதியின் இரக்கம் உருகி ஆருய்ப் பெருகியது; கைலாசபதி பாடலுக்கு உருகி இரங்கினுர். இராவணன் முன் தோன்றி, நசுங்குண்ட இராவணனை மேலே எடுத்து, முன்னைய நிலையை அடையச் செய்து அவனுக்கு ஒரு வாளும் நாளும் நல்கி அநுக்கிரகித்தார்; அவன் அவற்றைப் பெற்றுக்கொண்டு சென்ருன்; வாள்—வாட்படை நாள்—நீண்ட ஆயுள்; இவை இராவணன் பெற்றவை.

இராவணன் போக, அவனுக்கு அவனைத் தண்டித்த கைலாசபதியின் உத்தரவின்றிப் புத்தி சொன்ன வாகீசர் அங்கே நின்ருர்; அவரைக் கைலாசபதி நோக்கி, 'வாகீசனே, நீ என் சந்நிதியில் என் உத்தரவின்றிப் புத்தி சொன்னுய்; உன் பாட்டையும் கேட்க விரும்புகின்ருேம்; நீ தென் பூமியிலே திருநாவுக்கரசனுய்ப் பிறந்து தமிழிலே நம்மைப் பாடு' என்று கூறியருளினுர்; வாகீசர் நடுநடுங்கிக்கொண்டு தமிழ் நாட்டிலே நாவுக்கரசரானுர்; ஆனுல், கடவுளின் கருத்தறியாமல் இரக்கம் இரக்கம் என்று புலம்புவதொரு குழுவில் ஆரம்பத்தில் அகப்பட்டார்; அவர் கதை இருக்க; அன்று ஒரே சமயத்தில் கைலாசகிரியிலே இருவருக்குப் பாடம் நடந்திருக்கிறது!, ஒருவன் இராவணன்; மற்றவர் வாகீசர்.

கைலாசகிரி பக்குவர்களுக்குப் பாடம் நடக்கும் இடம்; கைலாசபதி மகா மகோ உபாத்தியாயர் இந்த உபாத்தியாயர் மகா பக்குவர்களுக்குத்தான் நேரே முன்னிலைப்பட்டு நின்று பாடம் நடத்துகிறவர் ஆன்மாக்களுக்குள்ளே பிரளயாகலர் என்று ஒரு பகுதியார் உண்டு. அவர்களுக்குத்தான் நேரே நின்று பாடம் நடத்துகிறவர் என்று சமய சாத்திரங்கள் சொல்லும்; அன்று

இராவணனுக்கு நேரே நின்று பாடம் நடத்தியிருக்கிறார். அவன் பரீக்ஷையிலே தேறி வாளும் நாளும் பெற்றான். அது சாதாரணம் அன்று.

இராவணன் கைலாசகிரியை உருட்டிப் புரட்டத்தலைப்பட்டான் ஆயினும், கைலாசபதியைத் தரிசித்தவன்; அந்தத் தரிசனம் கிடைப்பது அருமையினும் அருமை. அதன் மகிமையை மகத்துக்களே அறிவார்கள்.

ஒரு நாள் சூரபன்மனின் தம்பியாகிய தாரகன் என்னும் அசுரன் ஆறுமுக சுவாமியை யுத்தமுனையில் கண்டான். 'முழுமதியன்ன ஆறுமுகங்களும் முந்நான்காகும் விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும் அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டையார்க்கும் செழுமலரடியுங் கண்டான்' தாரகன். அவன் அந்தக் காட்சியைக் காணும்போது, அவனுக்குப்பின்னே ஒருவர் நின்று அவன் காணும் காட்சியைத் தாமுங் காணுகின்றார்; காணுகின்ற அவருக்கு அக்காட்சியைக்கண்ட தாரகன் மீது மதிப்பு உண்டாய் விட்டது; 'அவன் தவஞ் செப்பற்பாற்றே' என்று தாரகனை வியக்கின்றார் அவர். அப்படி வியக்கின்றவர் யார்? கச்சியப்பசிவாசாரியர். அக் கச்சியப்பசிவாசாரியர் இராவணன் கைலாசபதியைத் தரிசனஞ் செய்து, வாளும் நாளும் பெற்றதைக் கண்டாலோ? கற்பனை செய்து பாருங்கள். பாட்டுவருமானால் கச்சியப்பர் எப்படிப் பாடுவார் என்று பாடிப்பாருங்கள்.

இனிக் கச்சியப்பருங் கைகூப்பி வணங்கும் தமிழ்க்குழந்தை ஒருவர் இருக்கிறார்; மூன்று வயதிற் பாடத்தொடங்கிய குழந்தை அக் குழந்தை. அதன் பெயர் திருஞானசம்பந்தப் பிள்ளை; அப் பிள்ளையிடம் இராவணனைப் பற்றிக் கேட்போம் வாருங்கள்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் வைதிக சைவ உலகமும் தமிழுலகமும் போற்றுகின்ற பிள்ளையார்; அவர் ஞானப் பாலுண்ட பெருமையை ஆதி சங்கரரே பாராட்டி உருகுகின்றார்; அப்படிப் பட்ட பிள்ளையாரிடம் இராவணனைப் பற்றிக் கேட்போம்.

சம்பந்தப் பிள்ளையார் திருநீறு பாடியவர். திருநீறுவது, உலக பந்தமாகிய மலபந்தங்கள் யாவும் நீறித் துகள்படுவதொரு பரிசுத்த நிலை; அதுதான் திருவருள் பிரகாசிக்கும் நிலை 'பராவணமாவது நீறு' என்பது பிள்ளையாரின் திருவாக்கு 'பரா' என்பது திருவருள்; உலக பந்தங்கள் நீறுபட்டநிலை, திருவருளாகிய பரையின் வண்ணமாயிருக்குமென்பது கருத்து. உலக பந்தங்கள் நீறுபட்டதொரு நிலையைக் குறிப்பதொரு சின்னம் திருநீறு.

மலபந்தம் நீறுபட்டவர்களே அணியுந் தகுதி வாய்ந்தது திருநீறு; 'முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்' என்கின்றார் சுந்தரர்; முனிவர்கள் உலக பந்தங்களை முனிந்தவர்கள்; விட்டவர்கள்; அவர்களே தேகம் முழுவதும் நீறுபூசும் பக்குவம் படைத்தவர்கள். அந்த முனிவர்களின் திருமேனியே நீறு பூசுவதற்குரிய தகுதி வாய்ந்தது;

சுந்தரர் முழுநீறு பூசிய முனிவர்களை நோக்கிய கண்ணாலே, சுந்தரரும் வணங்குகின்ற சம்பந்தப் பிள்ளையார் நீறு பூசிய ஒருவரைக் காணுகின்றார். அந்த ஒருவர் யார்? அவர்தாம் அந்தப் பெரியவர்தாம்—இராவணன். 'இராவணன் மேலது நீறு' என்று இராவணனை மதிக்கின்றார். சுந்தரரை, இராவணனைப் பற்றிக் கேட்டால், 'இராவணனின் அடியார்க்கும் அடியேன் யான்' என்று பாடுவார்போலத் தோன்றுகின்றது.

'...............செம்மல் தசக்கிரீவனால்,

நவகோடி சிவாலயங்கள் நணியது இலங்கா நகரம்' என்பது வழங்கி வருவதொரு பாடல். தசக்கிரீவன்—இராவணன். இலங்கையில் நவகோடி சிவாலயங்களை இராவணன் அமைத்தான் என்கின்றது இப்பாடல். இராவணனின் தாய் நாள்தோறும் புதியன புதியனவாக ஆயிரம் ஆயிரம் க்ஷணிக லிங்கங்களைப் பூசிப்பாளானால், நவகோடி சிவாலயங்கள் இராவணன் அமைக்க நேருவதில் நூதனம் இல்லை. இராவணன் காலத்தில் இலங்கை, பார்க்குமிடமெல்லாம் சிவலிங்கம் மலிந்திருந்தது போலும். இராவணன் மகாசிவபக்தன்.

இராவணன் மனைவியாகிய மந்தோதரியும், அவள் புதல்வி என்று கருதப்படும் சீதையும் பஞ்ச கன்னிகைகளின் வரிசையில் எண்ணப்படுபவர்கள். இவர்களைத் தீண்டாத கற்புடைய செழுந்திருக்கள் என்பார்கள். மகா கற்பினளாய மந்தோதரியின் கணவனான இராவணன், கற்பிற் சிறந்த சீதையின் கணவனான இராமனுக்கு எவ்வகையிலுந் தாழ்ந்தவன் ஆதல் ஏலாது. அவனுக்குத் தாழ்வுநேர்ந்த காரணம் புராண முகமாக ஆராயற்பாலது.

'முந்தொரு காலத்தில் மூவுலகந் தன்னில்
வந்திடு முயிர்செய்த வல்வினை யதனாலே
அந்தமின் மறையெல்லா மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருள் தேவரு மருளுற்றார்'

என்பது கந்தபுராணம்.

# உயிர்க் காதலில்...!

## "சிதம்பரபந்தினி"

[1]அன்பின் வழிய துயிரின் நிலையென்
றன்பு மருளு முடையா ரறிவார்
அன்புஞ் சிவமு மொன்றே யெனலா
லின்ப மிதுபோ லினிவே றுளதோ
துன்பந் தொலையும் நிலையும் வழியு
மன்பின் வழியா மதுநீ ரறியீர்
அன்பின் எழிலு மருளின் நலமு
மின்பு மறியார் ரறியார் தமையே.

[2]எம்மு ளுயிரா யுறைவா னிறையே
எண்ணி லிதுநா மறியா வறிவே
எம்மு ளுறைவோ னிறையே யுணரி
னெள்ளி நகையர் டுவரோ பிறரை
தம்மு ளுயர்வா யிழிவா யுளரென்
ருரையா டுவரோ வுயிரு ளுயிராய்
தம்மு ளுறைவோ னருளே யறியி
னறிவா ருயிர்மே லுயிராங் காதல்

[3]நானே பிரம்ம முணரீ ரருளிப்
போனு ருலகி லுயர்மா முனிவர்
தானே தனியாய் தனையே பலவா
யானும் பெணுமா யலியா யுருவாய்
ஊனே யுடலா யுயிரே யுணர்வாய்
வானே நிலனே பிறவே யறியா
[4]தானு வறிவா யகலா வுயிராய்
தானே யுறைவா னிறையே யறியாய்.

---

1. "அன்பின் வழியதுயிர்நிலை" என்பது வள்ளுவர் வாய்மொழி.
2. "அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே" என்பது திருமூலர் திருவாக்கு.
3. "அஹம் பிரமாஸ்மி" அதாவது நான் பிரம்மமாக இருக்கிறேன்." என்பது உபநிடதமஹரிஷிகளின் மகாவாக்கியம்.
4. "ஆனுவறிவா யகலானடியவர்க்கு" என்பது திருவருட்பயனின் திருக் கூற்று.

திழலா யுனையே நிதமா+ டியுனே
யருவா யுறுவா யறிவா யதுபோல்
திழலா யுயிரா யுடலே யிடமா
யுறைவா னொருவ னவனே யிறைவன்
நிகழா துலகு முயிரும் பிறவும்
நிலையா மொருவ னருளே யிலையேல்
புகழா யழலா யுறைவான் விறகி
லழியா வுயிரா யுனுளே யொளிரான்:

[5]ஒன்றே யுளது முயிரு மறியீ
ரன்றே மொழிவா ரிறைநூ லறிவோர்
ஒன்றே பனுவ லுரையோ பலவால்
நன்றே நயவா குரவோ ரிறையை
இன்றே பலவாய் மதமாய் வரினு
மொன்றே நவிலு மகமும் புறமும்
நன்றே நினையீ ரறமே புரியீ
ரும்போ லுணரீ ருயிரே பிறவும்:

அன்பால் அனையு மறியுங் காதல்
தன்பா லெவரே யறியார் காதல்
கண்ணால் கலையே பயிலுங் காதல்
பன்னூல் புகலும் பருவக் காதல்
கொல்லார் உயிரே யருளின் காதல்
நில்லா ருலகே யிறையின் காதல்
எல்லாம் உணரீ ரெதிலே காதல்
உள்ளே யுறைவா னுயிரின் காதல்.

---

5. ''ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி'' அதாவது ''ஒன்றே உள்பொருள். அறிஞர்கள் அதனைப்பலவாறு கூறுவார்கள்'' என்பது இருக்குவேத மாமுனிவர்கள் கண்ட முடிபு.

+ ஆடி என்பது கண்ணாடியைக் குறிக்கும்.

# "பாவை நோன்பு"

ம. சற்குணம்

பாவை நோன்பை மார்கழி நோன்பு எனலாம். மார்கழித் திங்களிற் பனி நீராடி நோன்பு நோற்பதுதான் பாவைநோன்பு. ஆனால் சங்க நுல்கள் மார்கழி நீராடலைத் தைநீராடல் என்கின்றது. நற்றிணை, ஐங்குறு நூறு, கலித்தொகை, பரிபாடல்[1] என்பனவற்றிற் கூறப்படும் தை நீராடல் பிற்காலத்தில் ஆண்டாள் மணிவாசகர் கூறும் மார்கழி நீராட்டத்தின் பழைய சொரூபமேயாம்.[2]

பாவை நோன்பு ஒரு பழைமையான நோன்பு, திருப்பாவையும் திருவெம்பாவையும் தோன்றுவதற்கு முன்பே தமிழர்கள் நெடுங் காலமாக வழிவழியாக அனுட்டித்து வந்த நோன்பு.'தொல்பாவை' என நாதமுனிகளுக்குப்பின் தோன்றிய உய்யக்கொண்டார் குறிப்பிடுகின்றார்.[3] இந்த நோன்பினைப் பற்றிய குறிப்புக்களை இன்று எமக்களிப்பது திருப்பாவையும், திருவெம்பாவையுமேயாகும். ஆண்டாள் அருளிய திருப்பாவை திருமாலின் புகழையும் திருவாதவூரர் அருளிய திருவெம்பாவை சிவனின் புகழையும் பாடுகின்றன. எனவே அவை இரண்டும் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும் பொக்கிஷங்கள் — தமிழ் இலக்கிய பூங்காவிலே தெய்வீக மணம் கமழும் இரண்டு இன்னிசைப் பூங்கொத்துக்கள் எனலாம். 5 வயது தொடக்கம் 9 வயது வரையுள்ள மகளிர் பாவை நோன்பில் ஈடுபடுவர் என்றும், பனிநீராடி மன்மதனைக்குறித்து நோற்கும் நோன்பு 'பாவை நோன்பு' என்றும் பிங்கலந்தை கூறுகின்றது. நல்ல கணவனைப் பெறுவதற்குக் காதற் கடவுள் அருள் புரியவேண்டும் என்பது உட்பொருள். பாவை நோன்பும், காமன் நோன்பும் வேறு வேறு என்பதை ஆண்டாளின் திருப்பாவை விளக்கா நிற்கும்.

நாச்சியார் திருமொழியில் திருப்பாவையும் திருவாசகத்தில் திருவெம்பாவையும் சிறப்பாக மதிக்கப்பெறுவன. அவை இரண்டும் வேறு வேறு தெய்வச் சார்புடையன வெனினும் ஒரே பொதுக் குறிப்புடையன.[4] ஒரே பொதுக்குறிப்பையுடைய ஒரு விடயத்தை எமக்கு எடுத்துரைப்பதில் ஆண்டாளும் வாதவூரரும் விஞ்சி நிற்கின்றனர். வாதவூரர் 20 பாடல்களிற் குறித்துச்

சென்ற நிகழ்சியினை ஆண்டாள் 30 பாடல்களில் எடுத்து இயம்பியுள்ளார். பாவைப்பாடலின் உட்பொருளைச்சற்று ஆழ்ந்துணரும் போது அங்கு காதற்கடவுளை வேண்டிப் பாவை நோன்பு நோற்பதுடன், நல்ல மழைபெய்து நாடு செழிக்கவேண்டும் எனக் கன்னிப் பெண்கள் இறைவனை வேண்டிக்கொள்வதையும் காணலாம். பாவைக்குச் செய்யும் கிரிகைகளையும் பாவைக்குச்சாற்றி நீராடும் முறைகளையும் திருப்பாவையாலறியலாம்.

பாவை நோன்பினைப் பொருளாகக்கொண்ட பாவைப் பிரபந்தத்திற்குத் தமிழ்க்கவிதையில் என்றும் நிலையான ஸ்தானம் உண்டு. தொல்காப்பிய பொருளதிகாரம் 461-ம் சூத்திரத்துக்கு உரை எழுதிச்சென்ற பேராசிரியர் - ''சிறுபான்மை பாவைப் பாட்டும் அம்மானைப் பாட்டும் முதலாயின......'' என்று கூறியுள்ளார். யாப்பருங்கல விருத்தியிலும் சில பாவை பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எனவே பாவை நோன்பும் - அதனைக் குறித்தெழுந்த பாவை பாடல்களும் தமிழ்நாட்டில் நீண்ட நாட்களாகவே இடம் பெற்றிருந்தன என்பது புலனாகும்.

நல்ல கணவரைப்பெற்று நல்வாழ்வு வாழவேண்டும் அதற்கு நல்ல மழை பெய்து நாடு செழித்து வசதி தரவேண்டும் என்பதைப் பாவைநோன்பின் உயிர்நிலைப் பொருளாகக் கொள்ளும் போது 'பாவை நோன்பில்' பழைய காலத்தில் மதக்கொள்கை இணைக்கப்படவில்லை என்பது புலனாகும். ஈரநுண்மணலில் சிறுமியர்கள் இஷ்டம்போற் பிடித்துவைத்த பாவைகள் காலப்போக்கில் இஷ்டதெய்வங்களின் படிமைகளாகவே ஆகியிருக்கவேண்டும். தை நீராடி இஷ்டதெய்வங்களை வணங்கும் 'மார்கழி நோன்பு' அதுவாயின் அதுசைவ வைணவர் இருவருக்கும் உரிய விழாவாகும்.[5]

சங்க நூல்களிலே இடம்பெறும் தை நீராடல் அல்லது பனி நீராடல் அக்காலத்தில் விரதமாகக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் வளர்ச்சியாகவே திருப்பாவை, திருவெம்பாவையில் இடம் பெறும் நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இப்பாடல்களின் ஈற்றில் விளங்கும் 'ஏலோர் எம்பாவாய்' என்னும் தொடர் கொண்டு 'அம்பா ஆடல்' பல்லவர் காலத்திலும் இருந்தது என அறிஞர் கொள்வர். பனிநீராடலையே அம்பா ஆடல் எனச் சங்கநூல்கள் குறிப்பிடுகின்றன. எனவே சங்க நூல்கள் கூறும் அம்பா ஆடலும் திருப்பாவை திருவெம்பாவை குறிப்பிடும் பாவை நோன்பும் ஒன்றே என்பது தெளிவு. பாவை நோன்பு என்பது கன்னிப் பெண்களால் மார்கழி மாதத்தில் தொடங்கப்பெற்று அம்மாதத்துப் பௌர்ணமியோடு முடிக்கப்

பெறும் விரதமாகும்.[6] மணமாகாத பெண்கள் தாய்மார்களைத் துணையாகக் கொண்டு நீராடியதாக ஆசிரியர் நல்லந்துவனார் கூறியிருப்பதால் இது அம்பா ஆடல் எனப் பெயர் பெற்றதாக உரையாசிரியர் பரிமேலழகரும் ஊகம் செய்கிறார். அம்பா என்பதை அம்மா எனக்கொண்டு இந்நோன்பு தேவியின் பொருட்டு நிகழ்த்தப்பட்டது என அறிஞர் மு. இராகவையங்காரும் கருதுகின்றார்.

இளம் கன்னியர் பனி நீராடும்போது இஷ்டப்படி பிடித்து வைத்த நுண்மணற் பாவையிற் பழைய காலத்தில் எந்தக் குறிக்கோளும் மத அடிப்படையில் ஏற்படவில்லை எனலாம். கன்னியர்கள் தனியாகச் சென்று நீராட முடியாது தம் தாய் மாருடன் பனி நீராடி வந்த செய்தியைக்கொண்டு அம்பா ஆடல் பெயர் பெற்றது எனப் பரிமேலழகர் கொண்டபோதும் அம்பா என்பதற்கு உலகத்தாயாகிய தேவி எனப் பொருள் கொள்ளவில்லை. மார்கழி நோன்பு என்பது திருவாதிரைக்குரிய சிவபெருமானது விழாவென்றே கருதுகிறார். அதேபோல வியாக்கியானகர்த்தா ஸ்ரீ-பெரியவாச்சான் பிள்ளையும் மார்கழி நோன்பு அம்பா என்ற உமாதேவியுடன் தொடர்புடையது என்பதைக் குறிப்பிடவில்லை. மார்கழி நீராடிய ஆயர் குலப் பெண்கள் தோழியர்களுடன் நோன்பு நோற்றுக் கண்ணனைத் தலைவனாகப் பெறும் மனோரதத்தை அடையப் பெற்றதாகவே கூறிச்சென்றுள்ளார்· எனவே அம்பா ஆடல் என்பதை உலகத்தாயைக் குறித்துச் செய்யப்பட்ட நோன்பு எனக் கொள்ளாது 'அம்பாவை ஆடல்' எனக் கூறலாம்.[7]

சூடிக்கொடுத்தாரும் மாணிக்கவாசகரும் ஏறக்குறைய சம காலத்தவர் எனக்கருத இடமுண்டு.[8] திருவெம்பாவையும், திருப்பாவையும் பல ஒற்றுமைகள் உடையனவாகத் திகழ்கின்றன. கருத்தொற்றுமை மட்டுமன்றிப் பாசுர வரிகளிலும் ஒற்று

---

1. நற்றிணை - 22ம் பாடல்
   ஐங்குறுநூறு - 84ம் பாடல்
   கலித்தொகை - 59ம் 80ம் பாடல்கள்
   பரிபாடல் - 11ம் பாடல்
2. கோதை அல்லது காதல் வெள்ளம் - பி. ஸ்ரீ பக்கம் - 125
3. திருப்பாவை ஒரு திறவுகோல் - பி. ஸ்ரீ பக்கம் - 1
4. ஆராய்ச்சித் தொகுதி - பேராசிரியர் மு. இராகவையங்கார்.
5. சைவசமய வளர்ச்சி - டாக்டர் - மா. இராசமாணிக்கனார் - பக்கம் - 27
6. A History of Tamil Literature S. Varadaraja Iyar - Page - 284
7. கோதை அல்லது காதல் வெள்ளம் - பக்கம் 130
8. History of Tamil Literature - Page - 291

மையுடன் காணப்படுகின்றன - பாற்கடலிலே பையத்துயின்ற பரமனடிபாடி வைகறையிலே நீராடி நெய் பாலுண்ணுமலும், விழிக்கு மையெழுதாமலும் - கூந்தலில் மலர் முடியாமலும் செய்யத்தகாதனவற்றை நீக்கியும், தீக்குறளைக் கூருமலும் கன்னிப் பெண்கள் அறச்செயல்களையே ஆற்றுவதில் உள்ளம் கவர்ந்து நிற்பர். அவ்வாறு ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி நீராடிஞல் நாட்டிற்குத் தீங்கு நிகழாதென்றும் திங்கள் மும் மாரி பெய்யும் என்றும் திருப்பாவையிற் கூறப்பட்டுள்ளன. அதேபோல திருவெம்பாவையும் கூறுகின்றது. விண்ணுக்கொரு மருந்தை, வேத விழும்பொருளைக் கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்து உள்ளம் நெக்குருகிக் கன்னிப் பெண்கள் நிற்பர். அதனுல் மழை பெய்து நாடுசெழிக்கும் என்பது நம்பிக்கை. எனவே இரு பாசுரங்களும் 'பாவை நோன்பை' அடிப்படையாகக் கொண்டெழுந்து அகச் சமயத்தார் மத்தியில் என்றும் நிலைத்து நிற்கின்றது எனலாம்.

---

# இடர்களைந் திட்டகுருவே!

- வ. கோவிந்தபிள்ளை -

தாங்கொணுத் துயர்சூழ்ந்தென் பிடர்பிடித் துந்திடத்
தஞ்சமொன் றறிகிலாதே
தவயோகர் சுவாமியே! நின்னையான் கண்டுமனத்
தாபம் விலக்கவெண்ணி
மாங்கனி நறுங்கதலி பாக்குவெற் றிலைபூ
மகிழ்வொடு கரத்தேந்தியே
வந்துனருள் ஒளிபரவு நறைகமழ் மலர்ப்பாத
மயலவை தமைப்பரப்பி
நீங்காத விணைவிழிகள் நெஞ்சமுறு கவலைதமை
நிறைதாரை யாய்க்காட்டிட
நின்மலன் பதமுலவு நெஞ்சிஞய்! விழிகளால்
நீடுநீ கூர்ந்து நோக்கி
ஈங்குநீ வந்ததேன் இவைகளைத் தூக்கேகு
இறைவனுன் னில்லமுண்டு
என்றுகூ றிக்கனவி லம்மையைக் காட்டியென்
னிடர்களைந் திட்டகுருவே!



பண்டிதமணியின் கந்தபுராண - தக்ஷகாண்ட உரை வெளியீட்டு விழா

படம்: செ. மகாலிங்கம்



ஆலயம் அமைக்க காடழித்த இளைஞர்கள்



அத்திவாரம் வெட்டும் அன்பர்கள் குழாம்



ஆலய மைதானத்தில் முதற் கூட்டுப் பிரார்த்தனை



ஆலயத்தின் அத்திவாரக்கல் நாட்டிய ஆரம்ப விழா.



ஆலய மைதானத்தில் பொங்கல் விழா.

# இந்து தருமம்

1966 - 1967

## "சிறந்தடியார் சிந்தனைத் தேன்"

(பக்தி இலக்கியம் பற்றிய
சிறப்புக் கட்டுரைகள்)

*

இந்து மாணவர் சங்கம்
இலங்கைப் பல்கலைக்கழகம்
பேராதனை

அட்டையில்....

## நாதரின் நாதாந்த நடனம்

அம்பலத்தாரின் ஆடிடும் அங்கம் அறிவிப்பதென்ன?
ஆக்கத்தின் அதிபதி அவர்; அழிவின் அதிபதி அவர்
அங்கத்தின் அசைவாலும் உடுக்கின் ஒலியாலும் உற்பத்தி
உண்டாகிறது
அழகிய கரத்தின் அபயமுத்திரை அஞ்சலெனை அடியார்க்கு
அறிவிக்கின்றது

கனல் காவிய கரம் கடிய அழிவினைக் காட்டுகின்றது
தாழ்த்திய கரம் தஞ்சமளிக்கும் தாளினைச்சுட்டித்
தெரிவிக்கின்றது
தூக்கிய பாதம் துன்பம் தொலைந்த விடுதலையைக்
குறிக்கின்றது
ஐயனின் ஐஞ்செயல்களும் அழகுற அவர் ஆட்டத்தில்
அமைகின்றன

இத்தனையையும் இனிது எடுத்துரைக்கும் இச்சிறந்த விக்கிரகம் இலங்கையின் இரண்டாவது பெரும் தலைநகராகிய பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட சிவாலயத்தில் இடம் பெற்றது. இது உலகத்திலுள்ள சிறந்த நடராஜ விக்கிரகங் களுள் ஒன்றெனக் கலைவிமர்சகர்களாலே கருதப்படுகின்றது.

# சேரமான் பெருமான் செந்தமிழ் மாலை

கலாநிதி க. கைலாசபதி

பக்தி இயக்கந் திரையெறிந்த பல்லவர் காலப் பகுதியிலே பண்டைய அகப்பொருளுக்குப் புனர்வாழ்வு கிடைத்தது. அவைதிக சமயிகளின் பெண்வெறுப்பு, புலனடக்கம், துறவு முதலாய கட்டுப்பாட்டுக் கருத்துக்களினாலே அமுக்குண்டு, பதுங்கி ஒதுங்கி யிருந்த காதற்பொருள் மானுடக் காதலாகவும் தெய்வீகக் காதலாகவும் நேர்வாழ்வு பெற்றது. அக்காலச் சமய வரலாறு காட்டுஞ் செய்தியிது. புது வாழ்வு பெற்ற அகப்பொருளானது புதிய தோற்றத்தையும் பெற்றது என்பது வியப்புடைத்தன்று. இலக்கிய வரலாற்றினை நாம் உற்று நோக்கும் பொழுது, பல்வேறு காலங்களின் சமுதாயத் தேவைகளையும் உந்தல்களையும் ஒட்டிப் புதிய பொருள் பழைய வடிவங்களிலும், பழைய பொருள் புதிய வடிவங்களிலும் அமைந்து விடுவதைக் காண்கின்றோம். பக்தி இயக்கத்தின்போது பழைய அகப்பொருள் பெற்ற நூதன வடிவங்களிலொன்று உலா. இப்பிரபந்தத்தைப் போலவே கோவை, கலம்பகம் முதலியனவும் புதிய வடிவங்களாம். பாண்டிக்கோவையும் நந்திக் கலம்பகமும் நரரைப்பாடிக் கடவுளரைப் போற்றுகின்றன. ஆயின் உலாப்பிரபந்தத்திற்கு வழிவகுத்து, அடியெடுத்துக்கொடுத்த திருக்கைலாய ஞானவுலா முழுக்க முழுக்க இறைவனையே ஏத்துகின்றது. முதலிலே தோன்றிய உலா என்பது பற்றி ஆதியுலா என இதனைப் பிற்காலத்தவர் போற்றுவர்.

ஞானவுலாவைப் பாடியவர் சிறந்தடியார்களில் ஒருவர்; இல்லறத்திலிருந்து சிவலிங்கத்தால் முக்தி பெற்றவர்; சேக்கிழார் சுவாமிகளாற் பாராட்டப்பெற்றவர்; தம்பிரான் தோழரின் அரிய தோழர்; பாணபத்திரர் போன்ற தமிழ்க் கலைஞரைப் போற்றிய புரவலர்; சேரநாட்டுச் செங்கோலைச் செலுத்தியவர்; செழுமிய சிவபக்திக்கிணையான செந்தமிழ் வித்தகம் வாய்க்கப் பெற்றவர். இத்துணைச் சிறப்புப் பொருந்திய நாயனார் இயற்றிய உலாவும் பிற பனுவல்களும் திருமுறைகள் வரிசையில் வைத்து மதிக்கப்படுவதில் வியப்பில்லையன்றோ.

உலா, பல்லவர் காலத்திலே முகிழ்த்த இலக்கிய வடிவம் எனக் கூறினோம். இவ்விலக்கியத்திற்கு இலக்கணங் கண்டவர்கள் பிற்காலத்துப் பாட்டியல் நூலோர். 'தனது எதிரதாக் காக்கும் கூர்த்த மதிநலத்தினால் காலப்போக்கிற்றோன்றக்கூடிய இலக்கிய வடிவங்களுக்கும் வகைகளுக்கும் தொல்காப்பியர் விதி வகுத்துள்ளார்'[1] என்று நாமொரு பொதுவிதியை ஏற்படுத்திக்கொண்டு, அதனடிப்படையிலே உலாவிலிருந்து சிறுகதைவரை சகல இலக்கிய முயற்சிகளையும் தொல்காப்பியச் சூத்திரங்களைத் துணைக் கொண்டு விளக்க முற்படுவது இன்றும் காணப்படுகிறது. ஆயினும் பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல் முதலாய பிற்கால நூல்களிலேயே உலாவிற்கு வரைவிலக்கணங் கூறப்படுகின்றது. உலாவை, உலாப்புறம் எனவும் முன்னோர் வழங்கினர்.

> 'திருவு லாப்புறம் பாடினேன்,
> திருச்செவி சாத்திடப் பெறல் வேண்டும்'[2]

என்றே சேரமான் திருக்கைலையில் இறைவனை வேண்டியதாகச் சேக்கிழாரும் குறிப்பிடுவர். தெருவிலே ஏழு பருவத்துப் பெண்களிடையே பவனிவந்த சிறந்த நாயகன் ஒருவனைக்கண்டு அவனை அப் பெண்கள் ஏத்துவதாகக் கலிவெண்பாவினால் இயற்றுவது உலா என்பது பொதுவிலக்கணம்.

> 'தெருவினிற் பேதை முதலெழு வோர்கள் திறத்துவகை
> ஒருவனை யேத்துங் கலிவெண்பாத் தான்உலா'

என்று நவநீதப் பாட்டியலும்,

> 'இழைபுனை நல்லா ரிவர்மணி மறுகின்
> மற்றவன் பவனி வரவேழ் பருவம்
> உற்றமா ளர்தொழப் போந்த துலாவாம்'

என்று இலக்கண விளக்கப் பாட்டியலும் உலாவின் இலக்கணங் கூறும். ஒருவகையிற் பார்க்கும் பொழுது இவ்வுலாப் பிரபந்தமானது பல்லவர்காலத்தின் பிற்பகுதியிலே தவிர்க்க முடியாதபடி அமைந்த இலக்கிய வடிவம் என்றே கூறத் தோன்றுகின்றது. அதாவது உலாப் போன்ற ஓர் இலக்கியம் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் சான்றோர் இலக்கியங்களைத் தொடர்ந்து மெல்ல மெல்ல உருவாகி வந்தன; அவை பரிணமித்த வடிவமே உலா. இதனைச் சிறிது விளக்கவேண்டும். சான்றோர் செய்யுட்களைப் பொறுத்தவரை அகத்திணையில் அகனைந்திணைக்குரிய துறை

---

1. Cf. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், (முதலாவது மாநாடு) பக். 3.
2. வெள்ளானைச் சருக்கம், 47

களே அவற்றின் சிறப்புப் பொருளாயமைந்தன. கைக்கிளை, பெருந்திணை ஆகியன சிறப்பற்றனவாகக் கொள்ளப்பட்டன. உதாரணமாக, போரவைக் கோப்பெரு நற்கிள்ளிபாற் றனக்குள்ள காதலை எடுத்துக் கூறும் செய்யுட்கள் சிலவற்றை நக்கண்ணையார் என்னும் பெண்பாற் புலவர் யாத்துள்ளார். அவை கைக்கிளைக் காமக் காதற் பாக்கள் என்று கொண்டு புறத்தில் அடக்கியுள்ளனர் அவற்றைத்தொகுத்த ஆசிரியர்கள். அகனைந்திணையைக் கட்டுப் பாடுகள் நிறைந்த 'தூய' ஒழுகலாறுகக் கொள்ள முயன்றுள்ளனர் சான்றோரிலக்கியங்களைக் கண்டு இலக்கணமமைத்தவர்கள். தொல்காப்பியர் இத் தூய்மை வாதத்திற்குச் சரியான வடிவம் கொடுத்துள்ளார். காதற் கிழவனும் கிழத்தியும் பல வகைகளிலும் ஒத்துள்ளவராயிருத்தல் வேண்டும் என்னும் கோட்பாட்டிற்கு அடிப்படையிலே சமுதாய உணர்வு இருந்தது; அதாவது சமூகத்திலே தலைமக்களாயுள்ளோரே தமக்குள் 'தூய' முறையில் காமக்காதலில் ஈடுபடமுடியும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகத் தெரிகிறது. நடுவணைந்திணைக்குரிய தலைமக்களைக் கூறி. அதன் புறத்தவாய கைக்கிளை பெருந்திணைக்குரிய மக்களைக் கூறுந் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு மேல்வருமாறு இளம்பூரணர் விளக்கங் கூறியுள்ளார்.

'இவர் அகத்திணைக்கு உரியல்லரோவெனின், அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும்; அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக் குறைபாடுடைய ராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவராகலானும், இன்பம் இனிது நடாத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனானும், இவர் புறப்பொருட் குரியராயினர் என்க.''[3] தலைமக்கள் கைக்கிளை பெருந்திணை ஒழுக்கங்களுக்கு உரியராக நேரின் ''அறம் பொருள் இன்பங்கள் வழுவ மகளிரைக் காதலித்தலான்'[4] என்றும் கூறுவர் உரையாசிரியர்.

இவ்வாறு, அறம், பொருள், இன்பம் ஆகியவற்றின் பெயரில் 'தூய'தாகக் கொள்ளப்பட்டுவந்த அகனைந்திணை விதிகளைத் தகர்த்தெறிந்து கொண்டு காதலை வாய்விட்டுப் பாடி மகிழும் நிலைமை பக்தியியக்கத்தின் காரணமாகவும் காரியமாகவும் அமைந்தது. பக்தியியக்கமானது சமுதாயத்திலே சாதி, குலம், பிறப்பு முதலிய வரம்புகளை உடைத்துக்கொண்டு, 'ஆவுரித்துத் தின்றுழ

3. தொல், பொருள். இளம்பூரணம் சூ. 25.
4. ஷை சூ. 20.

னும் புலையரேனும்' அவர் சிவபக்தரெனிற்சிறந்தவரே என்று கூறும் சூழ்நிலையை ஏற்படுத்தியது போல, இலக்கியத்திலே ஏற்பட்டுவந்த பல விதிகளை மீறிப் புதிய சிந்தனைப் படைப்புக் களுக்கு வழி வகுத்தது எனலாம். ஆயினும் இது திடீரென ஏற் பட்ட மாற்றம் எனக் கருதக்கூடாது. புதிதாகத் தோன்றும் இலக்கிய வடிவங்களுக்கும் ஒரு வரன் முறையும் வளர்ச்சி முறையும் உள்ளன.

பல்லவர் காலத்திலே தோன்றிய உலகியற் சார்பான-Secular-நூல்களான நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம் ஆகிய வற்றிலும் அகனைந்திணைக்குப் பொருந்தாத கைக்கிளை சிறப்பாக எடுத்தாளப் பட்டுள்ளது. முத்தொள்ளாயிரத்திலே 'பெண்பாற் கைக்கிளைச் செய்யுட்களே வந்துள்ளன'[5]

இந் நூல்களில் மன்னரைக் கண்டு மகளிர் மையலுற்றுப் 'பேசுவது' போலவே, அரனடியார் பாடல்களிலே சிவனைக்கண்டு பெண்கள் செயலிழந்து கூறும் வார்த்தைகளும் அவர்தம் நிலை யும் காணப்படுகின்றன. வீதியிலே பலிகேட்டு வாசல் ஏறும் பிச்சாடன மூர்த்தியைக் கண்டோ, அல்லது, தில்லையில் நடமிடும் அம்பலக்கூத்தனது கோலங் கண்டோ, நெஞ்சைப் பறிகொடுத்த பெண்கள் பாடும் 'அகப்' பாடல்களின் தருக்கரீதியான வளர்ச்சி நிலையே உலா எனக் கருதலாம்; நீண்ட தெருவில் நடந்த சிவ னுர் தன் நெஞ்சைக் கவர்ந்த செய்தியைப் பெண்ணொருத்தி, அப்பர் தேவாரத்திற் பின்வருமாறு கூறுகின்ருள்;

''தூண்டு சுடர்மேனித் தூநீ றுடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலார்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே றேறி
வெண்காடு மேவிய விகிர்த னுரே''[6]

என்று அப்பரும்,

''கவர்பூம் புனலுந் தண்மதியும் கமழ்சடை மாட்டயலே
அவர்பூம் பலியோ டையம் வவ்வா யானலம் வவ்வுதியே''[7]

---

5. ந. சேதுரகுநாதன், முத்தொள்ளாயிரம், (முன்னுரை) பக். 14.
6. 6. 35. 1. Cf. 6. 45. 3.
7. 1. 63. 6.

என்று சம்பந்தரும் பலிகேட்டுவந்த பெருமான் பெண்கள் உள்ளம் கொள்ளை கொண்டதாகக் கூறுவர். திருப்பைஞ்ஞீலி என்னும் தலம் சென்ற சுந்தரர், பலிக்கு எழுந்தருளும் பெருமான் திருவடியைக் கண்ட மகளிர் மையல்கொண்டு வினவிய கூற்றுகப் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார். 'நாங்கள் கொண்டு வந்த பிச்சையை இடமாட்டாதவராயும், போகமாட்டாதவராயும் இருக்கின்றோம்' என்று பெண்கள் 'வாய்விட்டுக்' கூறுவதாக அமைந்தது பாடல்:

''செந்த மிழ்த்திறம் வல்லி ரோசெங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்குமி தென்கொ லோபலி
மாற்ற மாட்டோ மிடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்த நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனி யோ சொலும்
ஆரணீய விடங்கரே' [8]

கைக்கிளை என்பது ஒரு மருங்கு உளதாய கேண்மை என்று கூறப்படும். சிவன் தன்னுடைய காதலை வெளியே காட்டாமற் பெண்ணாகிய தனது நெஞ்சைக் கொண்டதாகப்பாடும் பெண்ணை அப்பர் பாடலிற் காணலாம்.

''கள்ளத்தை மனத்தகத்தே கரந்து வைத்தீர்
உள்ளத்தை நீர் கொண்டீர் ஓதல் ஓவா
ஒளிதிகழும் ஒற்றியூ ருடைய கோவே'' [9]

இவ்வாறு அமைந்த கைக்கிளைத் துறைப் பொருளை எடுத்துக்கொண்டு அதனை நீட்டி வளர்த்துத் தனியிலக்கிய வடிவமாக்கிய பெருமையும் திறமையும் சேரமானுக்கு உரியது. அகத்துறைகள் நானூற்றை எடுத்துத் தொகுத்துத் தெய்வீக நூலாம் திருச்சிற்றம்பலக் கோவையைத் திருவாதவூரடிகள் செய்தது போலவும், பெருந்திணைக்குள் அடங்கும் மடலூரும் நிகழ்ச்சியை எடுத்துச் சிறிது மாற்றிப் [9a] பெரிய திருமடல், சிறிய திருமடல் ஆகியவற்றைப் படைத்த திருமங்கை மன்னன் போலவும் நாயகன் வீதியில் உலாப் போவதைக் கண்ணுற்ற மகளிர் மால் கொள்ளும் பெண்பாற் கைக்கிளைப் பொருளைப் பக்தியும் ஞானமும் கலந்த பனுவலாக்கியுள்ளார் சேரமான் பெருமான்:

---

8. 7. 36. 4.

9. 6. 45. 3.

9a. பெண்கள் மடலேறுவது சரியன்று என்ற பழைய கொள்கையை மீறுகின்றார் மங்கை மன்னர். Cf, ராய. சொக்கலிங்கன், காவேரி, பக். 39.

பொதுவாகப் பல்லவர் காலத்திலே காதற் பொருள் பெற்ற எழுச்சியின் பயனாக நாயகன்-நாயகி பாவம் இலக்கிய வடிவம் பெற்றதல்லவா? அந்தப் பின்னணியிலேயே உலா, மடல் போன்ற பிரபந்தங்களை நாம் நோக்கவேண்டும்.

பெருங்கவிஞர் பலரது கவிதைகளை—குறிப்பாக நெடும் பாடல்களை—நோக்கும் பொழுது, ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் உளக்காட்சியோ, பேரனுபவமோ உருவக மாக அமைந்து, கவிதையை வழிநடத்திச் செல்வதைக் காண லாம். சுவர்க்கத்தைப் பிரமாண்டமான உருவகமாகக்கொண்டு சுவர்க்க நீக்கம், சுவர்க்க மீட்சி ஆகிய காப்பியங்களைப் பாடினன் மில்தன். நரகம், சுவர்க்கம் ஆகியவற்றைப் பேருருவமாகக் கொண்டே இத்தாலியக்கவி தாந்தேயும் காப்பியஞ் சமைத்த னன். பிரான்சிஸ் தொம்ஸன் என்னும் கத்தோலிக்க சமயக் கவிஞனும் தனது Hound of Heaven எனப்படும் நெடும்பாட லில் அத்தகைய உருவகம் ஒன்றனையே அமைத்தான். பொது வாகக் கவிஞர் எல்லாரும் உவமை, உருவகம் முதலிய அணி களைக் கையாள்பவரேனும், சமயக் கவிஞர்களுக்கு உருவகமே ஆழ்ந்த அனுபவப் பொருளாகவும் அமைந்துவிடுகின்றது. உதா ரணமாக, திருப்பெருந்துறையிலே தனக்குக் காட்சிதந்த வள் ளல், சிவபுரத்தில் மன்னரைப் போல வீற்றிருப்பதாகவும், அவரைச் சுற்றித் தேவரும் கணங்களும் ஓயாது வேதகோஷ மிட்டுக்கொண்டிருப்பதாகவும், அந்தப் பேரவைக்குள்ளே தானும் சென்று சேவித்து அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழ' வேண் டும் என்றும் உண்மையில் நம்பிய மணிவாசகர்தான் தமது நூலை ஆத்மாவின் பெருயாத்திரையாகக் காணும்படி பாடினர். மேவிய மணிச்சிவிகையில் ஊர்ந்து வந்த அமாத்தியரான வாத ஆரர்,

''தேவர்பர வும்பரமர் தெய்வசபை கண்டார்''10 என்றே கடவுள் மாமுனிவரும் குறிப்பிட்டுள்ளனர்.

திருக்கைலாயத்திலே குடிகொண்டிருக்கும் சிவபுரத்தரசர் அங்கு தமக்குக் காட்சி அருளும்படி பணிந்த பக்தர்களுக்கு இரங்கிப் பவனிவருவதைப் பெரியதொருமானதக் காட்சியாக (Vision) அனுபவித்துப் பாடியுள்ளார் சேரமான். அக்காட்சியும் பேருருவமாக அமைந்தமையால் நூலும் முழுமைபெற்ற இலக் கிய வடிவமாக அமைந்தது. கதையொன்றனை எடுத்துத் திரைப் படத்திற்கு வேண்டிய திரைக்கதையைக் காட்சிகளாகத் தீட்டும் ஆசிரியன் போலச் சிவபுரத்திலே பவனிவரும் பெருமானின்

10. திருவாதவூரடிகள் புராணம் செய். 80

திருக்கோலம் முழுவதையும் நன்குக் காணும் வகையில் உலாக் காட்சிகளாக அமைத்துள்ளார் நாயனர். சுருங்கக் கூறின் கைலை மலையே சிவபுரமாகிவிடுகிறது; இயற்கையும் பிரபஞ்சமும் அதனுள் அடங்கிவிடுகின்றன.

''சீரார் சிவலோகந் தன்னுட் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயி லுள்ளிருப்ப—வாராய்ந்து
செங்க ணமரர் புறங்கடைக்கட் சென்றீண்டி
எங்கட்குக் காட்சியருள் என்றிரப்ப'' 11

என்று நூலிற்கான தோற்றுவாயைக் கூறுகின்றார் கவிஞர். இவ் வேண்டுகளுக்குச் செவிசாய்த்து இறைவனும் பவனி வருகிறான். அத்தருணத்திலேயே ஏழ்பருவத்தைச் சேர்ந்த 'உருத்திர'கணிகை யர் அங்கண்ணரைக் கண்டு அகமுருகுகின்றனர். சிவபுரம் ஒரு நகரம்: அந்நகரில் ஒரு திருக்கோயில்; அக்கோயிலில் வீற்றி ருக்கும் சிவபிரான் வீதிவலம் வருவதானது, உலகியற் காட்சி யைத் தழுவியுள்ளது. அரசனக இருந்த பெருமாக்கோதையார் உலாக்காட்சிக்கு உரியவராகவும் உள்ளவர் அன்றே. தமது சொந்த அனுபவத்தையும் தெய்வீகத் தேனிலே குழைத்துத் தந்துள்ளார் எனலாம்.

வீதிவருபவர் சிவன். எனவே சிவபுரத்து வீதிகளும், அவ் வீதிகளிற் காணப்படும் மாட மாளிகைகளும் சிவனையே நினை வூட்டும் வண்ணம் அமைந்துள்ளன. காதன் மடப்பிடியோடும் களிறுவருவதைக் கண்ட நாயனர், மாதர்ப் பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் மானதக் காட்சியாகக் கண் டுருகுவது போலச் சிவபுரத்துத் தெருக்களும் மாளிகைகளும் சிவனையே உணர்த்துகின்றன.

''வானநீர் தாங்கி மறையோம்பி வான்பிறையோ
டீனமில் சூல முடையவா—யீனமிலா
வெள்ளை யணிதலால் வேழத் துரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய—வொள்ளிய
மாடம்......'' 12

ஞான உலா என்னும் பேருருவகத்திலே இது ஓர் உருவகத்துளி என்று கூறலாமன்றே. இச்சிறு உருவகமும் முற்றுருவகமா யமைந்துள்ளது. ஒள்ளிய மாடங்களிலே நிற்கின்றனர் ஒண் டொடி மாதர். வெற்றி வீரன் ஒருவன் பவனிவருவதைப் போலவே ஈசனும் வருகின்றான். அதீதக் கற்பனையாயினும் உண்மைபோலக் காட்டிவிடும் திறன் கவிஞர்பிரானுக்குண்டு.

---

11. ஞான உலா, 9-10
12. ஷெ 60-2

"...........................................................ஏற்றுக்

கொடியும் பதாகையுங் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலுஞ் சூழக்—கடிகமழும்
பூமாண் கருங்குழலா ருள்ளம் புதிதுண்பான்
வாமான வீசன்" [13]

பல்லவர் கால இலக்கியப் பண்புகளில் ஒன்று அக்காலக் கவிஞரிடத்துக் காணப்படும் ஆழ்ந்த தமிழ்மொழிப் பற்றாகும். சமயமும் மொழியும் கைகோத்துக்கொண்டே சென்றன. [14] இறைவனே விரும்பிக் கேட்டதாகச் சேக்கிழார் சுவாமிகள் கூறும் உலாவைப் பாடிய நாயனாரும் நிரம்பிய தமிழ்ப்பற்று உடையராய்க் காணப்படுகின்றார். மால்விடைமேல் வந்த நாயகரைக் கண்டு மம்மர் மனத்தளாய மடந்தைப் பெண்ணை வருணிக்கும்பொழுது,

"ஒள்ளிய
தீந்தமிழின் தெய்வ வடிவாள்"

என்று சிறப்புச் செய்கின்றார். தீந்தமிழிற்கும் தெய்வத்தன்மைக்கும் தொடர்பு காணப்படுகிறதல்லவா? பிற்காலத்திலே தோன்றிய உலா நூல்கள் பலவும் தமிழ்ப்பற்றைக் காட்டுவனவாக உள்ளன. ஆதியுலா ஆசிரியர் இத்துறையில் வழிகாட்டியுள்ளார் என்றே கருதத்தோன்றுகிறது. பெருங்காப்பிய வழிகாட்டியான திருத்தக்கதேவர் "தமிழ் தழிய சாயலவர்" என்று பாடும்பொழுது சேரமானின் செந்தமிழ்த்திறத்தை நினைவுகூராமற் போகமுடியாது. 'தமிழ் வேந்தர்' [15] என்று நம்பி ஆரூரரைப் பாராட்டுகின்றார் சேக்கிழார். தமிழ் வேந்தரின் நட்பிற்குத் தகுந்தவரே சேரமான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. உலாவில் மட்டுமன்றித் தான்பாடிய திருவாரூர் மும்மணிக் கோவை என்னும் நூலிலும் அகப்பொருள் நெறியைப் பற்றியே பாக்களை அமைத்துள்ளார். உலா அகனைந்திணைக்குள் அடங்காததுபோலவே இவர் பாடிய அந்தாதிப் பாடல்களிலும் பல அகனைந்திணையல்லாதன. [16] இவை யாவற்றையும் நோக்கும்போது, பொதுவாக அகப் பொருளையும், சிறப்பாக அதனைச் சார்ந்ததும் சாராததுமான கைக்கிளைத் திணையையும் அடிநிலையாகக் கொண்டு, பேரின்ப நெறியில் செந்தமிழ்க்குச் சிறப்புத்தரும் பாக்களைப் பாடியுள்ளார் என்று துணிந்து கூறலாம். இளங்கோவைப் போலச் சேரநாடு தந்த செஞ்சொற் கவி சேரமான் பெருமான்.

---

13. ஷை 66-8
14. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பக். 117-124
15. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், 248.
16 Cf. சு. துரைசாமிப்பிள்ளை, சைவ இலக்கிய வரலாறு, பக். 262-3

# சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்

ச. தனஞ்சயராசசிங்கம்,
B. A. (Hons.) C. L. M. Litt.

தமிழ்நாடு, இராசராசன், இராசேந்திரன், இரண்டாம் குலோத் துங்கன் முதலிய சோழப் பேரரசர்கள் ஆட்சியிற் பகை, பிணி போன்ற துன்பங்கள் இன்றிச் செல்வச் செழிப்புடன் செழித்தது; மண்ணைக்கடக்கம், இலக்கதீவு, முரட்டெழில் ஈழம் முதலிய பிற நாடுகளும் சோழப் பெரு மன்னரின் ஆட்சிக்குட்பட்டன. சோழப் பேரரசர் வடவேங்கடத்தையும் தென் குமரியையும் தமிழ் கூறும் நல்லுலகத்தின் எல்லைகளாகக் கருதித் திருப்திப்படவில்லை; அவர்கள் தம் முன்னோர் ஆண்ட இடஞ் சிறிதென்னும் ஊக்கம் துரப்பப் பல நாடுகளைக் கைப்பற்றி "வையங் காவலர் வழி மொழிந் தொழுக" அவற்றினை யாண்டனர். சோழநாட்டிற் பல கலைகளும் வளர்வதற்குரிய சூழல் ஏற்பட்டது. நடனம், இசை, சிற்பம், ஓவியம் போன்ற நுண்கலைகளை மக்களும் மன்னரும் பேணி வளர்த்தனர். இவ்விரு திறத்தாரும் சமயத்தைப் புறக் கணிக்கவில்லை; இராசேசுவரம் கங்கைகொண்ட சோழேசுவரம் முதலிய கோயில்கள் சோழ மன்னரின் சைவசமயத் தொண்டிற் குச் சான்றுவன. சோழப்பேரரசர் சைவ சமயத்தவரெனினும் அவர் கள் பிற சமயங்களையும் ஆதரித்தனர். இச் சூழலிலே சீவக சிந்தா மணி, கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தப்புராணம், குண்டல கேசி, வளையாபதி, முதலிய இலக்கியங்கள் தோன்றின. இவ் விலக்கியங்கள் யாவும் சமய நோக்குக் கொண்டன. கம்பராமாயணம் வைணவத்தைவும், குண்டலகேசி பௌத்தத்தைவும், வளையாபதி சிந்தாமணியாகியன சமணத்தையும், பெரியபுராணம், கந்தப் புராணம் ஆகியன சைவத்தையும் சிறப்பித்துக் கூறும். இப் பேரிலக்கியங்களுட் பெரிய புராணம் ஏனைய நூல்களைவிடச் சில இயல்புகளிற் சிறப்பு வாய்ந்தது.

சேக்கிழாரின் பெரிய புராணம் தமிழ்நாட்டு அடியார்களின் வரலாற்றினைச் சித்திரிக்கின்றது; சுந்தரரின் திருத்தொண்டர்

தொகையையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியினையும் சேக்கிழார் கசடறக்கற்றபின் தம் பெரிய புராணத்தைப் பாடினர். சிந்தாமணி வடமொழிக்கத்திய சிந்தாமணி, சீவந்திர நாடகம், ஸ்ரீ புராணம் முதலிய நூல்களில் உள்ள சீவகன் கதையைத் தழுவியெழுந்தது. கம்பராமாயணம். வால்மீகியின் இராமாயணத்தை முதனூலாகக் கொண்டது. கந்தப்புராணம் வடமொழிக் கந்தப்புராணத்திலுள்ள தருக்கசங் கிரதைப் பகுதியைப் பின்பற்றியெழுந்தது. குண்டலகேசி பௌத்த தேரிகாதை முதலிய வடமொழி நூல்களிலுள்ள பத்திரையின் வரலாற்றையொட்டி யெழுந்தது. வளையாபதிக் கதையின்று எமக் குக் கிடைத்திலதெனினும் அதுவும் வடமொழி நூல்களின் தழுவலென நாம் கருத விடமுண்டு. சேக்கிழாரின் தமிழ்ப் பற் றும் சைவசமயப் பற்றுந்தான் அவரைத் தமிழ்நாட்டு அடியா ரைக் கவிதைக்குப் பொருளாக அமைக்கச் செய்தன. காப்பியத் திற்கு கதை முக்கியமன்று. சோழர் காலப் புலவர் பழங்கதை களையே தம் காப்பியங்களுக்கு உகந்தனவெனக் கருதினர். கதை கள் பழையன வெனினும் அவை சோழர் காலப் புலவராற் புது மெருகூட்டப் பெற்றன. மக்கள் பெரிதும் விரும்பிய கதைகளைக் காப்பிய வடிவில் இக் காலத்துப் புலவர்பாடி மக்களின் பாராட் டினைப் பெற்றனர். சேக்கிழாரும் பொதுமக்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டசைவ அடியார் வரலாற்றினை அவர்கள் விரும்பிப் படிக்கத் தூண்டும் காப்பிய வடிவிற் பாடினர்.

## கட்டுக் கதை:

சேக்கிழார் பெரிய புராணத்தைச் சமயப் பொறாமை காரண மாக இயற்றினர் எனக் கதை ஒன்று வழங்குகிறது. அநபாயச் சோழன் சிந்தாமணியைப் பெரிதும் சுவைத்ததைக்கண்டு சேக்கிழார் அவனின் மனத்தை மாற்றும் வண்ணம் பெரிய புராணத்தை இயற்றினரெனக் கட்டுக்கதை யொன்றினைப் பரப் பினர். சமண பௌத்தர் தத்தம் இலக்கியங்களுக்கு ஏற்றம் அளிக்கும் முகமாக ''ஐம்பெருங் காப்பியம்'' என்ற வழக்கினை வழங்கினர். இவ் வழக்கிற் சைவ, வைணவ இலக்கியங்கள் ஒன் றெனினும் இடம்பெறாததே இதனை வலியுறுத்தும், சமணர் தஞ் சிந்தாமணிக்குச் சிறப்பு அளிக்கும் நோக்கத்துடன் சேக்கிழார் திருத்தக்க தேவரின் ஆற்றலிற் பொறாமை காரணமாகப் பெரிய புராணத்தை இயற்றினரெனக் கதை யொன்றினைக் கட்டினர். ஆனால் அக் கதை இன்று சேக்கிழார் சிந்தாமணியை வெல்லும் இலக்கியத்தைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்தவரென்பதை

விளக்குவதற்குப் பலராற் பயன்படுத்தப்படுகிறது. சேக்கிழாரின் அறிவு நிலைக்கும் புலமைக்கும் இழுக்குக் கற்பிக்க நினைத்த சமணர் இந் நோக்கிற் தாம் கட்டிய கதை கொள்ளப்படுமென் பதை அன்று எவ்வாறு உணர்வர். சேக்கிழார் சிந்தாமணியின் சிறப்பினை உணர்ந்து சுவைத்தவரென்பதை நாம் அறிவோம். சிந்தாமணி பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டதுபோலவே பெரியபுராணம் பதின்மூன்று சருக்கங்களைக்கொண்டு விளங்கு கிறது. சேக்கிழாரின் சொல்லாட்சியுங் கற்பனையும் சிற் சில விடங்களிற் திருத்தக்கதேவரின் சொல்லாட்சியுடனும் கற்பனையுடனும் ஒத்திருக்கின்றன. சிந்தாமணி ஆசிரியர் சோழ நாட்டின் செல்வச் செழிப்பினையே மனதிற்கொண்டு ஏமாங்கத நாட்டினைப் பாடினுர். சேக்கிழாரும் சோழநாட்டினையும் சோழ மன்னனையும் பெரிதும் வர்ணிக்கிருர். அரச விசுவாசம் நாட்டுப் பற்று முதலிய நல்லியல்புகள் சோழ மன்னனின் அமைச்சனிடத் தில் இல்லாமற் போகுமா? அவற்றினை உணர்த்துவதற்குப் பெரிய புராணம் ஓர் வாயில் போலும்.

''வென்றி வெண்குடை அநபாயன்
செய்யகோல் அபயன் திருமனத்தோங்கும்
திருக்கயிலாயநீள் சிலம்பு''

முதலிய அடிகள் இவ்வுண்மைக்குச் சான்றுவன. காப்பியத் தலைவராகிய சுந்தரரின் நாடாகிய திருமுனைப்பாடியினையும் அவர் ஊராகிய திருநாவலூரையும் பற்றிச் சேக்கிழார் இரு பாடல் களிற்றுன் வர்ணிக்கிருர். சோழநாட்டு வருணனையே அவர் கவிதைகளில் சிறப்பிடம் பெறுகிறது. அறுபத்துமூன்று நாயன் மார்களுள் முப்பத்தெழுவர் சோழநாட்டினைச் சார்ந்திருப்பதும் அத்தகைய வருணனைக்குப் பொருத்தமாகவே தோன்றுகிறது.

பெரும் காப்பிய இலக்கணங்களுட் பொன்முடி கவித்தல், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி முதலியன மன்னர்க்கே பொருந்துவன. இதையறிந்துதான் திருத்தக்கதேவர் கம்பன் முதலானேர் மன்னர்பற்றிக் காப்பியம் பாடமுற்பட்டனர். சேக்கிழாரின் காப்பியத் தலைவர் சடையனுருக்கும் சைவஞானி யார்க்கும் பிறந்தவரெனினும் அவர் நரசிங்கமுனையரையரெனும் மன்னனுல் வளர்க்கப் பட்டவர். அரசியற் கலையையும் அந்தணர் மறையையும் செவ்வனே சுந்தரர் கற்றவர். எனவே பிற காப்பியங் களில்வரும் மன்னர்க்கு எத்துணையும் அவர் குறைந்தவரன்றென லாம்.

## பெரியபுராணமும் சிந்தாமணியும்

பெரியபுராணம் என்ற பெயர் ''மாக்கதை'' என்ற வடமொழி வழக்கின் நேர் மொழிபெயர்ப்பாகும். திருத்தொண்டர் புராணம் என்பதே பெரியபுராணத்தின் இயற்பெயரெனலாம். திருத்தொண்டர் புராணத்தின் வாழ்த்துச் செய்யுளொன்றில் ''மாக்கதை'' என்ற சொற்றொடர் காணப்படுகிறது. பிற்காலத்தில் அதனைத் தமிழில் மொழிபெயர்த்துத் திருத்தொண்டர் புராணத்திற்குச் சிறப்புப் பெயராக வழங்கினர்போலும்.

பெரியபுராணம் ''காண்டம்'' என்ற பெரும் பிரிவினையும் 'சருக்கம்' என்ற சிறு பிரிவினையும் பெற்று விளங்குகிறது. 'காண்டம்' என்ற வடமொழிப் பிரிவு தண்டியலங்காரத்திலுள்ள பெருங் காப்பியச் சூத்திரத்திற் கூறப்படவில்லை. தண்டியாசிரியர் 'சருக்கம்' என்ற உட்பிரிவினையே கூறுகிருர். சுந்தரரின் வரலாறு திருமலைச் சருக்கத்திற்றொடங்கி வெள்ளானைச் சருக்கத்தில் முடிகிறது. சிந்தாமணியில் எவ்வாறு சீவகன் பிறப்பு முதலியன நாமகள் இலம்பகத்திற் கூறப்படுகிறதோ அவ்வாறே திருமலைச் சருக்கத்திற் சுந்தரரின் இளமை வருணிக்கப்படுகிறது. முத்தியிலம்பகத்திற் சீவகன் முத்தியடைவது கூறப்படுவதுபோல வெள்ளானைச் சருக்கத்திற் சுந்தரர் வீட்டுப் பேற்றினையடைவதும் கூறப்படுகிறது. சீவகன் கோவிந்தையார், குணமாலை, கேமசரி முதலிய பெண்களை மணந்ததைப்போல சுந்தரரும் சங்கிலியாரையும், பரவை நாச்சியாரையும் மணந்து இன்ப வாழ்க்கையில் ஈடுபடுகிருர். பெரிய புராணத்தில் சுந்தரருடைய வரலாறு தொடர்ச்சியாகத் தனித்துக் கூறப்படாதது ஏனைய நாயன்மாருடைய வாழ்க்கை வரலாற்றுடன் கூறப்படுவது அந்நூலின் காப்பிய அமைப்பின் குறைபாட்டினைத்தான் உணர்த்துகிறது. அவரின் வரலாறு தடுத்தாட்கொண்ட புராணத்திற்றொடங்கி ஏயர்கோன் கலிக்காமனுயனுர், கழறிற்றறிவார் நாயனுர் முதலியோர் புராணங்களில் வளர்ந்து வெள்ளானைச் சருக்கத்தில் முடிவடைகிறது.

சோழர் காலத்தில் வடமொழி தங்குதடையின்றித் தமிழில் புகுந்தது. சோழப் பேரவையிலே தமிழ்ப்புலவரும் வடமொழிப் புலவரும் வீற்றிருந்து மன்னர் புகழினை மெய்க்கீர்த்திகளிலும் இலக்கியங்களிலும் பாடினர்; வடமொழிப்புலவருடன் தமிழ்ப் புலவர் அளவளாவியதுடன் நில்லாது அவர்களின் இலக்கணவிலக்கியங்களையும் விரும்பிக் கற்றனர்; தமிழில் அவற்றைப் போல இயற்ற விழைந்தனர்; வடமொழிக் கற்பனைக் கதைகள்

தமிழ்ப் புலவருள்ளத்தைக் கவர்ந்தன. காப்பிய வடிவம் வடமொழிக்குரியது: 'காவ்ய' என்ற வடமொழிச் சொல்லே தமிழிற் காப்பியமென வழங்குகிறது. சேக்கிழார் காப்பியப் பிரபந்தத்தை யேற்ருரெனினும் பொருளமைதிக்கு உண்மை நிகழ்ச்சிகளாகிய அடியார் வரலாறுகளேயே கொண்டார். அவர் ஓர் வரலாற்ருசிரியராக விளங்குகின்ருர். பிறர் வரலாறுகளை எழுதுபவரை ஆங்கிலத்தில் Biographer என்கின்றனர். பொசுவெல் "Boswel" என்பவன் சாமுவேல் ஜோன்சன் "Samuel Johnson" என்பவனின் வரலாற்றினை எழுதியதுபோல சேக்கிழாரும் சைவ அடியாரின் வரலாற்றினை எழுதினுர். பிறமொழிக் கற்பனைக் கதையைத் தமிழில் எழுதுவதிற் சிறப்பில்லை என்பதைச் சேக்கிழார் நன்கு உணர்ந்தவர்.

## வரலாற்றுக் காப்பியம்

சோழர் காலப் புலவர் வடமொழிப் புலவர்களைப்போல அலங்காரப்பித்தராக விளங்கினர். சோழர்கால இலக்கியங்கள் இல்லது புனைதல், உயர்வு நவிற்சி முதலிய இயல்புகளைக் கொண்டன. தற்குறிப்பேற்றம், வியார்த்தம் போன்ற வடமொழியணிகளை வேண்டாத அளவிற்குச் செய்யுட்களிற் திருத்தக்கதேவர் கம்பர் முதலிய புலவர் புகுத்தினர். இக்காலச் செய்யுட்கள் பெரும்பாலும் செயற்கையழகுடன் விளங்கின. அவற்றுள் அடிதோறும் உவமை முதலிய அணிகள் காணப்பட்டன. சேக்கிழார் இப் புலவர் வரிசையில் நின்றும் விலக்கப்படவேண்டியவர். அவரோ வரலாற்றுக் காப்பியம் இயற்ற முனைந்தவர். வரலாற்ருசிரியன் உணர்ச்சிகளை ஓரளவு கட்டுப் படுத்தியே தன் பணுவலையியற்றுவான். செயற்கையான கற்பனைக்கோ மிதமிஞ்சிய அணிகளுக்கோ வரலாற்று நூலில் இடமில்லை. சேக்கிழார் பெரிதும் கையாள்வது தன்மை நவிற்சியணியாகும். இதனுல் அவர் கவிதைகள் இயற்கையழகு வாய்ந்தனவாய் இலங்குகின்றன, உடுப்பூரில் வாழும் வேட்டுவரின் இல்லத்தினைச் சேக்கிழார் பின்வருமாறு வர்ணிக்கிருர்:

குன்றவ ரதனில் வாழ்வார்
　கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்திரள் விளவின் கோட்டு
　வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்கும்
　கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில்
　ஐவனம் உணங்கும் எங்கும்

குன்றவரின் இல்லத்தையவர் தன்மை நவிற்சியாக வர்ணிக்கிறார். குன்றவர் இல்லத்தை வர்ணிப்பதைவிட்டு அவர்களின் முற்றத்தையே வர்ணிக்கிறார். விளா மரங்களில் வளைந்த செவிகளையுடைய வேட்டை நாய்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவ்விளா மரக்கிளைகளில் வாரும் வலையும் தொங்கவிடப்பட்டுள்ளன. பன்றி, புலி, கரடி, மான் முதலிய பார்வை விலங்குகளும் காணப்படுகின்றன. இவற்றுடன் மலைநெல் உலர்த்தப்பட்டிருப்பதையும் முற்றத்திற்காணலாம். குறிஞ்சிநிலக் கருப்பொருட்கள் இயற்கை வனப்புடன் வர்ணிக்கப்பட்டுள்ளன. கொடுஞ்செவி வன்திரள் என்ற வர்ணனைகள் சொல்லில் எளிமையும் பொருளில் ஆழமும் கொண்டவை. வேட்டுவர் மனைபற்றிய வர்ணனை ஏன் முற்றத்துடன் நின்றது? வேட்டுவருடைய வாழ்க்கையெல்லாம் இல்முன்னும் காட்டிலுந்தான். இரவும் பகலும் விலங்கு பகைக்கு அஞ்சாது போரிடும் வாழ்கை பெற்றவர்க்கு அக வாழ்வும் வாழ நேரமேது?

''தென்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவர்க்கும்''

வாழ்க்கை ஒன்றென நக்கீரர் பாடினார். சேக்கிழார் பிறிதோரிடத்தில் வேட்டுவரைத் 'தாளில் வாழ்செருப்பர்' என வர்ணிப்பதும் அவரின் புறவாழ்க்கையைக் குறித்தே; எனவே குன்றவரின் இல்லத்திற்குப் பதிலாக அவர்களின் முற்றத்தை வர்ணிப்பதால் அவர்களின் வீர வாழ்வினைத் தொடக்கத்திலேயே யெம்மையுணர வைக்கிறார்.

திருத்தக்கதேவர் முதலிய சோழர்காலப் புலவர் கையாண்ட உவமைகள் செய்யுட்களுக்கு அலங்காரமாக அமைந்தன. அவை புலனல்லாதவற்றைப் புலனுக்கவோ சுருங்கச்சொல்லி விளங்க வைக்கவோ துணைசெய்யவில்லை. சரயு நதியின் ஓட்டச் சிறப்பினை வர்ணிக்க முற்பட்ட சிந்தாமணி ஆசிரியர் அதனை இந்திரனுடைய மார்பிலே விளங்கும் முத்தாரத்திற்கு ஒப்பிட்டார். அறிந்த பொருளாகிய நதியினை யறியாது கற்பனையிற் காணக்கூடிய இந்திரலோகத்து முத்தாரத்திற்கு ஒப்பிட்டுக் கூறுந்தன்மை திருத்தக்கதேவர் போன்றவர்க்கே பொருந்தும்.

''இலங்கு நீண்முடி இந்திரன் மார்பின் மேல்
விலங்கி வீழ்ந்தமுத் தாரமும் போன்றவே''

(சிந்தாமணி35)

இது போன்ற அலங்காரக் கற்பனையைச் சேக்கிழாரின் கவிதைகளில் நாம் காணமுடியாது. அவர் கையாளும் உவமைகள் அவர் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதுடன் செய்யுளுக்கும் அழகினைக் கொடுக்கின்றன. பொதுமக்களுடைய வாழ்க்கையிற்கண்டு அனுபவிக்கக்கூடிய பொருட்களையே உவமைகளாகக் கொள்கிறார்.

காரைக்காலம்மையார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தை விருத்தயாப்பிற் பாடினார். பக்தியுணர்ச்சிகளைப் பாடுவதற்கு விருத்தம் சிறந்ததென்பதைச் சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வாரும் உணர்ந்தனர். திருத்தக்கதேவர், கம்பன், சேக்கிழார் முதலிய சோழர்காலப்புலவரும் சமய இலக்கியங்களைப் பாடுவதற்கு விருத்தத்தினைக் கையாண்டனர். திருத்தக்கதேவர், கம்பர் ஆகிய புலவர் பாடிய பாடல்கள் எளிமையற்று மாட்டேற்று முதலிய தன்மைகள் கொண்டன. கம்பன் பல்வேறு சந்தங்களில் விருத்தத்தினை யமைத்துப் பாடினான். சேக்கிழாரோ தான் கூறவந்த பொருளினைச் சொல்லாகிய திரையினால் மறைக்காது எளிதாகக் கூறினார். அவருடைய பாடல்கள் கொண்டு கூட்டு முதலிய சிக்கல்களின்றி எளிமை பெற்று இலங்குகின்றன. திருத்தக்கதேவர், கம்பன் போன்றோரின் செய்யுட்களிற் காணப்படுமளவிற்குச் சேக்கிழாரின் செய்யுட்களில் வடமொழிச் சொற்கள் காணப்படவில்லை யெனலாம். இவ்வாறு சேக்கிழாரின் பெரிய புராணம் பல இயல்புகளில் ஏனைய சோழர்காலப் பேரிலக்கியங்களைவிடச் சிறந்து விளங்குகிறது.

---

வேதாந்தம் பாவத்தை ஒப்புக்கொள்வதன்று. பிழையை மட்டும் ஒப்புக்கொள்கிறது. அனைத்திலும் பெரும்பிழையென வேதாந்தம் கூறுவது யாதெனில் நான் பலமற்றவன், நான் பாவி, கேடுற்றபதர் ''என்றும்'' என்னிடம் சக்தி இல்லை, என்றால் இது செய்யலாகாது, அது செய்யலாகாது, ''என்றும்'' சொல்லிக்கொள்ளுதலே.

✱

கடவுள் நம்பிக்கையற்றவனை நாஸ்திகன் என்றன பண்டைய மதங்கள்; தன்னிடம் நம்பிக்கையற்றவனே நாஸ்திகன் எனப் புதிய மதம் புகட்டுகிறது.

—விவேகானந்தர்

# அப்பர் சுவாமிகள் சமண-சைவப் பாலம்

கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை

இந்து மதம் என்ருல் என்ன என்பது இன்னும் நன்கு வரையறுக்கப்படாத ஒன்று. மிகப் பரந்த கருத்தில் இந்துமதம் என்பது இந்தியாவில் தோன்றி வளர்ந்த சமயங்கள் யாவற்றை யும் உள் அடக்குகிறது. மிகச்சுருங்கிய கருத்தில் வேதத்தைத் தமது முதனூலென ஏற்றுக் கொள்ளும் வைதீக சமயங்களை இப்பதம் குறிக்கிறது. சமணம் பௌத்தம் என்பன இந்தி யாவில் தோன்றி வளர்ந்தபோதிலும் அவை வைதீக சமயங் களுக் கெதிரானவை. பௌத்தம் இந்தியாவுக்கு வெளியில் பல நாடுகளிலும் பரவியிருப்பதால் அதனை இந்து சமயத்தில் இருந்து பிரித்து வேருகக் கூறுவதே மரபு. சமணம் இந்து சம யத்தின் ஓர் பிரிவா என்பது சர்ச்சைக்குரிய விடயம். சமண சமயத்தைப் பின்பற்றுபவர்கள் இன்று இந்தியாவிலேயே காணப் படுகின்ருர்கள். அவர்கள் சனத்தொகை சில லட்சக் கணக்கி லேயே அமைந்திருக்கிறது. மதவாரியாக மக்கள் தொகை இந்தி யாவில் கணக்கெடுக்கப்படும் பொழுது சில முறைகளில் சம ணரை இந்துக்களாகக் கொண்டிருக்கிருர்கள். இந்தியாவில் சில பகுதிகளில் இந்துக்களில் ஒரு பிரிவினராகவே சமணரைக் கருது கிருர்கள். ஆனல் இந்துமதம் என்ற வழக்காறு இந்தியாவை இஸ்லாமியர் ஆட்சி செய்த காலத்திலேயே ஏற்பட்டதென்பர். இஸ்லாமியர் வருகைக்கு முன்பு வைதீக சமயத்தவர்களுக்கும் சமணருக்கும் உட்பகை இருந்து வந்தது. சில சந்தர்ப்பங்களில் அது வெளிப் பகையாகவும் வெடித்தது. கி. பி. ஏழாம் நூற் ருண்டில் சமண சமயம் வீழ்ச்சியுறத் தொடங்கச் சைவசமயம் எழுச்சி பெற்றது. அக்கால கட்டத்தில் அப்பர் சுவாமிகளின் வாழ்க்கை சமணத்துடனும் சைவத்துடனும் பின்னிப் பிணைந் திருந்தது.

சைவராகப் பிறந்து வளர்ந்த அப்பர் சமண சமயத்திற் சேர்ந்து பின்பு சைவராக மாறிச் சைவ சமய மறுமலர்ச்சி

யில் முக்கிய பங்கு வகித்துச் சிவலோகம் சேர்ந்தார் எனப் பெரிய புராணம் கூறும். சமணராகப் பிறந்து வளர்ந்த அப்பர், இடையிலே சைவ சமயத்தைச் சேர்ந்து சைவசமய எழுச்சிக்குக் காரணமாக இருந்தாரென்றும், பின்பு சமணத்துக்குத் திரும்பினரெனவும் சமணர் கூறுவர் என்று தென்னிந்தியச் சமணம் என்ற ஆங்கில நூல் கூறுகின்றது.

திருநாவுக்கரசர் சமணராகவும் சைவராகவும் இருந்தவரென்பது இருசாராருக்கும் உடன்பாடு. திருநாவுக்கரசர் சைவராகிப் பக்திப் பாடல்கள் பாடுவதற்கு முன்பு சமணராக இருந்தவரென்பதையும் இரு சாராரும் ஏற்கின்றனர்.

திருநாவுக்கரசர் சமணராக இருந்த காலத்தில் சமண சமய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியதைப் பெரிய புராணமே விதந்து கூறுகின்றது. சமணத்துறவியான திருநாவுக்கரசர், தருமசேனர் எனப் பெயர் பூண்டிருந்தார். சமணநூல்கள் பலவற்றையுங் கற்றுப் புறச்சமயத்தினர் பலருடன் வாதஞ் செய்து, அவர்களைத் தோற்கடித்துச் சமணத்துக்கு மதமாற்றஞ் செய்த தருமசேனர் சமணர்களின் பெருமதிப்புக் குரியவரானர்.

தருமசேனருக்கு வந்த சூலை நோயைச் சமணரால் தீர்க்க முடியாமற் போனதும் சைவராற் தீர்க்க முடிந்ததும், தமிழர் சமய வரலாற்றில் ஓர் திருப்பு மையமாக அமைந்துவிட்டன. சமணமும் தருமசேனர் என்ற பெயரும் அழிந்தன; அந்த அழிவிலே, சைவமும் திருநாவுக்கரசர் என்ற பெயரும் தோன்றின. அக்காலத் தமிழ் நாட்டையாண்ட பல்லவமன்னனும் பாண்டிய மன்னனும் சமணர்; மக்களிலும் பெரும் பகுதியினர் சமணர். தனி மனிதர் திருநாவுக்கரசர் என்ன சாதித்து விடமுடியும்? சாதாரண மனிதரான திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் தோன்றி மறைந்தால், அது செல்வாக்கு மிகுந்த சமணத்தை எப்படிப் பாதிக்கும்? அகிம்சையின் எல்லையைக்கண்ட சமண சமயத்தில் மனதைப் பறிகொடுத்துச் சேர்ந்து, அச்சமயத் துறவியாக பல காலம் வாழ்ந்த ஒருவர் மன்னருக்கெதிராகப் படை திரட்டிப் போர் செய்யமுடியுமா? அப்பரின் பழைய கூட்டாளிகளாக இருந்த சமணர், அப்பரைத் தண்டிக்க முனைகின்றனர். அப்பரை நசுக்க வலிமை மிக்க படை திரண்டு விட்டது. அப்பர் நசிந்திருந்தால் அது அக்காலத் தமிழ் நாட்டில் ஒரு சிறு பகுதி அறிந்து விரைவில் மறந்த ஓர் சிறு நிகழ்ச்சியாகப்போயிருக்கும். அப்பர் நசியாவிட்டால், தமிழ் நாட்டுச் சமய வர

லாற்றையே மாற்றியமைக்கக் கூடிய வன்மை, அப்பருக்குக் கிடைத்துவிடும். பிந்திய காரியந்தான் நடந்தது.

வலிமை மிக்க எதிரிகள் அப்பரை மிக மோசமாகத் துன்புறுத்தினர். திருநீறும் ஐந்தெழுத்தும் அப்பரும் எதிர்த்து நின்றனர். அப்பர் பரம சாதுவாக நடந்துகொண்டார். துன்பங்கள் யாவற்றையும் ஏற்றார்; சகித்தார்; சிவன் நினைவில் மகிழ்ந்திருந்தார். எதிரிகள் தொடர்ந்து இழைத்து வந்த துன்பங்கள் ஒவ்வொன்றும் அப்பர் வாழ்வில் வளர்ச்சிப் படிகளாயின. தமிழ் மக்களும் மன்னனும் தலைவணங்கத் தக்க பெருமையுடையவராக அப்பரும், கேலி செய்யக் கூடிய சிறியோராகச் சமணரும் மாறிக் கொண்டிருந்தனர். தமிழ் நாட்டின் வட பகுதியில், சமயப் புரட்சி நடந்த கதையிது.

வாழ்க்கையில் ஒரு பகுதியில் சமண சமயத்தை மனதாரப் போற்றிய அப்பர், இன்னொரு பகுதியில் சைவத்தை உள்ளம் நிறையப் போற்றுகின்றார். சமண சமயத்தை அப்பர் முழுதாக வெறுத்தாரா? சமணம் கூறுவது அவ்வளவும் பொய் என்று உணர்ந்தாரா? அவருடைய பக்திப் பாடல்கள் மூவாயிரம் வரையிலுண்டு. அவற்றைக் கொண்டுதான், மேற்கூறிய வினாக்களுக்கு விடைகாணமுயலவேண்டும். நிலையாமை பற்றிய கருத்துக்கள், வாழ்க்கையை வெறுக்கும் கூற்றுக்கள்; திருநாவுக்கரசர் தேவாரத்தில் நிறையக் காணப்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள அறநூல்களில், இத்தகைய கருத்துக்கள் ஓரளவு காணப்படுகின்றன. அந்த அறநூல்கள் பெரும்பாலும் சமணரால் இயற்றப்பட்டவை என்பது, இங்கு கருத்திற் கொள்ளப்படவேண்டும். சமணருடைய போதனைகளை, வாழ்க்கைபற்றிய நோக்கு, வாழ வேண்டிய நெறி என இரண்டாக வகுக்கலாம். வாழவேண்டிய நெறியாக அறவாழ்வைச் சிறப்பாக துறவறத்தைப் போதித்த சமணர், வாழ்க்கை பற்றிய நோக்காக நிலையாமை, வாழ்க்கை வெறுப்பு என்பவற்றைக் கொண்டிருந்தனர்.

நிலையாமை வாழ்க்கை வெறுப்பு என்ற கொள்கைகள் இந்தியச் சமயங்கள் யாவற்றையும் ஊடுருவிச் செல்கின்றன். ஒரே பிரதேசத்தில் தோன்றிய சமயங்களில், பொதுப்பண்புகள் காணப்படுதலியல்பே. மேலும், இந்தியச் சமயங்களின் வரலாற்றை நோக்கினால், காலப்போக்கில் ஒன்றின் கொள்கைகளின் செல்வாக்கு இன்னொன்றில் இடம் பெறுவதைக் காணலாம். இந்தியச் சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் பல, எந்தச் சமயப் பிரிவில் முதன்முதல் தோன்றின என அறிய முடி

யர்மலுள்ளன. ஆயினும் ஒவ்வொரு சமயத்திலும், அடிப்படையாக விளங்கும் கொள்கை மற்றச் சமயத்தில் அத்துணை முக்கியமில்லாததாயிருந்தால், அந்தக் கொள்கை, எந்தச் சமயத்திற்கு அடிப்படையோ, அந்தச் சமயத்திற்கே சிறப்பாக உரியதெனலாம். பல்லவர்காலத்து ஏனைய சமய குரவரும் நாயன்மாரும் கூருத அளவுக்கு, அப்பர் தேவாரத்தில் இக் கொள்கைகள் சிறப்பிடம் பெறுதலாலும், அப்பரொருவரே இவ்வாறு சமயம் மாறிப்பாடியவராதலாலும் இக் கொள்கைகள் சமண சமயத்தனவே யெனலாம்.

நிலையாமை பற்றிய கொள்கைகள் மனத்தில் ஏற்படுத்திய சஞ்சலமும் கடுந் துறவறத்தை அனுஷ்டிக்க இயலாமையும் எல்லாம் வல்ல இறைவனொருவனின் தேவையை மக்களுக்கு உணர்த்தின. வாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாகக் கண்டு, துன்பங்களை நீக்குவதற்காகக் கணக்கில்லாத கட்டுப்பாடுகளை அமைத்து, அந்தக் கட்டுப்பாடுகள் தருந் துன்பத்தைச் சகிக்க முடியாமல் வருந்தும்பொழுது, கருணை வள்ளலான இறைவன் மீது நம்பிக்கைவைத்து, அந்த நம்பிக்கையில் வாழ, மனம் விழைகிறது. அப்பருடைய மத மாற்றம் இத்தகையதொன்றே. வாழ வேண்டிய நெறி சமணத் துறவியாயிருப்பதல்ல, சிவ பக்தனுயிருப்பது என்பது அவர் மதம் மாறியபொழுது கண்ட உண்மை.

ஏனைய நாயன்மார் ஆழ்வார்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அப்பருடைய வாழ்க்கை பற்றிய நோக்கு, அவர் மதம் மாறிய பின்பும் சமணசமயத்ததாகவே தெரிகிறது, சமணருடைய வாழ்க்கை பற்றியநோக்கே, அப்பரைச் சமணத்துக்கு இழுத்திருக்கலாம். அதனுலே, அவர் சமணம் கூறும் வாழவேண்டிய நெறியைப் பின்பற்றியிருக்கலாம். வாழ வேண்டிய நெறியில் திருப்தி காணுத அவர் மனம், சைவத்தை நாடியிருக்கலாம். சமணத்தின் வாழ்க்கை பற்றிய நோக்கும் சைவத்தின் பக்தி நெறியும் பிணையும் அழகு அப்பருடைய பக்திப் பாடல்களிற் றெரிகிறது.

# அரனடியாரும் அகப்பொருளும்

பொ. பூலோகசிங்கம்,
B.A. (Hons) D. Phil. (Oxon)

நாயன்மாரும் ஆழ்வாரும் இறை பக்தர்களாக மட்டு மன்றிப் புலவர்களாகவும் விளங்கினர்கள். பக்தியும் புலமையும் இணைந்த சக்திகளாக அவர்களை இயக்கின. இத்தன்மைத்தாக விளங்கிய சக்திகளை இரு தனித்தனியான, ஒன்ருத பிரிவுக ளாக்கிப் பல்லவர் காலத்துப் பக்தி யிலக்கியத்தை ஆராய முயறல் பொருத்தமின்று எனலாம். பக்திக்கு மட்டுமே முக் கியத்துவம் அளிப்பவர்கள் அடியாரின் புலமையைப் பின்னிலைக் குத் தள்ளி விடுகிருர்கள். இதனல் அவர்கள் புலமையும் அவர்கள் வளர்ந்ததும் வளர்த்ததுமான இலக்கிய பாரம் பரிய மும் தமக்குரிய இடத்தினைப் பெறத்தவறுகின்றன.

பல்லவர் காலத்து மெய்யடியார்களின் முன் வலிமை யான இலக்கிய பாரம்பரியம் ஒன்று நின்றது.[1] பல நூற்ருண்டு களாக வளர்ந்துவந்த இவ்விலக்கிய பாரம்பரியத்திலே அகப் பொருள் இன்றியமையாத ஓர் இடத்தினைப் பெற்றுத் திகழ்ந் தது. தமிழ்ப்புலவர் படைத்தளித்த இலக்கியங்களை நோக்கின் இவ்வுண்மை புலனுகும். பண்டைத் தமிழிலக்கிய நூற்ருெகுதி களாகத் திகழும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியனவற் றுள்ளே அகப்பொருள் முக்கியத்துவம் பெறுகின்றது. எட்டுத் தொகையுள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை ஆகியன அகத்திணை மட்டுமே பொரு ளாகவுடையன. பரிபாடலிலும் அகப்பொருளமைதியுடைய பாடல்கள் சிலவுள.[2] புறநானூற்றில் அகப்பொருள் அமைதி

---

1. "அன்ன நடையா ரலரேச வாடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமுந்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினேம்"
(பெரிய திருமடல்)

2. 6, 7, 10, 11, 12, 14, 16, 20.

யுடைய பாடல்கள் இல்லாமலில்லை.[3] பத்துப்பாட்டினுள் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை ஆகியன அகப்பொருளைத் தம்மகத்தே உடையவை.[4] இவையெழுந்த காலத்தையடுத்துத் தோன்றியனவாகக் கருதப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலே அறம், நீதி, ஆசாரம் முதலியன பெறும் முக்கியத்துவம் அகப்பொருள் பெறவில்லையெனினும் அகப்பொருள் விலக்கப்படவில்லை. ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார்நாற்பது, கைந்நிலை ஆகியன அகப்பொருளை மட்டுமே பொருளாகவுடையன. திருக்குறளும் காமத்துப்பாலில் அகப்பொருளைச் சிறப்பிக்கின்றது.[5] இளங்கோவடிகள் அகப்பொருளை விலக்கியவர் எனல் முடியாது. அவர் களவொழுக்கத்தின் சுவையைக் கானல்வரியிலே தந்து காப்பியத்தை அழகுபடுத்துகின்றார்.[6] முத்தொள்ளாயிரம் சிறந்த அகப்பாடல்கள் பலவற்றைக் கொண்டு விளங்குகின்றது. இளமை, யாக்கை, செல்வம் ஆகியனவற்றின் நிலையாமையைக் காட்டிக் காதலையும் ஐம்புலநுகர்ச்சியையும் கட்டுப்படுத்தித் துறவை வற்புறுத்திய மதங்களின் ஆதிக்க காலத்திலும் அகப்பொருள் தவிர்க்கப்படவில்லை. களவியலுரை தமிழ் என்பதே அகப்பொருள் எனக் கருதவைக்கிறது.[7] பல்லவர் காலத்திலே சமயவாதிகளின் முன் அகப்பொருள் முக்கியத்துவம் பெற்ற ஒரு பாரம்பரியம் நின்றது; இத்தன்மைத்தாய பாரம்பரியத்தினை அழித்து அன்றி அதனுடன் இணைந்து தம்கால மரபினை வகுக்கவேண்டியநிலை மெய்யடியார்களுக்கு இருந்தது. இத்தகைய பாரம்பரியத்தின் அழிவிலும் பார்க்க அதன் இணைப்பில் இலக்கிய வளர்ச்சி இருந்ததை அவர்கள் உணர்ந்தனர். அகப்பொருட் சுவையை நீத்து மனிதவினமும் அதன்பெற்றி யுணர்த்தா கவிதை யிலக்கியமும் இருக்கவியலாது என உணர்ந்தனர். எனவே பழைய பாரம்பரியத்துடன் இணைந்து போகவேண்டிய நிலை இக்காலத்து அடியார்களாகவும் புலவர்களாகவும் விளங்கியவர்களுக்கு இருந்தது. சமய நோக்கையும் கவிதை நோக்கையும் இணைத்து அமைதி கண்டனர்.

---

3. 83, 84, 85.
4. முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை ஆகியனவற்றுள் புறப்பொருளும் சித்தரிக்கப்பட்டுள்ளது.
5. நாலடியாரின் காமத்துப்பால் அகப்பொருளை சிறப்பித்தலை நோக்கமாகவுடையதல்ல.
6. 'கானல் வரிப்பாட்டைக் கேட்கும்போதெல்லாம் சங்க இலக்கிய மரபில் பாடும் தமிழர் குரலையே கேட்கிறோம்' மு. வரதராசன் 'இளங்கோவடிகள்' (1963)
7. 'இந்நூல் என் நுதலிற்றோ எனின், தமிழ் நுதலிற்று' இறையனார் அகப்பொருள். கழகப்பதிப்பு (1964)

பல்லவர் காலத்துப் புலவர் தம்மைப் பண்டைத் தமிழரின் இலக்கிய வாரிசாகவும் கொண்டனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம்பாடல்களிலே காட்டும் தமிழுணர்வு இக்கூற்றிற்கு ஆதாரமாகும்.[8] வேற்று நிலத்திலே தோன்றிய புறச்சமயங்களின் ஆதிக்கத்திற்கு எதிராகத் தம் நிலத்துச் சமய உணர்வினைத் தூண்டத் தமிழ் உணர்வு பயன்பட்டது. தமிழுணர்வுக்கு முக்கியத்துவம் அளித்தவர்கள் பண்டைத்தமிழரின் இலக்கியத்தை, பாரம்பரியத்தை காப்பாற்றும் முயற்சியிலும் ஈடுபட்டனர்; எனவே தம் நிலத்திற்குரிய இலக்கிய பாரம்பரியத்துடன் இணைப்பை விழைந்தனர் எனலாம்.

அப்பர்—சம்பந்தர் காலத்திலே சமணசமயம் செல்வாக்குப் பெற்றதாகத் திகழ்ந்தது; தமிழ்நாட்டின் முடியுடைவேந்தராக விளங்கிய பாண்டியனும் பல்லவனும் சமணசமயத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தனர். கோன் வழியே குடிகள் ஒழுகினர் எனலாம். சமணரின் ஆதிக்கத்தினைத் தகர்த்தெறிய அவர்கள் சமயப்பிரசாரத்தை வெல்லக்கூடிய வழிவகைகளைக் கையாள வேண்டியிருந்தது; சங்ககாலச் சமுதாயத்தின் வீழ்ச்சியிலே புறச்சமயங்களின் கருத்துக்கள் செல்வாக்குப்பெற்றன. ஆனால் அறப்போதனைகள் மூலம் மக்களை என்றும் தம்மாணைக்குள் வைத்துக்கொள்ள முடியவில்லை. பொதுமக்களை ஆரம்பத்தில் கவர்ந்த கொள்கைகள் நாளடைவிலே கவர்ச்சிகரமானதாக விளங்கவில்லை. அவை பின்பற்றக்கூடிய இலகுவான கொள்கைகளாகவும் காணப்படவில்லை. எனவே அகச்சமயிகள் வேறு முறைகளைக் கையாளவேண்டிய நிலையேற்பட்டது. அகச்சமயிகள் இறைவன் மாட்டு அன்பு செலுத்தினலே முத்திநெறியை அடையலாம் எனப்போதித்தனர். உடலை வருத்தி, உணர்வுகளைச் சிதைத்துத் துறவியாக நின்று பேரின்பநிலை அடையலாம் என்ற போதனைக்கு எதிராக இல்லறத்திலோ அன்றித் துறவறத்திலோ நின்று அன்பு அல்லது பக்தி செலுத்தினலே போதுமானது என்ற இலகுவான நெறி மேற்கொள்ளப்பட்டது. வருத்தமின்றி அடையும் செல்வத்தை மக்கள் விரும்பினர். அன்பு மார்க்கத்தினைப் புலப்படுத்த அகப்பொருள்மரபு ஒரு கருவியாகப் பயன்பட்டது. உலகியலிலே மக்கள் உணர்ந்த பொருள் மூலம் அடியார் உணர்த்த விரும்பிய பொருளைக் கூறுவது இலகுவாகவிருந்தது; காதலின் வளர்ச்

8. 'பல்லவர் கால இலக்கியங்களை நாம் படித்துப் பார்ப்போமானல் 'தமிழ்', 'தமிழ்' என்னும் ஆவேசக் குரலையே காதாரக்கேட்கலாம்' க. கைலாசபதி. தினகரன் தமிழ்விழா சிறப்பு மலர் (1960)

சியாகக் காணப்படும் அன்பு மக்கள் புரிந்து கொள்வதற்கு இலகுவானதாக விளங்கியதோடமையாது அவர்களைக் கவரக் கூடியதாகவும் திகழ்ந்தது.

## II

அடியார்கள் பாடிய அகப்பாடல்களுட் பெரும்பான்மை யானவை அன்பினைந்திணை யல்லாதனவற்றுள் அடங்குவன வாகக் காணப்படுவன. இப்பாடல்களின் தலைவன், தலைவி ஆகிய இருவரிடையிலும் உள்ள தொடர்பின் தன்மை இவ் வியல்புக்குரிய முக்கிய காரணங்களுள் ஒன்றாக விளங்குகின்றது மெய்யடியார்கள் பரம்பொருளைத் தலைவனாகவும் அடியாராகிய தம்மைக் காதலியாகவும் கொண்டனர். இறையடிமையை விழைந்து நின்றவர் இறைவனைத் தம் நிலையில் உள்ள தலைவ னாகக் கருதமுடியவில்லை. தமக்கு அருள் கூர்ந்து ஆட் கொள்ளவேண்டிய அண்ணலாகக் கருதினார்கள். சிவனடியாரின் அகப்பாடல்களில் இவ்வியல்பு திருமாலடியார்களின் பாடல்களி லும் பார்க்க மேலோங்கி நிற்கக் காணலாம். திருமால் மானிட னாக அவதாரமெடுத்த, மனிதப்பண்புகள் உடையவனாகக்காட்சி யளிக்கிறான். இதனால் மனிதனுக்குரிய ஆசாபாசங்கள் அவனுக் கும் உரியனவாகக் கொள்ளப்பட்டன. பிறவாயாக்கையனாகச் சிவன் கருதப்பட்டான். எனவே மனிதப்பிறவியின் இயல்புகளை அவன் மேலேற்றாது விட்டனர். சமநிலையற்ற தொடர்புடன் தலைவனாகக் கொள்ளப்பட்டவனின் மனவியல்பினை உணர முடி யாத நிலையும் கவனிக்கத்தக்கது.

அன்பினைந்திணை மரபு உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் தன்மையுடையது. பேரழுகை, பேரச்சம், பெருமருட்கை என் றினைய சுவைப்பாங்குக்கு இதனுள் இடமின்று. இத்தகைய மர பிற்குள் அடங்கி தமது எல்லைமீறிய உணர்வுகளைப் புலப் படுத்த அடியார்களால் முடியவில்லை. எனவே தம் உணர்ச்சிப் பிரவாகத்தை அணைபோட்டுத்தடுக்க முற்படாத திணைகளைக் கருவிகளாகக்கொண்டு பாடினர் எனலாம்.

## III

ஆளுடையவரசர் நிலையாமையைப் பலவாறு வற்புறுத்து கிறார். நீரிலே தோன்றி நீரிலே மறையும் குமிழி போல நிலையற்றது யாக்கையென,

"மக்களே மணந்ததார மவ்வயிற் றவரையோம்பும்
சிக்குளே யழுந்தியீசன் றிறம்படேன் றவமதோரேன்
கொப்புளே போலத்தோன்றி யதனுளே மறையக்கண்டும்
இக்களே பரத்தையோம்ப வென்செய்வான் றோன்றினேனே"
(4.79.2)

எனும் பாடலுட் குறிப்பிடுகிறார். இதனையே,

"நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே" (5.90.4)

எனும் பாடலில் உலகினரை விளித்துரைக்கிறார். இளமையின் நிலையற்ற தன்மையை,

"இளமை கைவிட் டகறலு மூப்பினார்
வளமை போய்ப்பிணி யோடு வருதலால்
உளமெ லாமொளி யாய்மதி யாயினான்
கிளமை யேகிளை யாக நினைப்பனே" (5.97.28)

எனவெடுத்துரைக்கிறார். செல்வத்தின் நிலையாமையை,

"மாடு தானது வில்லெனின் மாநுடர்
பாடு தான்செல்வா ரில்லைபன் மாலையாற்
கூட நீர்சென்று கொண்டீச் சுரவனைப்
பாடு மின்பர லோகத் திருத்துமே" (5.70.3)

எனக் கூறுவர். இன்பத்திற்கேதுவான யாக்கை, இளமை செல்வம் ஆகியனவற்றின் நிலையாமையை எடுத்தியம்பிய அப்பர் இன்பத்தின் நிலையற்ற தன்மையையும் சிறந்த உவமை மூலம் வெளிப்படுத்துகிறார். சூடு மிகுமுன் உலை நீரில் ஆமையையிடின், அது மிக இன்புற்றுத் திளைக்கும் ஆனால் அதனின்பம் நிலையற்றது. சூடு ஏறவேற அதற்கு அழிவு அணுகும். உலகவின்பத்தினை ஆமையின் சிறுபொழுது இன்பத்துடன் ஒப்பிட்டு, அதனால் ஏற்படும் விளைவைக் கூறுகிறார்:

"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற வாமைபோற் றெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றே னென்செய்வான் றோன்றினேனே"
(4.79.6)

நிலையாமையை இவ்வாறு பரக்கத் தம் பாக்களிலே எடுத்துரைத்த அப்பர் பாடிய மூன்று திருமுறைகளிலும் சில முழுப்பதிகங்களும் சில பதிகப் பகுதிகளும் அகப்பொருளை உணர்த்துவனவாய்க் காணப்படுவன.[9] தலைவியின் காதல் நிலை கண்டு இரங்கியும் வியந்தும் கூறும் தாய் அல்லது தோழியின் கூற்று, தலைவி கூற்று ஆகிய இரு பிரிவுகளிலே இவ்வகச் செய்திகள் அமைந்துள்ளன எனலாம்.

இருவகையினரான தலைவியரை நாம் அப்பர் பாக்களிலே காணலாம். பவனி செல்லும் இறைவனை அல்லது பலிவேண்டி வரும் பரமனைக்கண்டு காதலிக்கும் தலைவியையும் காணுமலே காதல் கொள்ளும் தலைவியையும் நாம் காணலாம். பவனி கண்டு காதல் நோய் கொண்ட தலைவியை,

''இவள்ந மைப்பல பேசத் தொடங்கினாள்
அவண மன்றெனி லாரூ ரரனெனும்
பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்
தவனி யாயின வாறென்றன் தையலே'' (5.7.8)

எனும் பாடலிற் காணலாம். வளை கழல, ஆடை சரிய, பெண்மைக்குரிய நாணொழித்துத் தலைவன் வரும் வீதியிலே வழிமேல் விழி வைத்து நிற்கும் தலைவியை,

''சங்கு சோரக் கலையுஞ் சரியவே
மங்கை தான்மரு கற்பெரு மான்வரும்
அங்க வீதி யருகணை யாநிற்கும்
நங்கை மீரிதற் கென்செய்வேன் நாளுமே.[10]
(5.88.6)

பலிவேண்டி வந்தவிடத்துக் காதலித்தவளை,

''நக்கம் வந்து பலியிடென் றார்க்கிட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர்வயல் தோணி புரவர்க்குத்
தக்க தன்று தமது பெருமைக்கே''[11] (5.42.2)

தலைவனைக் காணுமலே காதல் கொண்ட தலைவியை,

---

9. ஆறுந்திருமுறை. தருமையாதீனப்பதிப்பு (1963) பக். 21
10. 4. 6.1—10; 5. 7. 7; 6. 35. 1;
11. 5. 45, 5; 4. 97. 1-3

''முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''[12]

எனும் பாடலிற் காணலாம். இத்தகைய தலைவியின் நிலையை அவள் பேச்சு மூலமும் செயல்கள்மூலமும் ஏனோர் எடுத்துரைக்கின்றனர். மழலைச் சொல்லே கிளக்கும் இயல்பினளாக தலைவி கூறும் சொற்கள் தாய்க்கு வியப்பளிக்கின்றன;

''மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் மண்ணலே
இகழ்வ தோவெனை யேன்றுகொ ளென்னுமே''
(5.40.3)

தலைவி பெருமானின் திருமார்பில் அணிசெய்யும் கொன்றை மாலையைப் பெறவிரும்புவதையும்,[13] அவளது உடல் மெலிவினாற் கைவளைகள் கழலுவதையும்,[14] பாடல் ஆக்குவதையும்,[15] கூடல் இழைத்தலையும்,[16] கூந்தலவிழ்ந்த அலங்கோல நிலையையும்,[17] கிளியைத் தூதுவிட முயல்வதையும்,[18] நாம் ஏனோர் கூற்றுக்கள் மூலம் அறியலாம். இவ்வாறு இரங்கத்தக்க நிலையிலே தலைவி காணப்பட்டபோதும் இறுமாப்பு உடையவளாகத் திகழ்கின்றாள்; தான் காதலிக்கும் இறைவன் தன்னிடம் வருவான் என இறுமாப்பு அடைகின்றாள்.[19] பாவை பங்கனைத்தஞ்சமென்று கொண்டு இறுமாப்பு எய்தி வேறுயாரையும் அஞ்சாதவளாயினாள்.[20] வெண்ணீறணிவான்மீது மையலாகி யாரையும் மதிக்காதவள் ஆயினாள்.[21] இத்தகைய பண்புடையவளிடம்

---

12. 5. 40. 1, 5, 8; 5. 29. 5
13. 5. 29. 4; 5, 45. 7
14. 5. 29. 6, 9; 5. 40. 2
15. 5. 64. 4
16. 5. 64. 4; 5. 88. 8
17. 5. 88. 9
18. 5. 88. 4
19. 5. 40. 6
20. 5. 29. 7
21. 5. 40. 4

பரிந்து அவளுடைய துன்பநிலையைத் தீர்க்கும் வழிகூறினும் அறிவுரைகளைப் பழித்துரைப்பாள்.[22] அவளோடு வார்த்தையாடிலோ,

"மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணி புரவர்க்குத்
தாதி யாவன்நா னென்னுமென் தையலே"
(5.45.1)

தம் பெண் இந்நிலையை அடைதற்குக் காரணமான தலைவனை எண்ணிப்பார்க்கும் பொழுது தாய்க்கு வியப்பே ஏற்படுகிறது. இமவான் மகளும் கங்கையும் தான் காதலிப்பவனுடன் இருக்கக் கண்டும் தன்பெண் காமுறுகின்றனளே என வியப்படைகிருள்.[23] மேலும் அவன் காதலனது தகுதியையும் எண்ணி வியக்கிருள்;

"உறவு பேய்க்கணம் உண்பது வெண்தலை
உறைவ தீமம் உடலிலோர் பெண்கொடி
துறைகி ளார்கடல் தோணி புரத்துறை
இறைவ னுர்க்கிவ ளென்கண்டன் பாவதே"
(5.45.8)

எனினும் இவளது துன்பநிலையைத் தீர்க்கும் வழியறியாது வருந்துகிருள்;

"இன்ன வாறென்ப துண்டறி யேனின்று
துன்னு கைவளை சோரக்கண் நீர்மல்கும்
மன்னு தென்மரு கற்பெரு மான்திறம்
உன்னி யொண்கொடி யுள்ள முருகுமே"
(5.88.5)

தலைவனது தன்மையைக் கூறித் தலைவியின் ஈடுபாட்டை மாற்ற முற்படுகிருள்;

"முல்லை வெண்நகை மொய்குழ லாயுனக்
கல்ல னுவ தறிந்திலை நீகனித்
தொல்லை யார்பொழில் தோணி புரவர்க்கே
நல்லை யாயிடு கின்றனை நங்கையே" (5.45.6)

22. 5. 40. 2
23. 5. 45. 3, 4

தலைவியின் மனநிலையை மாற்றமுடியாதவள் தலைவனிடமே முறை கேட்க முனைகிறாள்;

''ஊச லாம்அர வல்குலென் சோர்குழல்
ஏச லாம்பழி தந்தெழில் கொண்டனர்
ஓசொ லாய்மக ளேமுறை யோவென்று
பூசல் நாமிடு தும்புக லூரர்க்கே'' (5.46.3)

தலைவி கூற்றுக்களாக வமைந்த பாக்களிற் பல பலி வேண்டி வந்த இறைவனைக் கண்டு காமுற்றுப்பாடிய பாடல்களாகக் காணப்படுவன,[24] பவனிவரக்கண்டு காமுற்ற பாடலும் காணலாம்.[25] பலிபெற்று நீங்கிச் செல்கின்றாரை எதிர்சென்று கூறியதாக அமைந்த பாடல்களும் உள.[26] கனவிழந்துரைத்தலாக அமையும் பாடல்,

''செஞ்சுடர்ச் சோதிப் பவளத் திரள்திகழ் மூத்தனைய
நஞ்சணி கண்டனல் லூருறை நம்பனை நானொருகால்
துஞ்சிடைக் கண்டு கனவின் றலைத்தொழு தேற்கவன்றான்
நெஞ்சிடை நின்றக லான்பல காலமும் நின்றனனே''[27]
(4.97.4)

என்பதாகும். காமமிக்க கழிபடர் கிளவியிலமைந்த அஃறிணைப் பொருள்களுடன் உரையாடும் தலைவி கூற்றுகளும் உள. குயில், நீர்முள்ளி, கடல்முள்ளி, தாழை, நெய்தல், குருகு, வண்டு, தென்றல், நாரை, பூவை ஆகியவற்றுடன் தலைவி உரையாடுகிறாள்.[28] தலைவியின் மனநிலையை, அளவிறந்த ஆற்றாமையை இவை செவ்வனே எடுத்துணர்த்துகின்றன. வீதியிலே பெருமான் எழுந்தருளியபோது, அவனைக்கண்டு காதல் கொண்டு பின் தொடர்ந்து சென்று அவரை அணுகவியலாது வருந்தும் தலைவியை,

''மூவாத மூக்கப்பாம் பரையிற் சாத்தி
மூவர் உருவாய முதல்வ ரிந்நாள்
கோவாத எரிகணையைச் சிலைமேற் கோத்த
குழகனார் குளிர்கொன்றை சூடி யிங்கே
போவாரைக் கண்டடியேன் பின்பின் செல்லப்
புறக்கணித்துத் தம்முடைய பூதஞ்சூழ
வாவா வெனவுரைத்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே;''
(6.58.4)

எனும் பாடலிற் காணலாம்.

24. 4. 97, 6. 9, 6. 13, 6, 35, 6. 45
25. 6. 35. 1
26. 6. 9. 8, 6. 45. 3
27. 6. 45. 1
28. 4. 12. 1-4, 6-8

# சூடிக் கொடுத்தவள் பாடிக் கொடுத்தாள்

ஆ. சிவநேசச்செல்வன்

பக்தி என்ற போர்வையிலே காதற் சுவைததும்பும் அமர கவிதைகளை அளித்த வைஷ்ணவ உலகம் தமிழ் இலக்கிய அகமரபை மீறியது போலச் சைவ நாயன்மார் மீறவில்லை; சங்ககால இலக்கியங்களிலே அமைந்துள்ள பொருள்மரபினைத் தமது பக்தி உணர்வுக்குக் கருவியாகப் பயன்யடுத்திய வைஷ்ணவ ஆழ்வார்களின் பாடல்களிலே அன்பினைந்திணையல்லாத அகத் திணைமரபு புது மெருகுடன் பேரின்ப உணர்வு கலந்து வெளியாகியது. மரபு மீறிய நிலையிற் பாடியமை இவற்றிலே உணர்ச்சியும் உயிரோட்டமும் மீதூர இருப்பதற்கு ஒரு காரணம் எனலாம். கண்ணன் மீது பக்திக் காதல் கொண்ட ஆண்டாளின் அனுபவ உணர்ச்சிப் புலப்பாடே நாச்சியார் திருமொழி. நாயக நாயகி பாவத்திற்பாடிய பக்திக் கவிஞர்களுள் பெண்ணாக விருந்தே பெண்ணுணர்ச்சியைப் புலப்படுத்திப் பெருமையுறும் ஆண்டாள் பெற்ற பல்வேறு அனுபவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும் வகையிலே அமைந்துள்ளன.

திருமொழியின் ஆரம்பத்திலேயே ஆண்டாள் காதலின் வளர்ச்சி நிலையில் இருந்து பாடுகிறாள். 'கண்ணனை இணக்கு' எனக் காமனைத் தொழுவதிலிருந்து திருமொழியை ஆரம்பிக்கிறாள். மானுட உணர்ச்சியையும் தெய்வீக பக்தி உணர்ச்சியையும் இயைபுபட அமைத்துத் தனது அதீத நிலையைத் தீர்த்துக்கொள்ள முனைகிறாள். தம்மை மானுட நிலையிலேவைக்காது கண்ணனுடன் ஒன்றுபடுத்திவிடத் துடிப்பதைப் பல நிலைகளிற் காணமுடிகின்றது. காமதேவனை விளித்துப்பாடும் பகுதியிலே, 'கண்ணனோடு முழுவிக் கலக்கவேண்டுமென்ற ஆவல் மேலீட்டினாற் பாவனை மீதூரப் பாடுவதைக் காணலாம்'[1] தன்னை ஆண்டவனுக்கே அர்ப்பணித்த பக்தையின் அதீத பக்தியுணர்வையும் அதனூடே கலந்த உலகியற் காதலுணர்ச்சியையும் தான் ஒரு மானுடப் பெண் என்ற நினைவின்றியே

1. திருவல்லிக்கேணி. வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் ஆழ்வார் வரலாறு பக்கம் - 25.

வெளிப்படுத்துகிருள்: ''நெஞ்சை நெருப்பாக்கும் காதலுணர்ச்சியின் தன்மையையும், அத்தகைய உணர்ச்சியுடன் காதலிக்கும் மணாளன் என்று கொண்டவன் மீது எழும் பாசத்தின் பரிணமங்களையும், அவனுக்காக ஏங்கித் தவிக்கும் பெண்மையின் அவஸ்த்தைகளையும் வெறியுடன் பாடியதை ஆண்டாள் பாடல்களிற் காணலாம்''[2] காமனை வழிபட்ட பகுதியில் உண்மையான நியம உணர்ச்சியுடன் வழிபாடு செய்ததையும் காணமுடிகிறது:

''வெள்ளை நுண்மணல் கொண்டு தெருவணிந்து
வெள் வரைப் பதன் முன்னம் துறைபடிந்து
முள்ளு மில்லாச் சுள்ளி யெரி மடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா''[3]

என்று கூறும் போது வழிபாட்டு முறையையும் சுட்டுகிருள். கண்ணன் மீது கொண்ட அன்பை இது தெளிவாகப் புலப் படுத்துகின்றதெனலாம். வாழ்க்கையில் நுழையும் பருவமெய்தி யவர் அனுபவிக்கவேண்டிய இன்பத்தையும், தெய்வீகமாகப் பெற்ற பெண்மையின் துடிப்பையும், உள்ளத்தின் உணர்ச்சி மூலம் சித்திரிக்கும் தன்மையிற் பாடல்கள் அமைகின்றன. ஆண்டாளின் இந்த நிலையை மதுர பத்தியினைக் கடந்த நிலையாகிய மகாபாவனை யெனலாம். ''இறையன்பு, தஸ்யம், ஸக்யம், வாத்ஸல்யம், மதுரம் என நான்கு வகைப்படும் என ஸ்ரீ சைதன்ய சித்தாந் தம் கூறும். இந் நான்கினுள் மிக உயர்ந்தது மதுர பக்தியா கும்.'' [4] இந்நிலையைப் பெற்றவர்கள் கோபிமார்களே; கண்ண னுடன் கூடும்போது தம்மையும் கண்ணனையும் மறந்து பேரின் பத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். காமம் எள்ளளவும் அற்ற இந்நிலையைக் காம நினைவுடையார் சிறிதும் பெறமுடியாது. உடலுணர்ச்சி முழுதாக அற்றுப் போய்த் தெய்வானுபவப் பேற்றின் உயர்ந்த அனுபூதி நிலையில் இறைபணிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த நிலையே இது எனலாம்; இறை யன்பினுள்ளே தாம் அடங்கித் தமக்குள் இன்பத்தை அடக் கும் நிலையே இஃது. வைஷ்ணவ சித்தாந்தப்படியமைந்த இச் சாதன பக்திக்கு அப்பாற்பட்ட மகாபாவனையைச் சேக்கிழார் பெரிய புராணத்திற் காட்டும், 'வீடும் வேண்டா விறல்' என்ற நிலையுடன் ஒப்பிடலாம். [5] கண்ணனை இதயத்தே நிறுத்தி அவன் வயப்பட்ட ஆண்டாளின் உணர்வு முதிர்ச்சி நிலையையும் இத் தெய்வானு பவப் பேற்றினை அடையும் முயற்சியின் ஒருபடியெனலாம்.

2. ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் - தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி. பக்கம் - 190
3. நாலாயிரதிவ்விய பிரபந்தம். - மாதவதாசன் பதிப்பு. பக்கம் - 125 - 505.
4. திரு அருள் மொழி (பதிப்பு 1943) ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் பக்கம் - 96.

''ஞானமும் பக்தியும் ஒன்று கூடும்போது இறைவனே எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பும் இருப்பதைப் பிரபன்னன் காண்கிறான்''[6] இந்த நிலை தான் நம்மாழ்வார் காட்டும்,

''உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம்
கண்ணன்...........................................................''[7]

என்ற நிலையாகும். கண்ணன் மீது காதல் கொண்ட ஆண்டாளின் மனோநிலையும் இவ்வாறானதே. கண்ணன் வடி வழகில் மயங்கி அவனுக்கே தன்னை அர்ப்பணஞ்செய்து மணஞ் செய்ததாகக் கனவுகண்டு பிரிந்திருக்கும் தலைவி நிலையிலே மனக் கவற்சியடைந்து வருத்தத்தின் மத்தியில் அல்லல் விளைத்த அழ கனைச் சேரத் துடிக்கிறாள். அதீத பக்தியினால் பிரபத்திநிலை வரும்போது பக்தன் தனக்கென ஒன்றைக் கோராது இறைவன் இஷ்டப்படியே தன்னைவைத்து அனுபவிக்கும்படி விட்டு விடுகி றான். பயன் கருதாத இவ் விலட்சியக் காதலையே ஆண்டாள் அவாவினாள் எனலாம். இதனை அனுபூதி நிலையின் ஒரு படி என்பர். ''அனுபூதி நிலையிற் பெறும் அனுபவத்தை மொழிக ளாற் சொல்லமுடியாது. அதனால் அவர்கள் குறியீடுகளின் வாயிலாக வெளியிடுகிறார்கள். அவர்கள் கையாளும் குறியீடுகள் காதல் கல்யாணம் ஆகியவையாகும். தம் அனுபவ வேளையில் அனுபூதிமான்கள் வெளியிடுவதெல்லாம் அவர்கள் வாயிலாகக் கடவுள் வெளியிடுவதாகும்.''[8] எனவே ஆண்டாள் பிரபத்தி நிலை யிற் பெற்ற அனுபூதிச் செல்வமே நாச்சியார் திருமொழி எனக் கூற லாம்.

கண்ணன் மீது காதல் கொண்ட பெண்கள் பலர். வட நாட்டுக்கு ராதை போலத் தமிழ் நாட்டிற்கு நப்பின்னையைக் கூறுவர். நப்பின்னை காதல் பற்றிய விரிவான இலக்கியங்களைக் காணமுடியாது. ராதையின் காதல் உறவு கண்ணனுடன் ஏற் பட்ட தெய்வீக இயைபு. இத் தெய்வீக இயைபு பாலுணர்ச்சி நிலை சார்ந்த மானுட நிலைக்கு அப்பாற்பட்டதென்பர்.[9] ராதை பெற்ற காதல் அனுபவங்களை வடநாட்டு இலக்கியங்களில் நுணுக்கமாகப் புலப்படுத்தியுள்ளனர். வங்கநாட்டு இலக்கிய

5. M. A. Dorairangasamy The Religion & Philosophy of Thevaram Vol. II Page - 1186
6. திரு அருள் மொழி (பதிப்பு 1943) ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் பக்கம் 77.
7. நலாயிரதிவ்விய பிரபந்தம் - மாதவதாசன் பதிப்பு பக்கம் 669 - 3293.
8. தத்துவப் பேராசிரியர் டாக்டர் கே. வி. கஜேந்திரகட்கர் - கலைக்களஞ்சியம் Vol. III பக்ககம் 278
9. W. G. Archer. The Love of Krishna Page - 75.

கர்த்தாக்கள் கண்ணன் ராதை பற்றிய பாவங்களை ரஸ பாவம் ததும்ப சற்று விரஸ நிலையிற் கூடக் கூறியுள்ளனர்.[10] தன்னையே அர்ப்பணஞ் செய்யும் ராதை நிலை போன்ற ஒப்புயர் வற்ற கூட்டையே ஆண்டாள் கண்ணனிடத்தில் எதிர்பார்த்தாள் என லாம். பெரியாழ்வாரின் செறிவினுல் ''கிருஷ்ண லீலா ரஸபாவங் களில்' ஈடுபட்ட ஆண்டாளின் மனம் இவ்வாருன பாவனையில் ஈடுபட்டதில் வியப்பில்லை.

உலகியல் வாழ்க்கையிலே உயர்ந்த இலட்சியங்களை எவ்வ ளவுக் கெவ்வளவு நெறிப்படுத்த முனைகின்ருேமோ அவ்வளவுக் கவ்வளவு வாழ்க்கை துன்பமயமானதாக இருக்கும். இயங்கும் உலகிலே காணமுடியாத கண்ணனை அகத்திலே நிறுத்தி அவனை அடைய அவாவிய ஆண்டாள் வரலாறு பலவித அனுபவங்கள் கொண்டதை அவதானிக்கலாம். ஆண்டாளின் அனுபவங்கள் நிறைந்த ஆத்ம சரிதத்தை ஆன்ம அழகின் வளர்ச்சியுடன் வரையிட்டுக் கண்டு கொள்ளலாம். குழந்தைப் பருவ உணர்வு களையும், கன்னிப்பருவ நினைவுகளையும் பக்திப் பெருங் காதலை யும், இறைவன் ஆட்கொண்டதையும் கலந்து அனுபவப் பொதி வாக நாச்சியார் திருமொழிமூலம் வெளிப்படுத்துகிருள். இவ் வாருன அக உணர்வே பக்திப் பாடலுக்கும், அகப்பாடலுக்கும் அடிநாதமாக ஆதார சுருதியாக விளங்கும் என்பர்.[11] பெரி யாழ்வாரின் பக்தி வாழ்க்கை இலட்சியங்களுக்கு ஆண்டாளின் பாடலை இலக்கியமாகவும் கொள்ளலாம். ஆண்டாளின் மன திற் கண்ணனைக் காதலனுக வரிக்கும் நினைவை ஏற்படுத்திய தும் பெரியாழ்வாரின் இயைபேயெனலாம். கண்ணன்மீது கொண்ட காதலின் ஆழ்ந்த அனுபவமாக எல்லைமீறிய உணர்ச்சி களைச் சொல்லோவியமாக வெளிப்படுத்துங்கால் மானுட உணர்ச்சியும் தெய்வீக உணர்ச்சியும் வேறறக் கலந்து விடுகின் றது.' 'மானுடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்'[12] என் பதன் மூலம் பரமாத்மாவின் இயைபிற்கு அவாவி ஒன்று சேரத் துடிப்பதையும் காணலாம்.

இத்துடிப்பின் வளர்ச்சி, 'வண்ணனுக்கே பணிசெய்து வாழப் பெருவிடில் நான் அழுதழு தலமந்தம்மா வழங்க ஆற் றவும் அது உனக் குறைக்குங் கண்டாய்'' என்ற வைராக்கிய பக்தியை ஏற்படுத்துகின்றது. அடக்க முடியாத அன்புக் காதல் மேலீட்டால் கூடவிழைத்தும் இத்துயர் அகலவில்லை. பொதும்

10. டாக்டர். சுகுமார் சென். வங்க இலக்கிய வரலாறு (பதிப்பு) 1965) பக்கம் - 160.
11. கலாபரமேஸ்வரன். 'இந்துதர்மம்' 1965 - 66. பக்கம் 41.
12. நாலாயிரதிவ்விய பிரபந்தம். மாதவதாசன் பதிப்பு பக்கம் - 125 - 508

பினில் வாழும் குயிலை விளித்துத் தன் உள்ள நிலையைச் சுட்டிக் கூவுவாய் என அங்கலாய்க்கிருள். இந்நிலையில் ஆண்டாள் வாயி லாக வரும் ''காமம் மிக்க கழிபடர் கிளவி'', அவள் ஆற்ரு மையையும் உணர்ச்சியின் வளர்ச்சியையும் காட்டுகிறது எனலாம்.

பரமாத்மாவாகிய கண்ணனை மானுடனுகப் பாவனைசெய்து வரித்த ஆண்டாள் மாயவன் தன்னை மணம் செய்த நிலையைக் கனவு கண்டதாகத் தோழிக்கு உணர்த்தும் வாயிலாகத் தன் உணர்ச்சிக்கு அமைதி காண முனைகிருள். எனினும் ஏங்கும் இத யத்திற்கு அங்கலாய்ப்பே மிகுகிறது. இச் சூழ்நிலையில் கண்ண பிரான் கரத்துள்ள சங்கை விளித்து,

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே''[13]

எனச் சற்று அதிகமாகவே தன் அடங்காத உணர்ச்சியை யும் பக்தியையும் வெளியிடுகிருள். தொடர்ந்து மேகத்தைத் தூது விடுகின்ருள். இப்பகுதிப் பாடல்கள் ஒரே பிரலாப மயமாகவே காணப்படுகின்றன. ''குயில்காள்! மயில்காள்! கருவிளைகாள்! நறுமலர்காள்!'' என்றெல்லாம் அரற்றுகிருள். 'என் கோவிந்தன் குணம்பாடி அளியத்த மேகங்காள் ஆவி காத்திருப்பேனே,''[14] என உரிமை மனேநிலையுடன், 'என் கோவிந்தன்', எனச் சற்று அழுத்தம் கொடுத்துப் பாடுகிருள். இந்நிலையில் மலர்களும்' குருகினங்களும், களிநிலையிற் திரிதரும் சிறுபிராணிகளும் விரகதாபத்தையும் கண்ணன் மேல் மோகத்தையும் மிகைசெய்கின்றன. காணும் பொருள்களெல்லாம் கண்ணனுகவே ஆண்டாளுக்குக் காட்சியளிக் கின்றன. கரைபுரண்டோடும் காதல் வெள்ளத்திற் பற்றுக் கோடின்றித் தவிக்கும் அனுபவங்கள் பொதிந்துள்ள ஆண்டாள் கூற்றுக்கள்'[15] பித்த நிலையில் உழலும் மனேபாவத்தையும், காதல் காரணமாகத் தன்னைக் கைவிடமாட்டான் என்ற மனே தைரியத்தையும் காட்டுவதுடன் உணர்ச்சியின் வளர்ச்சி நிலையை யும் தெளிவுபடுத்துகிறது.

உணர்ச்சிக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஆண்டாளின் மனேபாவம் தொடர்ந்துவரும் பகுதிகளிலே சிற்றின்ப முலாம் பூசப்பெற்றுப் புலனுணர்ச்சியுடையதாகத் தெரிகின்றது. '...........

13. நாலாயிரதிவ்விய பிரபந்தம். மாதவதாசன் பதிப்பு பக்கம் - 137 508.
14. நாலாயிரதிவ்விய பிரபந்தம் பக்கம் - 139 - 579.
15. பேராசிரியர். வி. செல்வநாயகம், தமிழ் இலக்கிய வரலாறு பக்கம் - 99
(3ம் பதிப்பு 66)

வண்ண வாடை கொண்டென்றன் வாட்டம் தணிய வீசீரே', [16] என்பன போன்ற அடிகளில் விரகதாபத்தால் ஏற்பட்ட நிலைமாற வழிகூறும் வகைகளை கூறுவதுபோலத் தெரிகிறது. இவ்வாருக இரங்கியேங்கிய ஆண்டாள் ஈற்றிலே தன் மனோரதம், பிருந்தா வனத்தே கண்ணனைக்கண்டு நிறைவெய்தியமையைக் கூறி முடிக்கிருள்.

எனவே ஆண்டாளின் இலட்சியக் காதலைப் புலப்படுத்தும் நாச்சியார் திருமொழி, உள்ளக்குமுறல்களையும், குமையும் தூய பெண்மை உள்ளத்தின் துடிப்பையும் கூறுவதன்மூலம் இன்ப உணர்ச்சிக்கு உருவளிப்பதுபோலப் படினும் சிற்றின்ப உணர்வு வழியே பேரின்ப விளக்கம் காட்டுகிறது எனலாம். முழுமையான உணர்ச்சியனுபவம் வளர்ச்சியடைந்து முடிவதை அவதானிக்கும் போது, ஒவ்வொரு பத்தையும் ஒவ்வொரு நாடக நிகழ்ச்சிகளை அடக்கிய சொற்சித்திரமாகவும், நிகழ்ச்சிகளைத் தொடர்பாக வகுத்து நாடக முறையினை அமைக்கமுயன்ற முயற்சியின் விளைவு எனவும் கூறலாம் போலத் தெரிகிறது.

---

16. நாலாயிரதிவ்விய பிரபந்தம் மாதவதாசன் பதிப்பு பக்கம் - 150 - 627.

---

யான் மெய்யைப்பற்றி நிற்பவன். மெய் ஒருக்காலும் பொய்யோடு ஒன்றுசேராது. உலகமுழுவதுமே என்னை எதிர்த்து நிற்பினும் இறுதியில் மெய்வெல்வது திண்ணம்.

x x x

எழுந்திருங்கள் - உழையுங்கள் - இவ்வாழ்வு எத்தனை நாள்? இவ்வுலகில் வாழ்ந்ததற்கு அறிகுறியாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். அவ்வாறு செய்யாவிடில் உங்கட்கும், மரங்கட்கும், கற்கட்கும் யாது வேறுபாடு? அவையும் தோன்றுகின்றன அழிகின்றன.

x x x

எவனது நெஞ்சு ஏழைகட்காக துயரத்தில் ஆழுமோ அவனையே யான் மஹாத்மா என்பேன்; அன்றேல் அவன் துராத்மாவே.

பிறர்க்கு முத்தியை வழங்குவதற்காக நீயே நரகிற்குச் செல்க. என்னுடைய சொந்தமெனப் பெயரிடற்குரிய முக்தியொன்றும் இங்கு இல்லை.

— விவேகானந்தர்

# திருவாசகம் காட்டும் மணிவாசகர்

கார்த்திகேசு சிவத்தம்பி, M. A.
(தமிழ்த்துறை, வித்தியோதயப் பல்கலைக்கழகம்.)

கவிஞர்களது மனப் போராட்டங்களையும் வாழ்க்கைப் பின்னணியையும் அவர்களது ஆக்கம் மூலம் அறிந்து கொள்ளும் முறைமை தமிழ்மரபில் போற்றப்படுவதில்லை. கவிஞர் கரந்து நின்று, பாத்திரத்தின் கூற்ருகவே செய்யுட்களை இயற்றுவதும், தொடர்நிலைச் செய்யுட்களை இயற்றுவதும் இதற்கு ஓரளவு காரணமாக அமைகின்றன. மேலும் புலவர் அறிவால் உயர்ந்தவர். அவர்கள் மனித பலவீனங்களுக்கு உட்படாதவர்கள் என்ற கருத்தும் தமிழ்நாட்டில் நிலவிவருவதையும் மனங்கொளல் வேண்டும். கவிஞர் தன்மையிற் கூறுவனவற்றையும் அவர் மீது சார்த்திப்பார்க்கும் வழக்கம் எமது இலக்கிய மரபில் இல்லை.

X X X

மாணிக்கவாசகர் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெறுபவர். அரசியலாதரவு பெற்றும், அரசியலாதரவுடனும், வைதீக சைவத்தைத் தமிழ்நாடெங்கணும் பரப்பிய மூவர் காலத்துக்குப்பின்னர் தோன்றிய வாதவூரரின் கவிதையில், பக்தி, மனிதமனத்தின் உணர்வாழத்தைத் தொடும் அற்புத சக்தியாகப் பரிமளிக்கத் தொடங்குகின்றது. ''மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் தத்துவஞானப் பொருண்மை வளம்பெற்று தேவாரப் பாடல்களில் உள்ளதைவிட அதிகமாய்க் காணப்பெறுகிறது'[1] அறிவைக் கடந்த ஒரு நிலையினை எடுத்துக் கூறச் சொற்களைக் கருவியாக்கும் முயற்சியில் மாணிக்கவாசகர் ஈட்டும் வெற்றி திருவாசகத்தைச் சைவ பக்தி இலக்கியங்களுள் முதன்மையானதாக்குகின்றது. மணிவாசகரது இன்னொரு ஆக்கமாம் திருக்கோவையார். திருவாசகத்தைவிட இலக்கியச் சிறப்பிற் குறைந்ததே. அதுகாலவரை இலக்கிய அந்தஸ்துப் பெருத பக்திப் பொருளை, இலக்கிய நிலைக்குயர்த்

1. சுப்பிரமணிய அய்யர் ஏ. வி - தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி பக் 156, சென்னை 1959.

தும் நோக்குடன், அதனை அகத்துறை மூலம் எடுத்துக்கூறியது திருக்கோவையார். பாண்டிக்கோவை மரபையொட்டி, வந்தது சிற்றம்பலக்கோவை. அது மணிவாசகரது இலக்கிய திறமையைப் புலப்படுத்துவது. ஆனால் வாதவூரடிகள் என்ற ஞானியின் மனப்போராட்டங்களையும், இறையனுபவத்தையும், ஞான நிலையையும், ஆத்மதுடிப்பையும் காட்டுவது திருவாசகமே.

மரபு நெறி பிறழா முறையில் மாணிக்கவாசகரை அறிமுகப்படுத்தும் மரபு நெறிதவறு அறிஞர்கள், திருவாசகத்திற் காணப்படுவனவற்றை மறைத்தும், மறைக்கமுடியாத விடத்துத் திரித்தும் கூறி அவரது முழுத்தோற்றப் பொலிவையும் மறைக்கின்றனர்.

> "ஒரு பெண் தம் முன்னிலையில் நின்று காமச் செயல்கள் காட்ட, அச்செயல்கள் தீங்கு பயப்பன என்று அறிந்திருந்தும், சிறிது மனம் சென்றதாகக் கொண்டு இரங்கியதாம். இத்தகைய நிகழ்ச்சி உலகியலில் எளிதாக நிகழ்வதுண்டு. இங்ஙனம் நிகழுங்கால் உண்மையறிந்து, அகப்படாமல் விலகி உய்யவேண்டும் என்று உலகினர்க்கு அறிவுறுத்தற்பொருட்டு அடிகள் தம் பால் ஏறிட்டுக் கூறுவாராயினர். அடிகள் திருவருட் பேற்றிற்கு ஆளான பெருமை அளவிடற்கரியது. அங்ஙனமாகவும் தம்மையும் தம் செயல்களையும் மிக இழிவாகக் கூறிய இடங்கள் பலவாகும். அப்படிக் கூறிய நிகழ்ச்சிகளுக் கெல்லாம் அடிகளை ஆளாக்குதல் நம்மனோர்க்குத் தகுதியன்று"[2]

மாணிக்கவாசகரது கவிதைகளை ஆராய்வதற்கு முன்னரே, அவரைப்பற்றி மாற்றக்கூடாத சில கருத்துக்களை மனத்திருத்திக் கொண்டு கவிதைகளைப்படிக்க முனைந்தால், அவரைப் பூரணமாக விளங்கிக் கொள்ளமுடியாது போய்விடும். மேலும் கவிதைகளில் வரும் மனப்போராட்டக் குறிப்புக்களை அவை கூறும் கருத்துக்கியைய எடுக்காவிட்டால், அவற்றை விளக்கத் தத்துவ அமைதிகளைக் கையாளவேண்டிவரும்.

> "சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை யெல்லாம் அன்பினைந்திணை யொழுக்க வாயிலாக வெளிப்படுந்

---

2. கதிரேசச் செட்டியார். மு. திருச்சதகம், கதிர்மணி விளக்கம் பக். 279-80. புதுக்கோட்டை 1947

தூயதமிழ் மரபு பேணி அடிகள் திருவாசகத்தையும் செய்தார் என்பதற்கு நாலுட்பல சான்றுகள் புலனு கின்றன.''[3]

சைவசித்தாந்தம் நெறிப்படுத்தப்பட்ட தத்துவக்கோட்பாடானது கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டின் பின்னரே - அதாவது மெய் கண்டதேவர் காலத்துக்குப்பின்னரே.[4]

மாணிக்கவாசகரது பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அவர் நோக்கத்தையும் பண்பையும் வரையறுக்கத்தவறியதால் ஏற்பட்ட இடர்பாடே இது.

x x x

மாணிக்கவாசகரது திருவாசகப் பாடல்களை ஆராய்ந்த, மறைஞானவியல் (Mysticism) வல்லுநரும் தத்துவத்துறை அறி ஞரும் திருவாசகப்பாடல்களை, பிறமத, மொழி மறைஞானப் பாடல்களுடன் ஒப்புநோக்கிக் கூறுவன ஊன்றிக்கவனிக்கப்பட வேண்டிவை:

> ''இலௌகிக நிலையிலிருந்து அறிவெல்லை கடந்த தெய்வதரிசனம் வரையிலுள்ள ஆன்மயாத்திரையே திருவாசகமாகும். உன்னத பேரின்பத்தை உணர்ந் தறிய மாணிக்கவாசகர் மேற்கொண்ட முயற்சியில் அவருக்கு ஏற்பட்ட போராட்டங்களையும், இன்னல்களை யும், ஏமாற்றங்களையும் அத்திருப்பாடல்களிற் காண லாம்.''
>
> — கலைப்புலவர். க. நவரத்தினம் [5]

> ''தான் விடும் பிழைகளை நன்குணர்ந்த மாணிக்க வாசகர் படிப்படியாக முன்னேறி இறைவனை யடைந்து இன்புறுகின்றார். இறைவன்பால் அவர் கொண்டிருந்த பக்தி பிரவகித்துச் செல்வதை அவர் பாடல்கள் காட்டுகின்றன''
>
> —ஆர். டி. ரணடே [6]

---

3. நவநீதகிருஷ்ண பாரதியார் - க. சு. திருவாசகம். ஆராய்ச்சிப் பேருரை பக். 10 தெல்லிப்பழை 1954.
4. செல்வநாயகம். வி. தமிழ் இலக்கிய வரலாறு பக். 135, யாழ்ப்பாணம் 1960.
5. Navaratnam. K. Studies in Hinduism. p. 182. Jaffna 1963.
6. Ranade R. D. In dian Mysticism. History of Indian Philosophy - Quoted in Tamil Culture Vol. III Nos. 3 & 4 - Madras 1954.

''தனிநிலை மத உணர்வின் தலைசிறந்த எடுத்துக் காட்டாக விளங்கும் இப்பாடல்கள், மாணிக்கவாச கரின் பல்வேறு மனநிலைகளைப் பிரதிபலிப்பதுடன், அன்பு கொழிக்கும் மதப்பிரயோகங்கள் பலவற்றையும் தன்ன கத்தே கொண்டுள்ளது''

—வயலற் பரஞ்சோதி.[7]

''பிறப்பு இறப்பு என்ற சுழிக்குள் அகப்பட்டுத் தவித் தும், அவ்வாபத்திலிருந்து காப்பாற்றக் கூடிய இருதய பூர்வமான உள்ளார்ந்த சிவபக்தி இல்லாததும் தவிக்கும் மனிதரின் நிலைகண்டு மாணிக்கவாசகர் இரங்கினார். இம் மனக்கிளர்ச்சியுடன், அவர்தன் அறியாமையை ஒப்புக்கொள்வதும் இளமைக்காலப் பிழைகளை ஒப்புக் கொள்வதும் அவருடைய பாடல்கள் சிலவற்றில் சிறப்புற விவரிக்கப்பட்டுள்ளன.

— சுரேந்திரநாத் தாஸ்குப்தா[8]

''அறியாமை, ஆசை, ஆகிய தளைகளாற் கட் டப்பட்டிருக்கும் ஆன்மா உண்மை ஞானத்தையும் இன்பத்தையும் அடைவதையும், அவ்வான்மாவின் விழிப்பையும், அதன் சந்தோஷத்தையும் இறும்பூது நிலையினையும், மூர்க்கத் தனத்தையும் சோர்வையும், போராட்டத்தையும் அமைதியின்மையையும், இறையடி சேருவதால் ஏற்படும் சாந்தியையும் திருவாசகம் தனது அழகான பாடல்கள் மூலம் அற்புதமாக எடுத்துக்கூறு கின்றது''

— எஸ். இராதாகிருஷ்ணன்[9]

பேரறிஞர்கள் சிறப்பாக எடுத்துக் கூறும் இப்பண்புகள் திருவாசகத்தில் அமைந்துள்ள முறை பற்றியும், அவை மாணிக்கவாசகரால் சித்திரிக்கப்பட்டுள்ள முறைபற்றியும் பார்த் தல் வேண்டும்.

x x x

திருவாசகத்தில் 51 பதிகங்கள் உள்ளன. பாடல்களின் முழுத்தொகை 658 ஆகும். இப்பதிகங்கள்யாவும் ஒரே இடத்

7. Paranjoti V. Saiva Siddhanta p. 25, London 1954.
8. Dasgupta, Surendranath. History & Indian Philosophy Vol. 5 Southern Schools of Saivaism p. 150. Great Britain 1955.
9. Radhakrishnan, S. Indian Philosophy. Vol. II p. 729. London 1956.

தில் ஒரே நேரத்தில் பாடப்பெற்றவையல்ல; எவ்வெவை எவ்வெவ்விடங்களிற் பாடப்பெற்றன என்பது பற்றிப் பூரண கருத்தொருமை கிடையாது. பாடப்பட்ட காலமும் காரணமும் பற்றியும் கடவுண்மாமுனிவர் கூறுவன யாவற்றையும் உண்மையென அறிஞருலகு ஏற்றுக் கொள்ளவில்லை.

மாணிக்கவாசகரின் பாடற்பொருளை அறிவதற்கு இவ்வைம்பத்தொரு பதிகங்களையும் நன்கு படித்து, வகுத்துக் கொள்ளல் வேண்டும்.

இப்பாடற்றொகுதி முழுதும் தனிப்பட்ட நூலாகவே ஆசிரியரால் அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்ற கருத்தை உள்ளடக்கி, ''சிவபுராணத்தைத் தற்சிறப்புப்பாயிரமாகவும், அதனையடுத்துள்ள மூன்று அகவல்களையும் நூல் வரலாறாகவும்'' கொண்ட நவநீத கிருஷ்ணபாரதியார் திருச்சதகம் சிவனைப் பாடநுகலும் பகுதியென்றும், நீத்தல் விண்ணப்பம், சிவன் மணிவாசகரை விட்டபகுதியென்றும், அதன்மேல் வருவன காதற் பாவனையானவும் பிறவும் என்று கூறிச் செல்கின்றார்.

வழக்கிலுள்ள பதிப்புக்களில், பதிகத் தொடக்கத்திற் குறிக்கப்பட்டுள்ள தத்துவக் குறிப்புக்கள், அவ்வப்பதிகங்களை சித்தாந்த நெறிக்கொண்டுபார்த்து, சூட்டப்பெற்றவையாகும்.

திருவாசகத்திலுள்ள பதிகங்கள்யாவும் ஒரே காலத்திற் ஓரேயிடத்திற் பாடப்படவில்லையெனின் அவை இவ்வொழுங்கு முறையில் எப்பொழுது அமைக்கப்பட்டன என்பது பற்றிய வினவுக்கு விடையில்லை. ஆனால் திருவாசகம் இப்பொழுது அமைந்துள்ள முறையில், பதிப்பு வேறுபாடுகள் உண்டென்பதும், பாடல்கள் இடம் மாறிவந்துள்ளன என்பதும், தெரிய வருகின்றது.[10]

பாடியவரின் மனநிலையை அடிப்படையாகக் கொண்டு வகுக்கும் பொழுது, திருவாசகப்பாடல்களில் உணர்ச்சி வெளிப்பாடு இருவகைப்பட்டு நிற்பதைக் காணலாம்.

(அ) கற்பித உணர்ச்சி நிலையிற் பாடப்பெற்றவை

(ஆ) தன்மைநிலையிற் பாடப்பெற்றவை

கற்பித உணர்ச்சிநிலை அகத்துறையில் வரும் உணர்வு நிலைகளாம்.

---

10. (அ) அருணாசலம், மு. இரு திருவாசகப்பதிப்புக்கள். சித்தாந்தம் Vol 28. No. 12. 1965

(ஆ) மாணிக்கவாசகமுதலியார், சு. முத்து, திருவாசகத்திருத்தம் மாணிக்கவாசகர் விழாமலர், காரைநகர் யாழ்ப்பாணம் - 1960.

தேவாரகாலம் முதல் அகத்துறை வழி பக்தி உணர்ச்சி வெளியிடப்பட்டுவந்துள்ளது. சைவநாயன்மார்களிலும் பார்க்க, வைணவ ஆழ்வார்களே இம்முறையிற் சிறக்கப்பாடியவர்கள். காலத்தாற் பிந்திய மாணிக்கவாசகர் தனக்குமுன்னர் பாடியவற்றை மரபாகக்கொண்டு பாடினுர் எனக்கொள்ளலாம். திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாக்கம், திருப்பள்ளியெழுச்சி ஆதியன அந்நிலையில்தோன்றிய பாடல்களே. இவ்வகத்துறை நிலைப்பாடல்களிற் சில மூவரால் பயிலப்படாதவை. பல ஆழ்வார்களாற் பயிலப்பட்டவை. பாவை, உந்தி, தும்பியைக் குயிலை விளித்துப்பாடல் அன்னையை நோக்கிக் கூறல் முதலியன மணிவாசகருக்கு முன்வாழ்ந்த ஆழ்வார்களாற் கையாளப்பெற்றவை. நாட்டுமக்கள் வாழ்க்கைமுறையில் இடம்பெற்ற அகத்துறைவழி வழக்குகளை இலக்கிய வாகனமாக்கினுர் மாணிக்கவாசகர். பொற்சுண்ணம், சாழல், தெள்ளேணம் முதலியன உதாரணங்களாம்.

கற்பித நிலையில் நின்று பாடும் ஒருவர், தான் கற்பித்துப் பாடும் பாத்திரமாகவே மாறிநின்று பாடுவர். அதாவது அத்தகைய பாடல்களைப் பாடும்பொழுது, அப்பாத்திரம் எவ்வாறு சிந்திக்குமோ, எவ்வாறு கூறுமோ அவ்வாறே பாடல்வேண்டும். அப்பாடல்கள் அம்முறையில் அமையாவிட்டால், அக்கற்பித மனோநிலை நன்கு அமையவில்லையென்றே கொள்ளவேண்டும்.

மாணிக்கவாசகரது அகத்துறைப் பாடல்களைப் பார்க்கும்பொழுது, ஒரு பேருண்மை புலப்படுகின்றது. தன்மைநிலையில் நின்று பாடப்பட்டுள்ள பாடல்களிற் காணும் மனப்போராட்டம் அகத்துறைப்பாடலிலும் காணப்படுகின்றது. அதாவது, தான் [அந்தப்பாத்திரமாக மாருது, அப்பாத்திரத்தின்] மனநிலையினையொத்த ஒரு நிலையில் நின்று தன் மனப் போராட்டங்களையே கூறுகின்முர்.

இதற்குரிய சான்றுகள் பின்வருமாறு.

திருவெம்பாவை—4
திருவம்மானை — 2, 5
திருப்பொற்சுண்ணம் — 8
திருக்கோத்தும்பி — 2, 4, 8, 11
திருத்தெள்ளேணம் — 8, 14

திருச்சாழல் — 10
திருப்பூவல்லி — 3
திருவுந்தியார் — 13
திருத்தோணோக்கம் — 4
திருப்பொன்னூசல் — 5
அன்னைப்பத்து — 2
குயிற்பத்து — 4, 10
திருத்தசாங்கம் — 9
திருப்பள்ளியெழுச்சி — 4

அகத்துறைப்பாடல்களில் அவ்வக்கிளவிக்குரிய புலனின்பக் குறிப்பு மேலிட்டு நிற்கும். ஆண்டாள் பாசுரங்களையும், பெரியாழ்வார் தாயாக நின்றுபாடும் பாசுரங்களையும் நோக்குக. ஆனால் மாணிக்கவாசகரோ இறையருளினால் தான் பெற்ற சித்த இன்பத்தினையே கூறிச்செல்கின்றார்.

மேலும், ஒரு பெண் இன்னொரு பெண்ணிடத்துக் காணும் கவர்ச்சிக்கும், ஓர் ஆண் ஒரு பெண்ணிடத்துக் காணும் கவர்ச்சிக்கும் 'வேறுபாடு' உண்டு. பெண்கள் தம்மிடையே பாடுவதாக அமைந்துள்ள திருவாசகப் பாடல்களில் பெண்களிடத்து ஆண்கள் காணும் கவர்சியமிசங்களே சிறப்பிடம் பெறுவதைக் காணலாம். உதாரணங்களுட்சில வருமாறு.

திருவெம்பாவை — 4, 13, 15
பொற்சுண்ணம் — 2, 8, 10. 13
பொன்னூசல் — 1, 2, 3, 5, 9

எனவே கற்பித நிலைப்பாடல்களும் தன்மை நிலைப்பாடல்களைச் சார்ந்து நிற்பனவாகவேயுள்ளன.

தன்மை நிலைப்பாடல்களை ஆராயும் பொழுது மாணிக்கவாசகரின் மனநிலை தெட்டத்தெளிவாகின்றது.

இறைவனையடைதற்கு வேண்டிய தகுதி தன்னிடத்து இல்லாதிருந்தும் இறைவன் தன்னை ஆண்டுகொண்டான், என்றும் அவ்வாறு தன்னை ஆண்டுகொண்டதால் இறைவனது அருட்குணம் நன்கு புலனாகின்றது என்றும், தகுதியின்மையறிந்தும் தன்னையாண்டுகொண்ட இறைவனுக்குத்தான் தக்கமுறையில் தன் நன்றிக்கடனைச் செலுத்தவில்லையேயென்றும், அவ்வாறு நன்றிக்கடனைச் செலுத்தாது உள்ளம் அலைகின்றதே என்றும் கூறுகின்றார். இவ்வுணர்ச்சிகளே பாடல்களில் காணப்படுகின்றன. ஆனால் எல்லாப் பாடல்களிலும் இவ்வுணர்ச்சிகள்யாவும் ஒரே அளவு நிலையில்

வருவதில்லை. ஒவ்வோரிடங்களில் ஒவ்வொன்று தலைதூக்கி நிற்க லாம். ஆனால் மற்றவை அடிச்சரடாக ஓடிக்கொண்டே நிற்கும்.

திருப்பெருந்துறையிற் குருந்த மரத்தின் கீழிருந்த தவ சிரேட்டரைக்கண்டு ஞானசிட்சை பெறுவதற்கு முன்னர், இவர் கடவுள் அநுபூதிபற்றி அதிகம் சிந்திக்கவில்லையென்பது பாடல்கள் மூலம் புலனாகின்றது.

கடவுள் அநுபூதி பெற்ற பின்னரும், தன்னிடத்து இரு முக்கியமான குறைபாடுகள் இருப்பதாக அவர் கூறுகின்றார்.

ஒன்று, தன் உள்ளத்தின் உருக்கத்தை அதே உணர்ச்சித் தாகத்துடன் உடலாற்காட்ட முடியாதிருப்பது. இதனைத் தன் செய்ந்நன்றி நினையாமையாகவே கொள்கிறார். இதற்கு உதாரணம் நூல்கள் முழுவதும் பரந்து கிடக்கின்றது.

இரண்டாவது, பெண்கவர்ச்சியினால் ஏற்படும் மனத்தடு மாற்றம் பற்றிய கவலையுணர்வு. இது முதலாவதன் அடியாகத் தோன்றுவதே.

மாணிக்கவாசகர் போன்ற கவிஞர் பெண் இச்சையால் உழன்றாரெனக் கொள்ளுதல் கூடாது என்பர். சிலர் அது அவர் கொண்டுள்ள இச்சையல்ல என்பர். இவைபற்றியாராய்வதற்கு முன்னர், இம்மனநிலையைக் காட்டும் பாடல்கள் திருவாசகத்தில் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

திருச்சதகம் —19 ,40, 57
நீத்தல் விண்ணப்பம் — 2, 3, 5, 28, 38, 40 41, 44, 46
அடைக்கலப்பத்து — 4, 5, 6, 7
ஆசைப்பத்து — 10
அதிசயப்பத்து — 1
திருவேசறவு — 6
குலாப்பத்து — 7
அச்சோப்பத்து — 3, 5, 6, 7 8

இத்தகைய பாடல்களுக்கு அமைதிகாண முனைந்தோர் கருத்துக்களை கட்டுரையாரம்பத்திற் காண்கின்றோம். அவர்கள் கருத்து இது கற்பித உணர்ச்சியே அவரிடத்திருந்ததன்று என் பதே. மாணிக்கவாசகர் பொய்ம்மை நிலையொன்றைக் கற்பித்துப் பாடுவரேல், அவர் அநுபவித்ததாகக்கூறும் மற்றைய வற்றை மாத்திரம் உண்மையான உணர்ச்சிகள் எனக்கொள்வது எங்ஙனம்?

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப்பை யர், நீத்தல் விண்ணப்பப்பதிகமுன்னுரையில் கூறுவதை நோக்கல் வேண்டும்.

'இப்பாடல்களைக் கொண்டுபார்க்கும்பொழுது அவரை வருத் திய இரு இன்னலுணர்வுகள் புலனுகின்றன. ஒன்று, கோயில்களில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவந்த பெண்களின் கவர்ச்சி. இதனைப் பிறபாடல்களிலும் கண்டுள்ளோம். இந்து உரையாசிரியர்கள் இவற்றுக்கு வேறு விதமான ஞான விளக்கங்கள் கூறுவர். அவை ஏற்கப்படத்தக்கனவல்ல. ஆனல் அத்தகைய விளக்கங்களால் எத் தகைய பாதகமும் ஏற்படாது. இப்பகுதியில் வரும் பாடல்களிலும், பிறபாடல்களிலும்; தான், மேற்கொண்ட சத்தியத்தை மீற வேண்டிவந்த தன்மை குறித்துக் கவலையுறுகின்ருர்.'11

மணிவாசகப்பெருமானுக்கு அக அலைச்சலாகவே இருந்த இவ்வுணர்வினை நாம் புறத்திளைப்பாகக் கொள்ளவேண்டியதில்லை.

மேலும், இவ்வக அலைச்சலையும் அவர் வென்ருர் என்பதை யுணர்த்தும் பாடல்களும் பல உள்ளன. உயிருண்ணிப்பத்து, அச் சப்பத்து, பிடித்தப்பத்துப் போன்ற பதிகங்களில் அவ்வெற்றிநிலை யைக் காணலாம்.

இத்தகைய குறைபாடுகள் தன்னிடத்து இருப்பதை நன் குணர்ந்ததினுல், அவர் தன்னை மிகவும் தாழ்த்தியே பாடுகின்ருர். இவ்வுணர்வும், இறைவனது பெருமைகளை எடுத்துக்கூறும் பண்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்து கிடக்கின்றன. இறைவன் பெரு மையை நினைக்கும்பொழுது தனது சிறுமையை உணர்கின்ருர். தன்சிறுமை பற்றி உணரும்பொழுது இறைவனது பெருமையை எண்ணியெண்ணி வியக்கின்ருர்.

கிறித்தவர்கள் மாணிக்கவாசகரது திருவாசகப் பாடல்களைப் பெரிதும் விரும்பி இரசிப்பது இப்பண்பினுலேயே; கிறித்தவ ஞானிகளும் இத்தகைய ஒரு மன நிலையினையுடையவர்களே. தத்துவ அடிப்படையிற் காணப்படும் பல வேறுபாடுகள் இவ்வுணர்ச்சிநிலை யின் மேலே கிளம்புவதில்லை. இந்தியத் தெய்வக் கோட்பாட்டினை ஆராய்ந்த நிக்கொல் மக்னிக்கொல் என்ற அறிஞர் இவ்வுண்மையை நன்கு எடுத்துக் கூறியுள்ளார். 12

---

11 Pope G. U. Tiruvacakam (Tr) p 85. Oxford 1900.

12 Macnicol, Nicol —Indians theism p 173 - London 1915

மணிவாசகரது மனம் இந்த நிலையில் இருப்பதனல் மதம் என்பது அவர் அகத்துள்ளே நின்று ஆழச்செறிந்து ஒளிவிடும் ஓர் உணர்வாகிவிடுகின்றது. அதாவது இறைவணக்கம் என்பது முற்றிலும் அகத்தின்பாற்பட்ட ஒரு விடயமாகவே ஆகிவிடுகின்றது. இவர் பாடல்கள் சம்பந்தர், சுந்தரர் முதலியோரது பக்தியுணர்வு போன்று, சூழ இருப்பவரையும் கவர்ந்திழுக்கும் புறவேகமற்றதாகவிருந்தாலும் தன் அகத்தில் ஏற்படும் மிக நுண்ணிய சலனத்தையும் சிலிர்ப்பையும் எடுத்துக்காட்டும் சித்தரத்திளைப்பாக அமைந்துள்ளது. இவருக்கும், மூவருக்குமுள்ள இம் முக்கிய வேறுபாட்டை தேவார, திருவாசகங்களின் இசையமைப்பிற் காணலாம். தேவாரங்கள்யாவும் எல்லோரும் சேர்ந்து இசைக்கத்தக்க பண்ணமைப்பும், தாள அமைப்பும் கொண்டனவாகவுள்ளன. கூட்டிசையிலேயே பூரண உணர்வையும் வெளிப்படுத்துவனவாகவே அவை அமைந்துள்ளன. திருவாசகத்திலுள்ள பெரும்பாலான பாடல்களுக்குப் பண்வகுப்பில்லை. 13

அகநிலைப்பட்ட உணர்ச்சிகளையே சித்திரிப்பதால், மாணிக்கவாசகரின் கவிதைகள் இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள உறவினை உணர்ச்சி பூர்வமாக வெளியிடுகின்றவையாகக் காணப்படுகின்றன. இதனலேயே பிற்காலத்துத்தோன்றிய சித்தாந்த விளக்கங்கள், திருவாசகத்தை சித்தாந்த இலக்கண விளக்கமாகக் கொண்டன.

மாணிக்கவாசகரது இறையனுபவம், அகநிலைப்பட்டதாகவும் ஆன்ம உணர்வாகவும் இருப்பதனல், அவர் இறைவனை உணர்ச்சிப்பிழம்பாகவே காண்கின்ருர். இறைவன்பற்றிய குறிப்புக்களும் விவரணங்களும், அவனை உணர்ச்சிப் பிழம்பாகவும், உணர்ச்சியால் அறியப்படுமொன்ருகக் காட்டுகின்றனவேயன்றி, உருவத் திருமேனியின் வருணனையாக அமையவில்லை. சிவன்பற்றிவரும் குறிப்புக்கள் பெரும்பாலும் அவன் செய்தனவாகக் கூறப்படுவனவற்றைக்கூறி அவன் பண்பை விளக்குவனவாகவேயுள்ளன. சிவனை அவனது பண்புகளைக் கூறியே விளிக்கின்ருர்; விவரிக்கின்ருர். உருவத்திருமேனியில் இலயித்துப் பாடவேண்டிய அகத்துறைப் பாடல்களிலே இறைவன் பெரும்பாலும் இம்முறையிலேயே போற்றப்படுகின்ருர்.

திருவெம்பாவை — 1, 4, 9, 10, 12, 18
திருவம்மானை — 2, 4, 6, 7, 12, 14, 16, 19,

---

13 இராசமாணிக்கம், மு. சைவசமயவளர்ச்சி - பக். 153 சென்னை 1958.
Jesudasan & Hephzibah Jesudasan - A History of Tamil Literature, p 88. Calcutta. 1961.

திருப்பொற்சுண்ணம் — 12, 13, 15, 20......
திருக்கோத்தும்பி — 3, 5, 7, 9, 10, 12, 13, 14
திருத்தெள்ளேணம் — 1, 14, 15, 17

இறைவனை அவ்வாறு பண்புருவினனாகச் சித்திரிப்பதால், பல உருவத்திருமேனிகளை ஏத்தும் பண்பு திருவாசகத்திற் காணப் படவில்லை. சிவன் ஒருவனே சிறப்பித்துப் பாடப்பெறுகின்றார்; ஏகதெய்வ வணக்கக் கோட்பாடுடையோர் திருவாசகத்தைப் பெரிதும் விரும்புவதற்கு இது காரணமாகும். தாயுமானவர் பாடலுக்கும் இக் கூற்றுப் பொருந்தும்.

திருவாசகப் பாடல்களைக்கொண்டு பார்க்கும்பொழுது, மாணிக்கவாசகர் இறையனுபவத்தைச் சாத்திர அறிவுக்கு அப் பாற்பட்ட ஒன்றாகவே கருதினார் என்பது புலனாகின்றது. அன்பு ஒன்றே தெய்வ அநுபூதியைப் பெற்றுத்தரத்தக்கது என்பது அவர் கருத்து; போற்றித்திருவகலில் இவ்வுண்மை சிறப்புற வெளிப்படு கின்றது.

இறையநுபவத்தைப் பெறுவதற்கேதுவாகிய அன்பு நிலையினை அவர் விவரித்துள்ளார்.

தப்பாமே தாம் பிடித்ததுசரியாத்
தழலது கண்டமெழுகதுபோலத்
தொழுதுஉளம் உருக அழுது உடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதுஎனும்
படியே ஆகி நல் இடையறா அன்பில்
பசுமரத்து ஆணி அறைந்தாற்போலக்
கசிவது பெருகிக் கடல்என மறுகி
அகம் குழைந்து அனுகுலமாய் மெய்விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச்சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர்பழித்துரை
பூணதுவாகக் கோணுதல் இன்றி
சதுர் இழந்து அறிமால்கொண்டு சாரும்
கதி அது பரமா அதிசயம் ஆகக்
கற்றாமனம் எனக் கதறியும், பதறியும்,
மற்று ஓர் தெய்வம் கனவிலும் நினையாது
அருபரத்த ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையைச்
சிறுமை என்று இகழாதே திருவடிஇணையைப்

பிறிவினை அறியா நிழலதுபோல
முன்பின் ஆகி முனியாது, அத்திசை
என்பு நைந்துஉருகி, நெக்குநெக்கு ஏங்கி
அன்பு எனும் ஆறு கரையதுபுரள
நன்புலன் ஒன்றி, நாத என்று அரற்றி
உரை தடுமாறி, உரோமஞ்சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களிகூர நுண்துளி அரும்ப

(போற்றித் திருவகவல் 59-85)

நிற்க வேண்டுமெனக் கூறியுள்ளார்:

இத்தகைய அன்புநிலையில் நின்று இறைவனை உணர்ச்சிப்பிழம்பாகக்கண்டு வணங்கும் தன்மையினாலும், சொல் என்ற வரம்பிகந்து நிற்கும் ஞான உணர்வை எட்டிப்பிடித்தமையாலும் மாணிக்கவாசகர், உலகப்பெருமறை ஞானக் கவிஞர்களுள் ஒருவராக விளங்குகின்றார். மாணிக்கவாசகரை மறைஞானக் கவிஞராகக் கொண்டு ஆராயும் பல ஆராய்ச்சிகள் உள. பாரசீக மறைஞானக் கவி றூமிக்கும், மாணிக்கவாசகருக்குமுள்ள உணர்வொற்றுமையை வான்மீகநாதன் என்பார் அழகுற எடுத்துக்காட்டுகின்றார். [14]

அன்புமார்க்கத்தை விமோசன வழியாகக்கொள்ளும் மாணிக்கவாசகர், திருமூலர் காலம்முதல் வரும் தமிழ்நாட்டு மறைஞானப் பண்பை வளப்படுத்திப் பிற்காலச் சித்தர்களுக்கு விட்டுச் செல்கின்றார். அத்துடன் திருவாசகத்தை மறைஞான இயற்றுறை அறிஞருக்கான கட்டாய பாடபுத்தகமாக்கியும் விடுகின்றார்.



14 Vanmikanathan - G - Verities of Tiruvacakam - Study of Manickavacagar & Rumi; Tamil Culture Vol: II - No. 34. p. p. 283–302. Madras. Sept. 1953.

# ஆலயம் அமைப்போம் வாரீர்....

பல்கலைக் கழகத்தில் ஓர் இந்து ஆலயம் அமைப்பதற்கு பலர் காலத்திற்குக் காலம் நாட்டம் கொண்டனர். அண்ணலின் அருள், ஈற்றில் எமக்கு எட்டியதை எண்ணி மனக்களிப்படைகிறோம். ஆலய அமைப்பே தமது நோக்கமாகக்கொண்டு, தமக்குக்கிடைத்த சொற்ப நேரத்தையெல்லாம் அதற்குத் தியாகம் செய்து, காட்டை அழித்த இளம் உள்ளங்கள் என்றுமே நம் கருத்தைவிட்டு அகலமாட்டார்கள்; அவர்கள் நம் நெஞ்சிருக்கும் வரை நினைவிலே இருப்பார்கள் என்பது உறுதி.

நாமோ மாணவர்கள்; எமது உடல் உழைப்பினைத் தருவது அவ்வளவு கடினமல்ல. ஆனால் அடுத்துத் தேவைப்படும் இரண்டு லட்ச ரூபாவுக்கு என் செய்வது? இந்நிலையில் எம்மால் சுலபமாகச் செய்யக்கூடியது என்ன?... சிறு செலவுகளையாகுதல் சமாளிக்கப் பணம் வேண்டுமே! நாங்கள் நம் நிலையை எண்ணித் திகைத்தோம். இச்சந்தர்ப்பத்திற்றான் எமது தவணை விடுமுறை கிடைத்தது. யாழ்ப்பாணத்தில் ஒரு திரைப்படத்தை எமது நிதித் தேவையைக் கருதி ஒழுங்கு செய்து எமது விடுமுறையை அதில் செலவிடவேண்டியிருந்தது. படக்காட்சியை நடாத்தி கோவில் கட்ட முடியுமா எனப் பலர் ஏளனம் செய்தனர். கோவிலின் பெயரில் கும்மாளம் போட பணம் திரட்டுகிறார்கள் என சிலர் நம்மைத் திட்டினர். என் செய்வது எல்லாம் ஆண்டவனின் படைப்புத்தானே? இத்தகைய கூற்றுக்கள் எம் உற்சாகத்தைக் குறைக்கவில்லை; மாணவர்களிற் சிலர் குறிப்பாக பொ. த. சண்முகலிங்கம், பு. சந்திரதாஸ், செ. சிவநேசன், செல்வி. இ. இராஜேஸ்வரி முதலியோர் அப்படக்காட்சிக்கு நன்றாகப் பாடுபட்டது குறிப்பிடக்கூடியதாகும். இதில் ஈட்டிய பணம்தான் ஆலயம் கட்டுவதற்காகிய நிலத்தைச் சீர்செய்ய உதவியதை யாவரும் அறிவார்கள்.

இதைத் தொடர்ந்து பேராதனையில் ஒரு நடன நிகழ்ச்சியும், கொழும்பில் ஒரு படக் காட்சியும் செல்விகள் நா. நல்லையா, வி. குணநாயகம் ஆகியோரின் உதவியுடன் நடாத்தப்பட்டன. எதிர்பார்த்ததைவிட இந் நிகழ்ச்சிகள் எமது 'ஆலய அமைப்பு' பற்றி யாவரும் அறிய நன்கு உதவின. இக்காலத்திற்றான் அப்

போதிருந்த இறுதிவருட மாணவர்களுட் சிலர் தமது விஞ்ஞான புவியியல் மண்டப முற்பணங்களைத் (Science, Geography and Hall desposits) தந்து உதவியதுமன்றித் தாம் எங்கிருந்தாலும் ஆலயத்திற்கு உதவுவதாய் வாக்களித்து விரைவில் ''ஆலய அடிக் கல்லை'' நாட்டுவதற்கு முயற்சியெடுக்கும்படி கூறி எம்மைப் பிரித்தார்கள்.

கார்த்திகைத் திங்கள் பன்னிரண்டாம் நாள் (27-11-1966) ஞாயிற்றுக்கிழமை எமது இந்து மாணவர் சங்க வரலாற்றிலே ஒரு பொன்னுள்! மேன்மைகொள் சைவநீதி விளங்க, முருகன் ஆலய அடிக்கல் நாட்டப்பட்ட நன்னுள். இத்திருநாளை கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே கொண்டாடி மகிழ்ந்தோம்; பல பெரியார்கள் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு வாழ்த்தினர். சிலர் திருப்பணி நிறைவேற்ற தாமும் உதவுவதாய் வாக்களித்து, உதவியும் செய்து வருவது எமது பாக்கியமாகும்; அவர்களின் திருத்தொண்டுகள் இடம்பெறும் அதே வேளையில் நாமும் மென் மேலும் நிதியைப் பெருக்கி விரைவில் எமது ஆலய அமைப்பினைப் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது. செல்வன். பு. சண்முகதாஸ், செல்வன் அ. ஞானசம்பந்தனைப்போல பலர் நிதி திரட்டுவதில் உத வினுர்கள். எமக்கு அன்பு சொரியவும், ஆலோசனை தரவும் எமது பெருந்தலைவரும், பெரும் பொருளாளரும் இருக்கும்போது யாது குறை? எம்பணி நற்பணி. இதைத் தொடர்வோம் வாரீர்......

வணக்கம்

அ. இராசபூபாலசிங்கம்
துணைத்தலைவர்:

# இலட்சியப் பாதையிலே.....

எமது இந்து மாணவர் சங்கம் பல்கலைக் கழகத்திலே முளைவிட்டுப் பதினேழு வருடங்கள் கடந்து விட்டன. ஆனல் கடந்த காலத்திலே சங்கம் சென்றிராத முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய பாதையிலே நாம் சங்கத்தை வழிநடத்திச் சென்றிருக்கிறோம். சங்கத்துக்கெனவோர் இலட்சிய நோக்கினை வகுத்துச் சங்க அங்கத்தவர் உள்ளத்திலே உவகையை உண்டுபண்ணிய தோடல்லாமல், ஈழமெங்கும் வாழும் இந்து உள்ளங்களிலெல்லாம் எம் சங்கத்தை நினைவுகூர வைத்து அவர்களையும் நாம் சங்கத்தின் ஆக்கபூர்வமான பணிகளில் தம்மை அர்ப்பணிக்க வழி வகுத்துவிட்டோம். புதியதோர் பாதையிலே இலட்சியத்துடிப்புடனே சங்கம் செல்வதையிட்டுப் பெருமிதமடையும் நிலை எம்மால் இன்று ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

இதுவரை காலமும் சமய விழாக்களையும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் பிரார்த்தனைக் கூட்டங்களையும் இந்து மாணவர் சங்கம் கொண்டாடி வந்தது. கலைப்பீடத்திலுள்ள (Arts Faculty) ஒரு விரிவுரை மண்டபத்திலே வழிபாடு நடாத்தப்படும். ஆசாரத்துக்கு முதலிடமும் முக்கியத்துவமும் அளிக்கும் எமது சமயம் ஆசாரம் என்பது எள்ளளவேனுமற்ற ஓர் மண்டபத்திலே, அழுக்குமயமான அறையிலே, அமைதியற்ற சுற்றுப்புறச் சூழலில் வழிபாட்டுக் கூட்டங்களை நடத்தியது. இந்நிலையினல் மனம் புழுங்கிய சங்க அங்கத்தவர்கள் ஆலயம் வேண்டும், அதுவும் முடியாவிடில் வழிபாட்டு மண்டபமாவது கட்டவேண்டும் என்று கூக்குரலிட்டபோதெல்லாம் அதைச் செவிமடுக்க யாருமே தயாராக இருக்கவில்லை.

1966-ம் ஆண்டு சங்கத்தை வழிநடத்தப் புதிய உள்ளங்கள் அதுவும் இலட்சிய உள்ளங்கள் முன்வந்தன. சங்கம் இதுவரை சென்ற பாதையில் இருந்து திசைதிருப்பப்பட்டு இலட்சியப் பாதையிலே அடியெடுத்து வைத்தது.

இலட்சியப் பாதையின் முதலடியாகப் பல்கலைக்கழக அதிகாரபீடம் எங்களுக்கு ஆலயம் அமைக்கத் தந்த அடர்காட்டை சிரமதானமூலம் நன்னிலமாக்க இளம் உள்ளங்களை அறைகூவி

அழைத்தோம். ஆண்மையும் - பெண்மையும் சிரமதானப் பணிக்குத் திரண்டன. பக்தியுணர்வுடன் ''என்செயலாவது யாதொன்றுமில்லை, எல்லாமுன்செயலே'' என்று கூறியவண்ணம் மண்வெட்டிகளையும் கோடரிகளையும் ஏந்தி சுமார் ஒருமாத காலம் உடலுழைப்பால் இறைபணி செய்தோம். ''எம் கடன் பணி செய்துகிடப்பதே'' என்ற உணர்வினால் காட்டை அழித்தோம். சென்ற வருடம் புதுவருடப்பிறப்பன்று எமது ஆலயத்துக்காக எம்மால் ஒப்புரவு செய்யப்பட்ட புனித பூமியிலே பக்தி வெள்ளம் அலைமோத மன அமைதியுடனும், ஆசாரத்துடனும் இறைவழிபாடு செய்தோம். புதுவருடத்துடன் எம்புதிய பாதையிலே ஒரு புதிய உணர்வு, புதிய ஒளி, ஆத்மீக ஒளி எம்மனக் கண்முன் தோன்றியது போன்ற உணர்வு.

பல்கலைக்கழக விடுதலைக் காலம் வந்தது. ஆலயத் திருப்பணிக்காக நிதி சேர்க்க விரைந்தோம். ஆலயத்திருப்பணிக்காக தாராளமாகவும், ஏராளமாகவும் உதவுவோம் என்று இந்துப் பெரியார்கள் பலர் முன்வந்தனர். நாமெடுக்கும் ஆர்வத்துடன் கூடிய முயற்சி ஈழத்திருநாட்டின் மூலை முடுக்கெங்கும் பரவிற்று. பத்திரிகைகள் எம்பணியைப் பாராட்டின. இன்று ஈழம் வாழ் இந்துப்பெருமக்கள் அனைவருக்குமே வாலிப உள்ளங்களில் கொழுந்துவிட்டெரியும் பக்தி ஒளியில் அளவிலாத நம்பிக்கை. தோளோடு தோள் நின்று தாமும் உழைக்கப் பெரியார்கள் பலர் முன்வந்தனர். ஆலயத்துக்கு அத்திவாரம் வெட்டும் வேலையை மாணவர்களாகிய நாமே மேற்கொண்டோம். ஓய்வு நேரங்களில் நாமெல்லாம் இறைவன் தொண்டர்களானோம். ஒரு மாத காலத்தில் அத்திவாரம் வெட்டி முடிந்தது.

கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தான்
உதித்தனனுலக முய்ய

தேவாதி தேவர்களுக்கு சூரபதுமனால் ஏற்பட்ட நீங்காத இடர்களைய ஆறுமுகப்பெருமான் உதித்த கார்த்திகைத்திருநாளில் 1966-ம் ஆண்டு கார்த்திகை மாதம் பன்னிரண்டாம் திகதியன்று (27-11-1966) ஞாயிற்றுக்கிழமை காலை 6-15 மணியளவிலுரிய சுபமுகூர்த்தத்தில் இறைவன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு ஈழத்தின் பல பாகத்திலிருந்தும் சைவப்பெரியார்கள் பலர் சமூகமளித்திருந்தனர். எமக்

குரிய இடர்களைக்கேட்டுத் தாங்கள் எல்லாவகையிலும் உதவு வதாகப் பலர் உடனடியாக உறுதி தந்தனர். அவனின்றி அணுவுமசையாது - அவன் தாழ் வணங்கவும் அவனருளின்றி முடியாது' என மணிவாசகரே கூறிவிட்டார். எம் முயற்சியிஞரம்ப காலமே தங்குதடையின்றி வெற்றிப்பாதையில் செல்வது இறைவனருள் ஒளி எமக்குக்கிட்டிவிட்டது என்பதை உணர்த்துகிறது.

நாம் நடாத்தும் இந்த இறைவன் பணிக்கு எமக்கு உள்ளும் புறமும் உதவுபவர்கள், உதவியவர்கள் இறைவனின் அருளுக்குப் பாத்திரமாகவேண்டும். அந்தவகையில் சிரமதானப் பணியிலிருந்து ஆரம்பித்து இறைவன் பணிக்கு தம்மை அர்ப்பணித்து, ஆலயம் அமைக்கும் ஆவலுடன் தம்பொன்ஞன நேரத்தின் பெரும் பகுதியை எம்முயற்சிக்காகச் செலவிட்ட (மாணவ மாணவிகள்) வாலிபத் தொண்டர்கள் இறைவன் அருட்கண்ணைவிட்டு அகல முடியாது. சதாகாலமும் ஆலயத் திருப்பணிக்கான ஆலோசனைகளும் பேருதவிகளும் புரிந்து தன்னையே அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறுர், வேதாகமத்தின் தந்தை உயர்திரு கைலாசநாதக் குருக்கள் அவர்கள். பல்கலைக் கழகத்தின் உள்ளிருந்து உதவும் கைலாசநாதக் குருக்களைப் போலவே மேலும் திரு. டி. யோகரத்தினம் (விவசாயப் பொருளியல் விரிவுரையாளர்) அவர்களும் திரு. சி. முருகவேள் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆலயத்திருப்பணியின் ஆரம்பகாலந்தொட்டு ஆலயம் முழு உருவம் பெறும்வரை எங்களுடன் கூடவிருந்து தொண்டாற்று வதற்கு தி. த. சிவலிங்கம் என்ற சைவப்பெரியார் முன்வந்துள்ளார்.

இறைவன் எங்களுக்கு உதவுவதற்கென்றே அனுப்பிய ஒரு தொண்டன்போல சதாகாலமும் ஆர்வத்துடன் அவர் பணிபுரிகிறுர். இதேவரிசையைச் சேர்ந்த மற்றேர் தொண்டர் இலங்கை தேசிய வங்கியைச்சேர்ந்த திரு. கனகராசா அவர்களாகும்.

இவ்வுலகில் சைவமும் தமிழும் உள்ளவரை எமது சங்கத்தின் பெயரும் மறையாத புகழுடன் விளங்கத்தக்க நிலை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. தமிழ்த் தெய்வமான முருகன் பெருமை கூறும் சைவப்பெருமக்களின் கண்போன்றதுமான கந்தபுராணத்தின் தக்ஷகாண்டத்திற்கு பண்டிதமணி அவர்கள் நல்லுரை செய்து அதை வெளியிடும் பெரும் பேற்றை எமது சங்கத்துக்கு அளித்தார். தைப்பூசத்திருநாளன்று இந்த இனிய பேருரை வெளியீட்டிற்குப் பேராதனையே பெரு 'விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்த மாபெரும் தொண்டினைச் செய்து, எம்சங்கத்

தையும் பெருமைக்குள்ளாக்கிய பண்டிதமணியவர்கள் மேன்மேலும் பலகாலம் வாழ்ந்து இறைவன் பணி செய்ய எல்லாம் வல்ல முருகன் அருள்வானுக.

ஆலயம்! ஆலயம்! என்று கனவுலகில் இதுவரை சஞ்சரித்த நாம் ஆலய ஆரம்ப வேலைகளைக் காணும்போது மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கின்ருேம். எடுத்த நற்கருமம் விரைவில் இனிதே முற்றுப்பெற இடைவிடாது இறைவன் திருநாமங்களை வாழ்த்துவோமாக. மேன்மேலும் ஆக்கபூர்வமான நற்பணிகளை ஏற்று இந்து மாணவர் சங்கமானது இனிதே தழைத்தோங்குக.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

கு. சண்முகநாதன்
செயலாளர்

---

# நன்றி....

மலரைச் சிறந்த முறையில் வெளியிடுவதற்குத் தேவையான உதவிகளும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் தந்துதவிய மதிப்பிற்குரிய விரிவுரையாளர்கள் கோ. சுந்தரமூர்த்தி M. A; கலாநிதி. கா. கைலாசபதி, கலாநிதி. கா. இந்திரபாலா, எஸ். நாகேந்திரன் ஆகியோருக்கு எமது உளம் கனிந்த நன்றி;

விளம்பரம் சேர்ப்பதில் உறுதுணையாக இருந்து இம்மலரைச் சிறப்புடன் வெளிக்கொணர அயராது உழைத்த நண்பர்களான நா. பாலச்சந்திரன், த. சுப்பிரமணியம், செ. கணேசலிங்கம், செ. ஆறுமுகராசா, ஆ. தருமராசா, கே. குமாரசாமி சர்மா ஆகியோருக்கும் எமது மனம் கனிந்த நன்றி.

தக்க சமயத்தில் கட்டுரைகள் தந்துதவிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கா. சிவத்தம்பி M. A. ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்;

விளம்பரம் கேட்டுச் சென்றபோது மனங்கோணுது விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும் இம்மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த 'செய்தி' அச்சகத்தாருக்கும், தொழிலாள நண்பர்களுக்கும் குறிப்பாக வி. இராமசாமி, ஐ. வரதராசன், கு. இராமச்சந்திரன் ஆகியோருக்கும் எமது நன்றி.

— ஆசிரியர்

# எல்லாவித அச்சு வேலைகளும்

* சிறந்த முறையில்
* குறித்த நேரத்தில்
* குறைந்த விலையில்

செய்து தரப்படும்.

*

# செய்தி அச்சகம்

241, கொழும்பு வீதி, கண்டி

தொலைபேசி: 7281

# ROJAH STORES

IMPORTERS AND DEALERS

IN

BEEDI, TOBACCO, BEEDI LEAVES AND

BEEDI MANUFACTUERS AND

DISTRIBUTORS OF

## A. J. BEEDI SPECIAL &

## ROJAH CIGARS

47, WOLFENDHAL STREET,

**COLOMBO-13**

*Telephone:* **5148** *Telegrams*: **'ROJAH**

உங்களுக்குத் தேவையான சகல

★ "பேச்சின்ஸ்" டீசல் கடல், கமத்தொழில் மற்றும் வாகன இயந்திரங்களும், உதிரிப்பாகங்களும்

★ இலங்கையின் ஜேர்மன் எஞ்சினியரால் தயாரிக்கப்படும் ரேடியேட்டர்களும், சைலன்சர்களும்,

★ வோக்ஸ்வாகன் கார்களின் உதிரிப்பாகங்களும்

★ பி. எம். சி. லொறி உதிரிப்பாகங்களும்

வரவழைத்துக் கொடுக்கின்றூர்கள்.

உண்மைக்கும், உறுதிக்கும்
உத்தரவாதமளிக்கின்றேம்.

சமுத்திரா திரேட்ஸ் லிமிட்டெட்

23/2, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



மோட்டார் வாகன—யந்திரங்களுக்கு!

"கிரங்சாவ்ற்" வெட்டுதல்

"றிபோறிங்" செய்தல்

மற்றும் வால்வ்சீற், வால்பேஸ்,

புதுப்பித்தல், முதலான வேலைகள்

ஆரம்பிக்கும் நன்னுளை எதிர்பாருங்கள்!

★

ராமகிருஷ்ணுஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 7179 தந்தி:- 'குருதேவ்'

**IF IT'S AN EXPRESS JOB**

*And if you*

**ARE PRESSED FOR THE TIME**

*Call at*

# Nehru Press

*We Excute Elegant Printing*

282, Wolfendhal Street, COLOMBO.

DIAL: 5588

**கண்கவரும்
படங்களுக்கு**

வட இலங்கையில்
சிறந்த இடம்

**செல்லம்ஸ்**

ஆர்ட்டிஸ்ட்ஸ்

&

போட்டோ கிராபர்ஸ்

★

94, 96, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 436

*Space*

*Donated*

*by*

**Mailvagana Stores**

No. 59, Madawala Road

**KATUGASTOTA**

# 'லேடன்' LEYDEN

தயாரிப்புகள்:

- ✱ பெனியன்கள்
- ✱ ஸ்போட் சேட்டுகள்
- ✱ ரி சேட்டுகள்
- ✱ கால் மேசுகள்

**(Cotton & Nylon)**
**Plain and Design**

## லேடன் இண்டஸ்றீஸ் லிமிட்டெட்

7, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.



## We Solicit Your Enquiries For:

- PLANTATION TOOLS
- BUILDING MATERIALS
- SANITARY FIXTURES
- WATER SERVICE MATERIALS
- PAINTS & DISTEMPER
- ELECTRICAL ACCESSORIES
- GENERAL HARDWARE

# ESTATE SUPPLIES CORPORATION Ltd.

RELIABLE HOUSE FOR HARDWARE IN UP-COUNTRY

Phone: 448 KANDY. Grams: 'ESCO'




**எவரெடி**
**பிளாஷ் லைட்டுகள்**

இலங்கை முழுவதிலு முள்ள எவரெடி விற்பனையாளர்களிடம் இப்பொழுது கையிருப்பில் உண்டு. நேர காலத்தோடு இவர்களிடம் போய், உங்களுக்குத் தேவை யானவற்றைப் பதிவ செய்துகொள்ளவும்.

EVR/8/65/MAS

# வல்லை நெசவினங்கள்

**வாங்குங்கள் !**

- ★ தரத்திலும்
- ★ சொகுசிலும்
- ★ சிக்கனத்திலும்
- ★ நீண்ட நாட் பாவிப்பிலும்
- ★ விரும்பிய நிறத்திலும்

- ★ துவாய்கள்
- ★ படுக்கை விரிப்புகள்
- ★ சேலைகள்
- ★ வேட்டி சால்வைகள்
- ★ கைத்துடைப்பங்கள்

கெட்டியான சாயங்கள் தனியார் துறைக்கு
போட்டுக் கொடுக்கப்படும்

தயாரிப்பாளர்:

**இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை (வரையறை) ஸ்தாபனம்**

வல்லை - உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

# VALLAI PRODUCTS

*Please buy!*

**OUR LATEST PRODUCTS:**

- ★ TOUKISH TOWELS
- ★ BEDSHEETS
- ★ VETTIES
- ★ SHAWLS
- ★ SAREES
- ★ NAPKINS

**FAST COLOUR DYEING FOR PRIVATE
WILL BE UNDER TAKEN**

*Producers:*

**Ceylon Spinning & Textiles Mills Ltd.**

Vallai - Uduppiddy,
Valvettiturai



இச்சஞ்சிகை கொக்குவில் திரு. கே. வி. சிவநேசன் அவர்களால்
கண்டி 'செய்தி' அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.